கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(21.05.2017 - 21 வைகாசி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 160, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

ஞான ஒளி

ඥාන ඕලි

GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



புனித மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்தித்தல்

வைகாசி 31

# ஐக்கிய நாடுகளின் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச ரீதியான வெசாக் விழா







ஐக்கிய நாடுகளின் மன்றத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட சர்வதேச ரீதியான வெசாக் விழா மிகச் சிறப்பான முறையில் இலங்கையில் நடைபெற்றது.

இந்தியப் பிரதமர் திரு மஹேந்திர மோடி மற்றும் இலங்கை மேதகு ஜனாதிபதி திரு. மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இவ்வெசாக் கொண்டாட்டத்தின் பிரதான நிகழ்வுகள், கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கத்தோலிக்க திருச்சபையின் மதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்து. கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஓய்வு பெற்ற பேராயர் அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை அவர்களுடன் ஏனைய மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். 15

## இலங்கை தேசிய கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் அலுவலகத்தின் உத்தியோக பூர்வ அறிவித்தல்



இலங்கை நீதி சமாதானம் மற்றும் மனித அபிவிருத்தியின் கத்தோலிக்க ஆணைக்குழுவின் - (கறிட்டாஸ்) புதிய தேசிய இயக்குனர் :-

முன்னாள் கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனராகவும், ஆங்கில "மெசஞ்சர்" பத்திரிக்-கையின் ஆசிரியருமாய் பணியாற்றிவந்த அருட்திரு எம். எவ். மகேந்திரா டி. குணதிலக்க அடிகளார் மேற்படி தேசிய ஆணைக்குழுவின் இயக்குனராக, 04.05.2017ல் நியமனம் பெற்றுள்ளார்.



இலங்கை தேசிய கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்-தினால் அருட்பணி ரோய் கிளரன்ஸ் அடிகளார் புனித வின்சன் டி போல் சபையின் தேசிய ஆன்மீக இயக்குனராக 04.05.207 நியமனம் பெற்றுள்ளார்.

✠ மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## பாத்திமா திருத்தலத்தில்

## நூற்றாண்டு விழா திருப்பலி



போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா என்ற ஊரிலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திலுள்ள கோவா த இரியா என்ற இடத்தில், 1917ம் ஆண்டு வைகாசி 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, லூசியா, பிரான்சிஸ்கோ, ஜசிந்தா ஆகிய மூன்று சிறாரும், ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த வேளை அன்னை மரியா அச்சிறார்களுக்கு முதல் முறையாக காட்சியளித்தார். இக்காட்சி நடைபெற்ற நூற்றாண்டு பெருவிழா... 15

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் புதிய நிதிப்பொறுப்பாளர்



15

## ஆயர்த்துவ வாழ்வில்

### 40 ஆண்டுகள் நிறைவில் வாழ்த்துகிறோம்



15

**எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர் (திபா 47)**



# தேசிய பொதுநிலையினர் ஞாயிறும் புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் சாட்சியமும்

மேதகு ஆயர் நோபர்ட் M அந்திராதி (O.M.I)
ஆண்டகை.
தேசிய பொதுநிலையினர் ஆணைக்குழு தலைவர்.

தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினத்தை முன்னிட்டு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொதுநிலையினரின் அப்போஸ்தலிக்கப் பணியைப் பற்றிய கருத்தை சற்று ஆராய்வோம்.

ஒவ்வொரு பொதுநிலையினரும் தாம் திருமுழுக்கினூடாகப் பெற்றுக்கொண்ட அழைத்தலுக்கேற்ப தங்கள் குருக்களோடு இணைந்து இறையரசைக் கட்டியெழுப்பி கிறிஸ்துவின் நற்செய்திக்கு சான்று பகர்ந்திட முதன் முதலாக திருச்சபைக்குள் அழைக்கப்பட்டுள்ளனர். இது எமக்கு கொடுக்கப்பட்ட கடமையும் ஒத்துப் பணிபுரியவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று பொதுநிலையினர் சாட்சிய வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ளனர். குருக்கள் துறவறத்தோரை விட இவர்களுடைய சாட்சிய வாழ்வு கிறிஸ்தவ விசுவாசத்தையும், சமத்துவம் நிலவ பண்ணும் வகையில் தங்களிடம் ஒப்படைத்த பணியை நேர்மையாக புரிந்து அமைதியான ஒரு சமூகத்தை கட்டியெழுப்பக் கூடிய வகையில் அவர்கள் தங்கள் பொறுப்புக்களை செய்து வருகின்றனர்.

பொதுநிலையினர்களுடைய அப்போஸ்தலிக்க பணி பற்றி சிந்திக்கையில் இன்று எங்களுக்கு கொடுக்கப்பட்ட மிகப்பெரிய பொறுப்பான கடமை மனித மாண்பை பாதுகாக்கவும் விஷேடமாக எங்களுடைய பிள்ளைகள் மீது அக்கறை காட்டவும் அழைக்கப்பட்டுள்ளோம்.

இன்று சிறுவர்கள் உளவியல் நல்லொழுக்கம் போன்ற ஆபத்தான சூழ்நிலைகளுக்கு சவால் கொடுக்கின்றனர். இவர்கள் இல்லாமல் எதிர்காலத்தை பற்றி நாம் எதையும் கருத்தில் கொள்ள முடியாது. எத்தனையோ சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையை தொலைத்துவிட்டனர். இவ்வாறான சூழ்நிலையில் பொதுநிலையினர்களாக சிறுவர்களுக்கு வழிகாட்ட கடமைப்பட்டுள்ளோம்.

தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினத்தை சிறப்பிக்கும் இந்த ஆண்டில் நாம் புனிதராம் யோசேவ்வாஸ் அடிகளாரின் விசுவாச வாழ்வையும், சாதாரண பொதுநிலையினராக இருந்து தன் கடமைகளிலும் பொறுப்புக்களிலும் பல்வேறு துன்பங்களை தாங்கி அமைதியாக அர்ப்பணித்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஏழை மக்களோடு மக்களாக இருந்து இயேசுவைப் பற்றி நற்கருணை மூலம் அம்மக்களை விசுவாசத்தில் ஆழப்படுத்தினார். தான் சென்ற இடங்களை எல்லாம் சிறு கிறிஸ்தவ குழுக்களை உருவாக்கி அவர்களை புனித வாழ்வு வாழ ஊக்கப்படுத்தினார்.

இன்று எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் இதையே வலியுறுத்துகின்றார். ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பங்களும் எமது கிறிஸ்தவ விசுவாசத்தை கட்டியெழுப்ப கடமைப்பட்டுள்ளோம். ஒரே குடும்பமாக செபிக்கவும், எமது தேவைகளுக்காகவும் பிறரது தேவைகளுக்காக வேண்டுவதோடு இறைவனுடைய பிரசன்னத்தில் ஒரு சில வினாடி நாம் அமர அழைக்கப்பட்டுள்ளோம். அன்னை மரியாளின் பாதுகாப்பையும் பரிந்துரையையும் வேண்டுவோம். இதன் மூலம் எங்கள் குடும்பங்களில் நன்மையை தேடுவோம்.

இலங்கை அப்போஸ்தலராம் புனித யோசேவ்வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வருடத்தில் நாமும் அவருடைய வாழ்க்கைப் படிகளை எம் வாழ்வில் பின்பற்றவும் வழிகாட்டியாக எம் பணியில் அவரது புனித வாழ்வை பின்பற்றுவோம்.

## கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் இளைஞர் அப்போஸ்தலிக்க மறைப்பணியின் புதிய நிர்வாக அமைப்பு

இதுவரைகாலமும் இயங்கி வந்த இப்பணியகத்தின் செயற்குழு ஜீன் மாதத்துடன் கலைக்கப்படவுள்ளது. புதிய நிர்வாக அமைப்பு புதிய வடிவத்துடன் உருவாக்கப்படவுள்ளது. கொழும்பு மறைமாவட்டத்தில் 40 பங்குகளில் தமிழ் திருப்பலி நடைபெற்றாலும் 20 பங்குகளில் மாத்திரமே இளைஞர் குழுக்கள் இயங்கிவருகின்றன.

புதிய மறைமாவட்ட இளைஞர் நிர்வாக அமைப்பின் தலைமைத்துவமானது ஏதேனும் ஓர் பங்கின் இளைஞர் குழுவிடம் ஒருவருட காலத்திற்கு ஒப்படைக்கப்படவுள்ளது. விரும்பிய ஓர் இளைஞர் குழு இத்தலைமைத்துவப் பொறுப்பை ஏற்க முன்வரலாம். ஜீன் மாதம் நடைபெறும் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் அடுத்த ஓர் வருடத்துக்கான தலைமைப் பொறுப்பானது வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்படும் ஓர் பங்கின் இளைஞர் குழுவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. தலைமைத்துவத்தை பொறுப்பேற்க விரும்பும் இளைஞர் குழுக்கள் அதற்கு தயாராக வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஆயர், குருக்கள் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தின் இடம், நாள், நேரம் ஒவ்வோர் இளைஞர் குழுக்களுக்கும் தனிப்பட்ட விதத்தில் அறிவிக்கப்படும்.

**தகவல் : அருட்தந்தை. ஆனந்தன் பெர்னான்டோபுள்ளே**
**இயக்குனர், கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் இளைஞர் அப்போஸ்தலிக்க மறைப்பணி**

## இறைபதம் அடைந்தார்.



கடந்த 03.05.2017 அன்று அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை டட்லி பெரேரா அவர்கள் இறைவனடி சேர்ந்தார். இவர் ஒரு பேராசிரியராக கடந்த 35 வருடம் கண்டி தேசிய குருமடத்தில் பணியாற்றியவர். அருட்தந்தை அவர்கள் 1964ம் ஆண்டு உரேமா புரியில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர். இவர் புனித மரியாள் கல்லூரி, (நாவலப்பிட்டிய), புனித சூசையப்பர் கல்லூரி, (கொழும்பு) பாடசாலைகளின் பழைய மாணவரும் ஆவார். இவரது நல்லடக்கம் பொரளை சேமக்காலையில் 05.05.2017 அன்று இடம்பெற்றது.

### சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சின்

## கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்

### ஒழுங்கு செய்யும்

# குறு நாடக போட்டி – 2017

இம்முறை புதிய வடிவத்தில்... கிறிஸ்தவர்களாகிய நீங்களும் பங்குபற்றுவதற்கான ஒரு அரிய வாய்ப்பு....

**தலைப்பு : தமது வாழ்வால் கிறிஸ்தவ விழுமியங்களை உலகத்திற்கு பகிர்ந்தளித்த புனித யோசேவ்வாஸ் முனிவர்....**

❖ கத்தோலிக்க மற்றும் தேசிய கிறிஸ்தவ சபையில் அங்கம் வகிக்கின்ற கிறிஸ்தவ சபையினர் இதில் பங்கேற்கலாம்.

❖ உங்களது பாடசாலையில், மறைக்கல்வி பாடசாலையில், தேவாலயத்தில், குருமடத்தில் அல்லது இளைஞர் கிறிஸ்தவ மாணவ இயக்கத்தில், இளைஞர் சபையில் அல்லது அத்தகைய எந்தவொரு நிறுவனத்தில், சங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் ஒரு குழுவாக இப்போட்டியில் பங்குபற்றலாம்.


❖ ஒவ்வொரு மொழி மூலமும் சிறந்த நாடகப் பிரதி, சிறந்த நாடகம், சிறந்த நடிகன், சிறந்த நடிகை, சிறந்த துணை நடிகன், சிறந்த துணை நடிகை, சிறந்த ஒப்பனை, சிறந்த மேடை அலங்காரம், சிறந்த இசை, சிறந்த உடையலங்காரம், விசேட மதிப்பீட்டு திறமை என்பனவற்றிற்கு பெறுமதியான பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

❖ மேடையேற்றப்படும் அனைத்து நாடகங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**போட்டி தொடர்பான விபரங்கள்...**

- சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தாம் விரும்பிய மொழியில் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
- ஒருவர் மூன்று மொழிகளிலும் பங்குபற்றலாம். எனினும் ஒரு மொழியில் ஒரு நாடகத்தில் மட்டுமே பங்குபற்ற முடியும். (கவனிக்க : மூன்று மொழிகளிலுமான நாடகப் போட்டிகள் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் மூன்று வெவ்வேறு இடங்களில் இடம்பெறுவதால் ஒருவர் மூன்று மொழிகளிலும் போட்டியிடுவதன் காரணமாக அக்குழுக்கள் நடைமுறை ரீதியாக பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியேற்படும். அவ்வாறு ஏற்படுகின்ற சிக்கல்களுக்கு திணைக்களம் பொறுப்புடையதாகாது).
- திறமைகளைக் காட்டி வெற்றியடைகின்ற நாடகப் பிரதிகளுக்கு நாடகப் போட்டிகள் நடாத்தப்படும்.
- நாடகப் போட்டிகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட குழுக்களுக்கு நாடகக்கலை தொடர்பான செயலமர்வுகளை நடாத்த எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்நாடகப் பிரதிகள் அல்லது நாடகங்கள் இதற்கு முன்னர் எந்தவொரு போட்டியிலும் வெற்றியடைந்ததாக இருக்கக்கூடாது.
- போட்டி தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் போட்டி விதிமுறைகள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உங்களது...

➲ தொடர்ச்சி 15ம் பக்கம் ➲



## புனித சூசையப்பர் திருவிழா



மத்துகமை குயில்கா தோட்டத்தில் வழிபாடுகளுக்காக தோட்ட நிர்வாகத்தினால் கொடுக்கப்பட்ட சிறிய நிலப்பரப்பு அமைக்கப்பட்ட சிற்றாலயமானது புனித சூசையப்பருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு முதலாவது திருநாள் திருவிழா வைகாசி மாதம் 1ம் திகதி தொழிலாளர் தினத்தன்று அருட்தந்தை ரெக்கஸ் கொன்சன்ஸ்டைன் (CMI) அடிகளாரின் தலைமையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**தகவல் : அருட்சகோதரி. மேரியஸ்**





ஹெரனை ஹொக்கோன தோட்டத்தின் வருடாந்த திருவிழா வைகாசி மாதம் 8ந் திகதி அருட்தந்தை மில்வர் வாஸ் (CMI) அடிகளாரின் தலைமையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**தகவல் : அருட்சகோதரி. ஜெசிந்தா**

## உதவிப்பங்குத் தந்தைக்கு நன்றி நவில்தல்







புனித லோரன்ஸ் பங்கு அனைத்து குடும்பங்கள் சார்பாக எமது பங்கின் உதவிப்பங்குதந்தை அருட்பணி சாகிக்க மனோஜ் ரொட்றிக்கோ அவர்களுக்கு நன்றி நவில்கின்றோம். தனது குருத்துவத்தின் பின்பு உதவிப்பங்குத் தந்தையாக புனித லோரன்ஸ் பங்கிற்கு பணியாற்றி இப்பொழுது இடமாற்றம் பெற்று செல்லவிருக்கும் எம் அன்பு...

➲ தொடர்ச்சி 15ம் பக்கம் ➲

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
21 வைகாசி 2017 ஞாயிற்றுக்கிழமை.

## மரியாவின் நம்பிக்கையை நமதாக்கிட வேண்டும், மரியாவின் பண்புகளை நமதாக்கிட வேண்டும், மரியாவின் பணிகளை நமது வாழ்வில் தொடர்ந்திட வேண்டும்.

நல்லாரை வாழ்த்தி வணங்குவதும் பெரியோரை போற்றி புகழ்வதும் மனிதரின் பொதுவான செயற்பாடாகும். அந்தவகையில் நம் ஆண்டவரின் தாய் அன்னை மரியாவை வாழ்த்தி வணங்கவும், போற்றி புகழவும் திருஅவையால் தரப்பட்டிருப்பதுதான் மரியன்னையின் வணக்க மாதம். அன்னையின் வாழ்வை எடுத்துக் கொண்டால் அன்னையின் வாழ்வு முழுவதும் துன்பம் நிறைந்ததாகத்தான் இருந்தது. மனித குலம் முழுவதும் நிறைவாக வாழ வேண்டும் எனும் இறைவனது விருப்பத்தை திட்டத்தை நிறைவேற்ற தன்னையும் தனது ஒரே அன்பு மகனையும் எமக்காக அர்ப்பணித்தவர். இந்த தெய்வீகத் தாயை வணக்க மாதத்தில் மட்டுமல்ல மாறாக வாழ்நாள் முழுவதும் ஏன் எம் மூச்சு உள்ளவரையிலும் வணங்க வேண்டியது எமது கடமையும் சிறப்பானதுமாகும். மரியா வணக்கத்திற்குரியவர் என்று திருவிவிலியமே எமக்கு பல இடங்களில் பறைசாற்றுகிறது. "அருள் மிகப் பெற்றவரே வாழ்க" என்ற வானதூதரின் வாழ்த்தொலி (லூக்கா 1:28) "பெண்களுக்குள் நீர் ஆசிப் பெற்றவர்" என்ற எலிசபெத்தின் வாழ்த்தொலி (லூக்கா 1:42) "உம்மை கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" (லூக்கா 11:27) என்ற ஒரு பெண்ணின் வாழ்த்தொலி. ஆனால் இயேசு இவ்வாறு கூறுகின்றார் "இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" என்று கூறி, அன்னை மரியா இறைசித்தத்திற்கு கீழ்ப்படிந்ததால் இன்னும் ஒருபடி மேலே சென்று சீடத்துவத்திற்கு உதாரணமாக திகழ்கின்றார் என்று கூறுகின்றார்.

இதனால்தான் அன்று தொடக்கம் இன்றுவரையில் திருஅவையானது அன்னை மரியாவை வாழ்த்தி வணங்கி அவர் மூலம் பல இறைவரங்களை கேட்டும் பெற்றும் வருகின்றது. இதனால்தான் அன்னை மரியாவை நோக்கி "அன்னையே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்று நாம் வேண்டுகின்றோம். "மிகவும் இரக்கமுள்ள அன்னையே! உமது அடைக்கலம் தேடி வந்துள்ளோம்"... எனும் அன்னையின் மன்றாட்டு மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் அன்னையின் பக்தர்களால் கூறப்பட்டு வருகின்றது. இதனையே அன்னை மரியா "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" என்று இறைவாக்காக கூறியுள்ளார். இறை நம்பிக்கையும் அன்பும் அன்னையின் உள்ளத்தில் நிறைந்திருந்தன. அதனால்தான் அன்னை அருள் மிகுந்தவராக விளங்கினார். மரியா வணக்கத்தின் உண்மை பொருள் மரியாவிற்கு கோலாகலமாக விழா எடுப்பதோ, புதுப்புது உருவங்களை தெருவழியே அமைப்பதோ, அன்னையை நகைகளால் பட்டுப்புடவைகளால் அழகுப்படுத்தி பார்ப்பதோ, நேர்ச்சைகளை வாரி வழங்குவதோ அல்ல மாறாக மரியாவின் நம்பிக்கையை நமதாக்கிட வேண்டும், மரியாவின் பண்புகளை நமதாக்கிட வேண்டும், மரியாவின் பணிகளை நமது வாழ்வில் தொடர்ந்திட வேண்டும். அப்போதுதான் நாமும் இயேசுவின் சீடர்களாக வாழ்ந்திடுவோம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# ஆண்டவரின் விண்ணேற்பு



### ஆண்டவரின் மகிமையிலே பங்குக்கொண்டு மகிழ்ச்சியின் தூதர்களாக இருப்போம்.

இயேசுவின் விண்ணேற்புத் திருவிழா. விண்ணேற்பு திருவிழா என்றால் கிறிஸ்து தந்தையால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டார், மகிமைப் -படுத்தப்பட்டார் என்பதன் தெளிவான அடையாளம். கிறிஸ்து இவ்வாறு அடைந்த மகிமை திடீரென அவருக்கு ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியல்ல. இயேசு தன் வாழ்வு முழுவதும் ***'தந்தையே என் விருப்பமல்ல, உம் சித்தமே ஆகட்டும்'*** என்று வாழ்ந்தவர். ***வாழ்வின் இறுதியில் தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்'*** என்றார். இவ்வாறு வாழ்ந்த இயேசுவை தந்தை முழுமையாக ஏற்று மகிமைப்படுத்தினார். தன் வலப்பக்கத்தில் அமரச் செய்தார். இதுதான் விண்ணேற்பு. தலையாகிய இயேசு பெற்ற மகிமைக்கே அவரது உடலாகிய நாமும் அழைக்கப்படுகின்றோம். இயேசுவைப்போல எம் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ***"உம் சித்தம் ஆகட்டும்'*** என்று வாழ்ந்து உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன். என்போமா-னால் நாமும் நிச்சயமாக தந்தையினால் மகிமைப்படுத்தப்படுவோம்.

இயேசுவின் விண்ணேற்பு அவரது வாழ்க்-கையின் ஒரு திருப்பு முனையாகிறது. அவர் போனால் தான் இறையரசு என்றால் என்ன என்று அவர்களுக்கு விளங்கும். அதைப் பரிசுத்த ஆவியானவர் விளக்குவார். இயேசு இருக்கும் மட்டும் ***'நீர் எப்போது இறையரசை நிறுவுவீர்?*** என்று சீடர்கள் கேட்டுக்கொண்டே இருப்பார்கள். அவர் போனால் இக்கேள்விக்கு இடமிராது படிப்படியாக பரிசுத்த ஆவியின் வருகையும், திருச்சபையின் வளர்ச்சியும் எமக்கு விளங்கும்.

இயேசுவின் விண்ணேற்பு அவர் தந்தை -யிடம் செல்லும் இறுதிப்பயணம் ***'உலகம் முடியும் வரை உங்களோடு நான் இருப்பேன்'*** என்று இயேசு கூறுகின்றார். இயேசு இருப்பது போலவும், போவது போலவும், இருக்கின்ற ஒரு அசைவு நிலையில் தான் (Tension) நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். விண்ணேற்பின் மூலம் அவர் போவது போல் உள்ளது. அப்போதுதான் தூய ஆவி அவரது பணியை பொறுப்பேற்றுத் தொடருவார்.

நீர் எப்பொழுது இறையரசை நிறுவுவீர்? என்ற கேள்வி இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இன்று எல்லோரும், தெளிவான அடையாளங்களைக் காண விரும்புவார்கள். நிறுவனங்கள், பணம், அதிகாரம், இவைகள் தான் இறையரசை கட்டியெழுப்புகின்றன என்று நாங்கள் நினைக்கின்றோம்.

தெளிவான அடையாளங்களைக் காண வேண்டும் என்று நினைக்கும் அனைவருக்கும் அது ஒரு தொடர் சோதனை.

இயேசுவோடு உயிர்த்தும், மேலுலகைச் சாராதவர்களாக தூய ஆவி ஏற்படுத்தும் இறைத்திட்டத்துக்குள் வர மனமில்லாதவர்களாக இருக்கின்றோம். எனவே, இயேசுவின் விண்ணேற்பு அவரது பொறுப்புக்கள் அனைத்தும் தூய ஆவியிடமும் அவருடன் சேர்ந்து பணியாற்றும் அனைவரிடமும் ஒப்படைக்கப்படுகின்றது. தூய ஆவியின் திட்டத்திற்கும், எமது செயற்பாட்டிற்கும், இடையிலான அசைவு நிலை (Tension) எமது தனிப்பட்ட வாழ்விலும், தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. எதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். என்பதே மிக முக்கியம். எனவே நாம் ஒவ்வொருவரும், நம் ஒவ்வொரு செயற்பாட்டாலும், இறைத்திட்டத்திற்குள் வந்து தூய ஆவியோடு இணைந்து இறையரசை மலரச் செய்யும் பணியாளர்களாக செயற்பட அழைக்கப்படுகின்றோம்.

**ஆக்கம் :**
**அருட்தந்தை ரெஜிஸ் இராசநாயகம்**

## உண்மை உறைக்கும் கமிலஸ்



# மரியாவின் வழியில் பொது நிலையினரின் வாழ்வு



**அன்னை மரியாளைப்போல் எல்லாப் பொதுநிலையினரும் தங்களின் அன்றாட வாழ்வில், திருவிவிலியத்தின் அடிப்படையில், இறைவனின் திருவுளத்தை தெளிந்து, தேர்ந்து நிறைவேற்றினால் அவர்கள் இறைவனுக்கேற்ற குழந்தைகளாகிவிடுவர்.**

**ஏழைகளாகப் பிறந்து, ஏழ்மையில் வளர்ந்து, ஏழ்மையில் இறைவனின் மீட்புப் பணியை முழுமையாகச் செய்து நிறைவு பெற்ற அன்னை மரியாள் ஏழைப் பெதுநிலையினரின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் சிறந்தோர் வழிகாட்டி...**

மே மாதம் முழுவதும் அன்னை மரியாவுக்கென கொண்டாட்டங்களும், சிறப்புத் திருப்பலிகளிலும் நிறைவேற்றப்படுவதோடு, கிராமங்களில் மற்றும் நகரங்களில் அன்னைக்கென்று பல மண்டகப்படிகள் கொண்டாடப்பட்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கிக் கொண்டாடுகிறார்கள் கிறிஸ்தவ சகோதர சகோதரிகள். தங்களின் வாழ்வை அர்த்தமுள்ள வகையில் வாழ விரும்பும் அவர்கள் தங்களின் வாழ்வுக்குகந்த ஒருவரை தமது முன்மாதிரிகையாகக் கொண்டு வாழ விரும்புகின்றார்கள்.

திருச்சபையின் பொதுநிலையினர் தங்களின் புரட்சிகர வாழ்வில் பல புனிதர்களையும் மற்றும் பலவிதமான தலைவர்களையும் முன்மாதிரிகையாகக் கொண்டிருப்பினும், அவர்கள் அன்னை மரியாவின் மாதிரிகைக்கு தங்களின் வாழ்வில் சிறப்பானதொரு இடத்தைத் தந்துள்ளார்கள்.

அத்தோடு இம்மாதம் 14ஆம் திகதி திருச்சபை பொதுநிலையினர் ஞாயிறு தினத்தையும் கொண்டாடியது. பொதுநிலையினரின் பணிவாழ்வு அமைய வேண்டுமென அறிந்து கொள்ள மரியன்னையின் வாழ்வு என்ற தலைப்பில் சிந்திப்போம்.

## நம்பிக்கையில்...

அன்னை மரியாள் “நம்பிக்கை கொண்டோரின் தாய்” என்பதைத் “திருச்சபை” என்ற கொள்கைத் திரட்டில் நாம் வாசிக்கின்றோம் (தி.61). யானைக்குச் சக்தி அதன் தும்பிக்கையில் மனிதருக்கும் சக்தியெல்லாம் அவர் நமபிக்கையில்தான். இதை தன்னம்பிக்கை, பிறர் நம்பிக்கை, இயற்கையில் நம்பிக்கை, இவற்றிற்கெல்லாம் மேலாக இறைவனில் நம்பிக்கை கொள்வார் என்று கூறுவார்.

இறை நம்பிக்கை கொண்ட மரியாள் தனது வாழ்வின் ஒவ்வோர் அசைவையும், ஒவ்வொரு நிகழ்வையும் இறைவனில் கண்டு, அவரை நம்பி வாழ்ந்தவர். இதனால்தான் அவர் தனது வாழ்வின் அர்த்தத்தையும், முழுமையையும், நிறைவையும் கண்டார். இறைமக்களாகிய பொதுநிலையினர் (தி 30), ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் மரியாவைப் போல இறைவனைப் சிக்கெனப் பிடித்து வாழ அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய நம்பிக்கை வாழ்விலும், நம்பிக்கை ஒளியிலும் இவ்வுலகக் காரியங்களை அவர்கள் மதிப்பிட வேண்டும். மேலும், கிறிஸ்தவ மனப்பான்மை அங்கு ஊடுவருச் செய்தால்தான் (திப 4:5), இவ்வுலகப் போக்குகளுக்கு அது சவாலாக இருப்பதோடு இயேசு விரும்பும் இறையாட்சி மலர முடியும்.

## திருச்சபையின் நம்பிக்கையில்....

கத்தோலிக்க திருச்சபை மரியாள் கடவுளின் தாயாக முன் நியமிக்கப்பட்டவர் எனவும் (தி.56,61). சிறப்பான விதத்தில் அவர் மீட்கப்பட்டவர் எனவும் (தி.56) நம்பி ஏற்றுக்கொள்கின்றது. மேலும் திருச்சபையின் தந்தையராலும், எபேசு சங்கத்தாலும் “மரியாள் கடவுளின் தாய்” என அழைக்கப்பட்டார் (தி56,66, கிஒ 15) என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. “இயேசு கிறிஸ்துவின் தாய் எங்களின் தாய்” எனப் பெருமை கொள்ளும் பொதுநிலையினர் அத்தாயின் புரட்சிகர வாழ்வைப் பின்பற்றி இறைவனுக்குச் சான்றுப் பகரும்போது, “தாயைப் போல பிள்ளை” என்பதைத் தங்கள் அன்றாட வாழ்வில் உரிமையாக்கிக் கொள்வர்.

## இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுவதில்...

இறைவனின் திருவுளம் தன் வாழ்நாள் முழுவதும் நிறைவேறத் தன்னையே இறைவனுக்கு அர்ப்பணித்தவர் மரியாள். இதனால்தான் கடவுளின் வார்த்தை தன்னில் மனிதராக மரியா இசைகின்றார் (தி56) இறைவார்த்தை மனிதராகப் பிறந்த பின் அவரை வளர்த்து ஆளாக்குவதில் வந்த சவால்கள், சங்கடங்கள், எதிர்ப்புகள், இன்னல்கள் மகிழ்ச்சி மற்றும் எதிர்நோக்கு அனைத்திலும் அவர் இறைவனின் திருவுளம் ஒன்றையே நிறைவேற்றினார். இதனால்தான் அவர் மீட்பரின் தாயானார் (தி 55,58,61). அன்னை மரியாளைப்போல் எல்லாப் பொதுநிலையினரும் தங்களின் அன்றாட வாழ்வில், திருவிவிலியத்தின் அடிப்படையில், இறைவனின் திருவுளத்தை தெளிந்து, தேர்ந்து நிறைவேற்றினால் அவர்கள் இறைவனுக்கேற்ற குழந்தைகளாகிவிடுவர்.

## இல்லற வாழ்வில் மாதிரி!

பொதுநிலையினர் திருமண வாழ்வை வாழச் சிறப்பாக இறைவனால் அழைக்கப்பட்டுள்ளார்கள் (தி35). இறைவனின் வல்லமையில் இணைந்து புது மனிதரைத் தோன்றச் செய்கின்றார்கள் (திந 24) குடும்பத்திலும், சமூக சூழ்நிலைகளிலும் உலகக் காரியங்களிலும் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர்ந்து அவற்றைக் கிறிஸ்தவ மனநிலையால் ஊடுருவச் செய்வதில் (திந 21, தி 31, 35-36) உலகையே கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றனர் (தி.34). இவை அனைத்திலும் கன்னி மரியாவின் வாழ்வு பொதுநிலையினரின் வாழ்விற்கு ஒரு மேல்வரிச் சட்டமாக (துவா 25) அமைந்துள்ளது.

## பிறர் பணியில்...

பொதுநிலையினரின் பணிப்பொறுப்பு என்னவென்றால் திருச்சபையின் மீட்புப் பணியே ஆகும். (தி31,33). எனவே ஒவ்வொருவரும் அவரவர் தகுதி, அறிவு ஆகியவற்றின் அடிப்படையிலும் திருச்சபையின் நலனுக்காகவும் (தி.37) மற்றும் திருச்சபை ஆட்சியாளருடனும் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் (பொதி 20,24-26, தி.30). மேலும் பொதுநிலையினர் பங்குப் பணிகளில் திருப்பணியாளர்களுடன் ஒத்துழைப்பதோடு (பொதி.10), திருப்பணியாளர்களும் பொதுநிலையினரோடு இணைந்து செயல்பட வேண்டும் (திவா 9).

இத்தகைய பிறர் பணியாகிய மீட்புப் பணியில் பொது நிலையினரின் வாழ்வுக்கு வழியாக இருப்பவர் அன்னை மரியாள் தான். ஏனெனில் அவர் தனது உறவினரான எலிசபெத்திற்கு உதவி தேவைப்பட்டபோது பணிவிடை செய்ய விரைந்தார் (தி. 57) இடையருக்கும், ஞானிகளுக்கும் கிறிஸ்துவத்தைக் காண்பித்தார் (தி.57). காணாமல் போன தன்மகனைத் தேடிக் கண்டடைந்தார்(தி.57). கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்து மக்கள் தவித்தபோது தன் மகனிடம் பரிந்து பேசி (தி.58) அதைப் பெற்றுத்தந்தார்.

## நீதியின் வழியில்.....

மரியாளின் பாடலை (லூக் 1, 46-56) நாம் வாசிக்கும்போது நீதியின் ஆறு பெருக்கெடுத்து ஓடுவதைக் காண்கின்றோம். கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளில் பங்கேற்க (தி.31, 34-36, பொதி 2, திவா 2) அழைக்கப்பட்டுள்ள பொதுநிலையினர் அனைவரும் மரியாளின் மனநிலையை பெற்றிருந்ததால், அவர்கள் தங்களை நம்பி அழைத்துள்ள கிறிஸ்து எம்பெருமானுக்குச் சான்று பகர்வதுடன் அவர் தம் இறையாட்சியைப் பரப்பவும் (தி.35-36) முடியும்.


## ஏழைகளின் விடுதலையில்....

ஆசிய திருச்சபையின் இன்றைய சூழமைவில் பொதுநிலையினரின் பெரும் பகுதியாக இருப்பவர்கள் ஏழைகளே. ஏழைகளாக இருப்பதோடு அவர்கள் சிறுபான்மையினராகவும் இருக்கிறார்கள். எனவே பொதுநிலையினர் விழிப்புணர்வின் மூலமாக தங்களைத் தாங்களே ஒருங்கிணைப்பதோடு, பிற திருச்சபைகளிலும், பிற சமயங்களிலும் உள்ள மற்ற ஏழைகளையும் ஒருங்கிணைத்து, ஒரு சமத்துவ - சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிட தொடர்ந்து உழைத்திட வேண்டும். இவ்வாறு நற்செய்தியின் அடிப்படையில் (தி.35, போதி 6-7) இன்றைய உலகை மாற்றும் பணி பொதுநிலையினரின் கடமையாக இருக்கின்றது (பொதி 16,29, தி 36, திந 21). ஏழைகளாகப் பிறந்து, ஏழ்மையில் வளர்ந்து, ஏழ்மையில் இறைவனின் மீட்புப் பணியை முழுமையாகச் செய்து நிறைவு பெற்ற அன்னை மரியாள் ஏழைப் பொதுநிலையினரின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் சிறந்தோர் வழிகாட்டி...

## சிலுவையில்...

மரியாள் சிலுவையடியில் பலியிடப்பட்ட கிறிஸ்துவோடு தன்னையும் இணைத்தார் (தி.58). கிறிஸ்துவோடு மரியாள் துன்புற்றார் (தி 61). அவரது துன்பமும், அவரது மகனாகிய இயேசுவின் சிலுவைச் சாவும், சமத்துவமுள்ள இறைச் சமுதாயத்தைப் பெற்றெடுப்பதற்காக விளைந்த பேறுகால வேதனைகளும், துன்பங்களுமாகும். இந்தத் தெய்வத் தாய் மரியாளைப் பின்பற்றி பொதுநிலையினர் அனைவரும் துன்புறும் கிறிஸ்துவோடு ஒன்றித்திருந்தால் (பொதி 4). இறைவனை நம் பெற்றோராகவும், மானிடராகவும் நாம் அனைவரும் குழந்தைகளாகவும் உருவெடுக்கும் புதியதொரு வானத்தையும், புதியதொரு பூமியையும் படைத்திடலாம்.

15




# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

நோய்களிலெல்லாம் மிகவும் அருவருக்கத்தக்கது தொழுநோய். விரல்கள் நைந்து, உதடுகள் வீங்கி, நாசி நலிந்து, உடல் முழுதுமே உருமாறிக் காட்சியளிக்கும் தொழுநோயாளியை ஒரு நடைப்பிணம் என்றே சொல்லலாம். அப்படிப்பட்டவர்கள் சொந்த வீட்டில் முதலாய் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வறியோரும் சரி, செல்வந்தரும் சரி, தங்களது வீட்டில் யாரையாவது இந்நோய் தொற்றிக்கொண்டது என்று கண்டால் அவர்களை வீட்டைவிட்டு வெளியே விரட்டிவிடுவார்கள். இவ்வாறு விரட்டப்படுகின்றவர்களுக்குப் பெரும்பாலும் பிச்சை எடுத்துப் பிழைக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதனால்தான் மாநகராகிய கல்கத்தாவின் தெருக்களில் தொழுநோயாளர் பலர் உலாவி வருகின்றனர். ரயில் நிலையங்களிலும் பேருந்து நிலையங்களிலும் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றனர். இவர்களைக் கண்காணிக்கவோ இவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யவோ எவருமே இதுவரை வந்ததில்லை. இவர்கள் பக்கமே செல்ல மக்கள் அஞ்சுகின்றனர்.

அன்னை தெரேசாவின் வாழ்வில் நடந்த ஒரு சிறு நிகழ்ச்சி இதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஒரு சமயம் அன்னை உரோமைப் பெருநகரிலுள்ள விமான நிலையத்தில் பயணத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அப்போது சேலை உடுத்திய இந்தியப் பெண்மணி ஒருத்தி அன்னையுடன் அளவளாவிக் கொண்டிருந்தார். முகம் மலர்ந்து பேசிச் சிரித்துக் கொண்டிருந்த அவர் திடீரெனப் பேச்சை முடித்து முகத்தைச் சுளித்துக் கொண்டு போய்விட்டார். என்ன நடந்தது? இந்தியாவைப் பற்றியும் தம் சகோதரிகளைப் பற்றியும் அவர்கள் செய்துவரும் பணிகளைப் பற்றியும் அச்சீமாட்டி தெரசாவிடம் கேட்டு அறிந்துகொண்டார். சிசு பவனிலும் நிர்மல் ஹிருதய் விடுதியிலும் தொழுநோயாளர் மத்தியில் செய்துவரும் பணிகளை பற்றி அன்னை பேசிக்கொண்டிருந்தார். அப்போது அப்பெண்மணி தெரசாவைப் பார்த்து, "நீங்கள் தொழுநோயாளிகளுக்கும் பணி செய்கிறீர்களா?" எனக் கேட்டார். அன்னை "ஆம்" என்றார். அவ்வளவுதான் உடனடியாகப் பேச்சை முடித்துக் கொண்டு அப்பெண்மணி அங்கிருந்து நகர்ந்துவிட்டார். தொழுநோயாளர் மத்தியில் பணிசெய்கிறவர்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை எதிர்பார்க்க வேண்டியதுதான் என்கிறார் அன்னை தெரசா.

மற்றொரு நாள் நண்பர் ஒருவர் அன்னையிடம், "ஒரு மில்லியன் டாலர் பணம் தந்தாலும் ஒரு தொழுநோயாளியை நான் தொடமாட்டேன்", என்றார். அதற்கு அன்னை, "எனக்கு இரண்டு மில்லியன் டாலர் பணம் தந்தாலும் பணத்திற்காக நானும் அதைச் செய்யேன். ஆயினும் இறைவனின் அன்புக்காக மகிழ்ச்சியுடன் அதைச் செய்கிறேன்" என்றார்.

"ஒரு தொழுநோயாளியின் புண்களைக் கழுவும்போது இயேசுவுக்கே அதை செய்வதாக உணர்கின்றேன்" என்கிறார் அன்னை. இந்த ஆழ்ந்த நம்பிக்கைதான் இக்கடினமான பணியைச் செய்யும்படி அவரைத் தூண்டியது.

1957ஆம் ஆண்டு புரட்டாதி 7ம் நாள் கல்கத்தாவிலிருந்து வெளிவரும் "ஸ்டேட்ஸ்மன்" என்னும் நாளிதழில் வெளியிடப்பட்டிருந்த செய்தி இது: "சென்ற புதன்கிழமை கல்கத்தாவின் பேராயர் மேதகு பெரியெர் அவர்களால் அன்னை தெரசாவின் தொழுநோய் மருத்துவமனை ஹவுராவில் திறந்து வைக்கப்பட்டது. மருத்துவப் பணிபுரிய பட்டதாரியான மருத்துவர் ஒருவரும் தனிப்பயிற்சி பெற்ற மூன்று சகோதரிகளும் ஓர் ஊர்தியில் ஹவுரா, மோட்டி ஜீல், டிட்டாகூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று பிணியாளிகளைச் சந்தித்து மருந்துகள் வழங்கி வருகின்றனர். கல்கத்தா மாநகரில் மட்டும் ஏறத்தாழ முப்பது ஆயிரம் தொழுநோயாளர் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது!"

இச்செய்தி வெளிவருவதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே அன்னை தொழுநோயாளருக்கான பணிகளைத் தொடங்கியிருந்தார். 1952இல் நிர்மல் ஹிருதய விடுதியைத் தொடங்கும்பொழுதே இப்பணிக்கான முயற்சியையும் அவர் மேற்கொண்டிருந்தார். தொழுநோயாளர்களுக்கு நிர்மல் ஹிருதய் விடுதியில் இடம் இல்லாததால் அவர்களுக்கென தனித்தோர் இல்லம் கட்ட அன்னை முயன்று கொண்டிருந்தார். 1957இல் தான் இம்முயற்சி பலனைத் தந்தது.

அதுவரை அன்னை மருத்துவ ஊர்தி ஒன்றில் பல இடங்களுக்கும் சென்று தொழுநோயாளரைக் கவனித்து வந்தார். இந்த மருத்துவ ஊர்தியை அவருக்கு அளித்தது டில்லியிலுள்ள கத்தோலிக்கப் பொதுநல இயக்கம் ஒன்று. இந்த ஊர்தி அன்னைக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். அஃது இல்லையென்றால் அத்தனை இடங்களையும் அவரால் தொடர்பு கொண்டிருக்க முடியாது. அந்த ஊர்தியில் அவர் முதலில் ஹவுராவுக்குச் செல்கிறார். கல்கத்தாவின் தென்பகுதியில் உள்ளது ஹவுரா. ஹவுராப் பாலத்தையும் கடந்து தெற்கு நோக்கிச் தொடங்கினது. இங்கே முத்துக் குளம் ஒன்று உள்ளதை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த முத்துக்குளத்தின் கரை ஓரத்தில் மைதானம் ஒன்றுள்ளது. அங்கேதான் அன்னை தெரசாவின் இரண்டாவது தொழுநோய் நிலையம் அமைந்திருக்கிறது.

மருத்துவர் ஒருவர் நோயாளியைப் பார்வையிடுகின்றார். நோயாளிகள் ஒவ்வொருவருக்கும் அச்சிடப்பட்ட அட்டை ஒன்று அளிக்கப்பட்டிருக்கிறது. அதில் நோயாளியின் பெயர், வயது போன்ற விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கும். மறுபக்கம் மனித உருவப்படம் வரையப்பட்டிருக்கிறது. தொழுநோய் பாதிக்கப்பட்ட இடம் அதில் கோடிட்டு காட்டப்பட்டிருக்கும். இது மருத்துவப் பரிசாதனை செய்வதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது.



## தொழுநோயாளிகளை தழுவி அணைக்கும் அன்னை

சென்றால் அங்கே பெரிய மைதானம் ஒன்று தெரியும். அப்பகுதி தான் தொழுநோயாளர் மிகுதியாக வாழும் இடம்.

மருத்துவ ஊர்தி மைதானத்தின் தெற்கு ஓரமாக வந்து நிற்கின்றது. மருத்துவர் வண்டியை விட்டு கீழே இறங்குகிறார். அவருக்கு ஒரு நாற்காலி கொண்டு வந்து போடப்படுகிறது. மேசை ஒன்றும் அவருக்கு முன் வைக்கப்படுகிறது. நோயாளிகள் மருத்துவரைப் பார்க்க ஒருவர் பின் ஒருவராகச் செல்கின்றனர். மருத்துவர் கையுறைகளை அணிந்தவராய் மருத்துவப் பரிசோதனை நடத்துகிறார். இரு சகோதரிகள் நோயாளிகளின் புண்களைக் கழுவித் துடைத்து மருந்திட்டுக் கட்டுகின்றனர்.

நோயாளிகளைப் பரிசோதித்து மருந்து குறித்துக் கொடுப்பதுடன் மருத்துவருடைய பணி முடிகிறது. ஆனால் அன்னை தெரசா தாய்க்குரிய பாசத்துடன் ஒவ்வொரு நோயாளியின் நலத்தையும் விசாரிக்கின்றார். தமக்கு அந்நோய் தொற்றிக்கொள்ளுமே என்ற பயமே அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இதோ இறுதியாக ஒரு பெண் வருகிறாா். அன்னை அவளை, "மேரி" எனப் பெயர் சொல்லி அழைக்கின்றார். மேரியின் கதை மிகவும் சோகமான கதை. அவள் தென் இந்தியாவிலிருந்து வங்காளத்துக்கு வேலை தேடி வந்த ஒரு கிறிஸ்தவப் பெண். அவளுக்கு மணமாகி ஒரு குழந்தையும் இருக்கின்றது. குழந்தை பிறந்தபின் அவளுடைய கணவன் மூன்று பெண்களை மணந்திருக்கிறான். அவளைப் பிச்சை எடுக்கக் கட்டாயப்படுத்தியிருக்கிறான். அது மட்டுமா? அவனுக்கு வருமானம் போதாது என்பதால் அவளை விலை மாதாகப் பயன்படுத்திப் பணம் சம்பாதித்து வந்தான். இந்நிலையில்தான் அவளுக்குத் தொழுநோய் கண்டது. உடனே அவன் அவளை வீட்டை விட்டு விரட்டியிருக்கின்றான்.

அவள் இப்போது எங்கே போவாள்? தொழுநோயாளர் வாழும் சேரிக்கு வந்து தஞ்சம் புகுந்தாள். மேரியைப் போன்றவர்கள் எத்தனைபேர் அங்கே அலைகின்றனரோ? இவர்களைக் கவனிக்க ஒருவர் இல்லை என்றால், இவர்களையும் அன்பு செய்ய ஓர் இதயம் இல்லை என்றால் இவர்களுடைய கதி என்னவாகும்?

அடுத்து நாம் செல்லுமிடம் மோட்டி ஜீல். இங்கேதான் தெரசா தனது முதற்பள்ளியைத்

அடுத்து நாம் டாப்பாவுக்குச் செல்கிறோம். இது கசாப்புக் கடைகள் நிறைந்த இடம் என்று ஏற்கனவே பார்த்திருக்கின்றோம். அங்கே அன்னை தொடக்கப்பள்ளி ஒன்றை நிறுவியிருந்தார். அப்பள்ளியில் பயின்று வந்த சிறுவருள் பலருக்கு தொழுநோய் பிடித்திருந்ததை அன்னை கவனிக்கத் தவறவில்லை. பிள்ளைகளுக்குத் தொழுநோய் பிடித்திருந்ததால் அவர்களுடைய பெற்றோருக்கும் அது கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டே குடிசைக்குள் நுழைந்துப் பார்க்கிறார். இதோ ஒரு குடிசை. அதனுள் சென்று பார்க்கிறார் அன்னை. ஒரே இருட்டாக இருக்கிறது. உள்ளே என்ன இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கே நம் கண்களுக்குச் சிறிது நேரம் பிடிக்கிறது. சன்னல்களுமில்லாமல் காற்றோட்டமும் இல்லாமல் இருண்டுகிடக்கும் அவ்வீடுகளில் எப்படித்தான் மனிதர்கள் வாழ்கிறார்களோ!

அங்கே குடிசை ஒன்றில் ஒரு கிழவி படுத்திருந்தாள். "அன்னா" என்று அழைக்கிறார் அன்னை அன்பாக. அன்னையின் குரலைக் கேட்டதும் அன்னா தன் படுக்கையை விட்டு எழுந்து கம்பு ஒன்றின் துணையால் வெளியே வருகிறாள். அவளது நாசியும் உதடுகளும் வீங்கிப் போயிருந்தன. அவள் ஒரு தொழுநோயாளி. அன்னாவும், அன்னையும் வங்காள மொழியில் என்னென்னவோ பேசி மகிழ்கின்றனர். அன்னாவிடம் நோயாளிகளுக்கான ஓர் அடையாள அட்டையைக் கொடுத்து மறுவாரம் வந்து பார்க்கும்படி சொல்லி அந்த இடத்தைவிட்டு நகர்கின்றார் அன்னை தெரசா.

அடுத்து, நாம் டிட்டாகூர் என்னும் இடத்துக்குச் செல்கிறோம். இது கல்கத்தா மாநகருக்கு 200 மைல் தொலைவில் உள்ளது. நான்கு மணி நேரம் ரயிலில் பயணம் செய்து அவ்விடத்தை அடைகிறோம். அங்கே நாம் பார்ப்பது ஒரு மருத்துவனையன்று. அஃது ஒரு குடியிருப்பு. 200 குடும்பங்கள் அடங்கிய பெரிய குடியிருப்பு அது. அதன் வரலாற்றை அடுத்த இதழில்.

**தொடரும்**

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்

# மன்னிக்க மறுத்த பணியாளர் உவமை

**- (மத் 18:21-35)**



## 1. உவமையின் பின்னணி

இவ்வுவமை மத்தேயு நற்செய்தியில் மட்டுமே இடம் பெற்றுள்ளது. எனினும் மன்னிப்பு இறையாட்சி வாழ்க்கை முறையின் மையச் செயல்பாடு என்பதால் அது பற்றிப் பல இடங்களில் குறிப்புகள் உள்ளன. குறிப்பாக, இயேசு கற்றுத் தந்த இறையாட்சிச் செபத்தில் மன்னித்தல் மிகுந்த அழுத்தம் பெற்றுள்ளது. "எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளது போல எங்கள் குற்றங்களையும் மன்னியும்" (மத் 6:12) என்று செபிப்பதன் வழியாக இறைவனிடம் மன்னிப்புப் பெற நாம் பிறரை மன்னிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. இதுவே பின்வரும் வசனங்களில் மிகவும் தெளிவுபடுத்தப்படுகிறது. மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார் (மத் 6:15).

இதை ஒத்த கருத்து லூக்கா 17:3-4 வசனங்களிலும் இடம் பெறுகிறது. "உங்களுடைய சகோதரர், சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்து கொள்ளுங்கள். அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள். ஒரே நாளில் அவர் ஏழு முறை உங்களுக்கு எதிராக பாவம் செய்து, ஏழு முறையும் உங்களிடம் திரும்பி வந்து "நான் மனம் மாறிவிட்டேன்" என்று சொல்வாரானால் அவரை "மன்னித்துவிடுங்கள்" லூக்காவின் இந்த வசனங்களின் உவமை வடிவமாக மன்னிக்க மறுத்த பணியாளர் உவமையைப் பார்ப்போரும் உண்டு.

தொடக்கநூல் 4ஆம் அதிகாரத்தில் "இலாமேக்கு தம் மனைவியரிடம் "ஆதா, சில்லா, நான் சொல்வதைக் கவனியுங்கள்; இலாமேக்கின் மனைவியரே என் சொல்லுக்குச் செவி கொடுங்கள்; என்னைக் காயப்படுத்தியதற்காக ஒருவனை நான் கொன்றுவிட்டேன்; என்னை அடித்ததற்காக அந்த இளைஞனை நான் கொன்றேன். காயீனுக்காக ஏழுமுறை பழிவாங்கப்பட்டால், இலாமேக்கிற்காக எழுபது ஏழுமுறை பழிவாங்கப்படும்" என்றார் (தொ.நூ 4:23-24) ஏழு முறை எழுபது முறை பழிவாங்குதல் பற்றிய இலாமேக்கின் இக்கூற்று ஏழுமுறை எழுபது முறை மன்னிக்கும் இயேசுவின் கூற்றாக முழு மாற்றம் பெறுகிறது!

## 2. உவமையின் விளக்கம்

**தாலந்து**

தாலந்து என்பது அன்றைய மிகப்பெரிய பண மதிப்பு. அது 6,000 தெனாரியம் மதிப்புக் கொண்டது. ஒரு தெனாரியம் ஒருவரின் ஒருநாள் கூலியாக அல்லது ஒருநாள் செலவுக்குத் தேவையான பணமாகக் கருதப்பட்டது. வாரத்திற்கு 6 நாள்கள் உழைத்து ஒருவர் ஓராண்டு முழுவதும் ஏறக்குறைய 300 தெனாரியம்தான் ஈட்ட முடியும். அப்படியானால் ஒரு தலாந்து - 6000 தெனாரியம் ஈட்ட ஒருவர் 20 ஆண்டுகள் உழைக்கவேண்டும். இவ்வாறு ஒருவர் வாழ்நாள் முழுவதும் - நாற்பது ஆண்டுகள் உழைத்தால்தான் இரண்டு தாலந்துகள் ஈட்ட முடியும்! 10,000 தாலந்து ஈட்ட 5,000 பேர் வாழ்க்கை முழுவதும் - நாற்பது ஆண்டுகள் - உழைத்தாக வேண்டும்! யூதேயா, சமாரியா, இதுமேயா ஆகிய மூன்று மாநிலங்களின் இயேசு காலத்து மொத்த ஆண்டு வருமானம் 600 தாலந்துகள் மட்டுமே! பெரிய ஏரோதுவின் மொத்த ஆண்டு வருமானம் 900 தாலந்துகளாகக் கணக்கிடப்பட்டுள்ளன. அப்படியானால் 10,000 தாலந்து கடன்பட்டவர் கற்பனையைக் கடந்த ஒரு தொகையைக் கடன்பட்டிருந்ததாகவே கருதப்படவேண்டும்! கடவுளின் அளவு கடந்த மன்னிப்பைக் காட்டவே இப்பெருந்தொகை இவ்வுவமையில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**கடன்**

கடன் என்பது பாவத்திற்கு உருவகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு கற்றுத் தந்த இறையாட்சிச் செபத்திலும் மூல மொழியில், "எங்களுக்குக் கடன்பட்டவரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் கடன்களையும் மன்னியும்" (மத் 6:12) என்று உள்ளது (தமிழ் மொழிபெயர்ப்பில் பொருள் தெளிவைக் கருத்தில் கொண்டு "கடன்" என்பது "குற்றம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இவ்வுவமையிலும் வ. 27ல் மூலமொழி கடனை "மன்னித்ததாக"க் குறிப்பிடுகிறது. கடனைத் தள்ளுபடி செய்யத்தான் முடியும். "கடனை மன்னித்தார்" என்பதன் வழியாக இங்குக் கடன் "குற்றம்" என்னும் பொருளில் புரிந்து கொள்ளப்படுகிறது. எனவேதான் தமிழ்ப் பொதுமொழிபெயர்ப்பில் பொருள் தெளிவு கருதி "கடன் மன்னிக்கப்பட்டது என்பதைக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**மனிதரை விற்றல்.**

வ 25இலும், வ 30இலும் மனிதரை விற்று அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கடனை அடைக்குமாறு கூறப்பட்டுள்ளது. பெரும்பாலும் செய்த குற்றத்திற்காகவும் சில வேளைகளில் கடனை அடைப்பதற்காகவும் மையக் கிழக்கு நாடுகளில் மனிதரை விற்கும் பழக்கம் இருந்தது. இது பற்றிய குறிப்புக்களை ஆமோ 2:6, 8:6, 2அர 4:1, நெகே 5:4-5, போன்ற பகுதிகளில் காண்கின்றோம். எனினும் குடும்பத் தலைவர் செய்த குற்றத்திற்காக அல்லது வாங்கிய கடனுக்காகக் குடும்ப உறுப்பினர் அனைவரையும் விற்கும் வழக்கம் இஸ்ரயேலர் மத்தியில் அதிகம் இருந்ததாகத் தெரியவில்லை.

தொடர்ச்சி அடுத்த இதழில்....



# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

137

# தூயோராய் இருங்கள்



**லேவி 19:1-2 15-18**

நாம் தூயதை இறைவனுக்குக் கொடுக்க வேண்டும். எமது சடங்குகள் தூயதாய் இருக்க வேண்டும். ஓசியா கூறுவதுபோல் தூயவரான இறைவன் தூய்மையற்ற மனிதனுடன் உறவு கொள்கிறார். காரணம் அவர் அன்பாக இருப்பதாலேயே. தூய்மையும் அன்பும் ஒன்றே. இரண்டும் வேறல்ல. இறைவன் அன்பு செய்வதுபோல் நாமும் அன்பு செய்யவேண்டும்.

தூய்மையற்ற வரை எம்மால் புறக்கணிக்க முடியாது. தரித்திரருக்கு இறைவன் அன்பு செலுத்துவது இறைவன் தூயவராய் இருப்பதாலேயே. மாறாக தரித்திரர் தூயவராய் இருப்பதால் அல்ல. தரித்திர நிலையில் இருப்போர் இறைவனுடன் சேர்ந்து போராட்டம் நடத்த வேண்டும். அவ்வாறு தூயவராக வேண்டும். மேலும் அன்பு என்பது நீதி நேர்மையைக் குறிக்கும்.

"தீர்ப்பிடுகையில் அநீதி இளைக்காதே. சிறியோர் பெரியோர் என முகம் பாராது உனக்கு அடுத்து வாழ்வோருக்கு நேர்மையுடன் நீதிவழங்கு". இங்கே அன்பும் நீதியும் ஒன்றெனப்புரியும். புறங்கூறுவது மாபெரும் பாவமாகும். சங்கத்தை குடும்பத்தைப் புறங்கூறிப் பிளவுபடுத்துவது பெரும் பாவமாகும்.

"உன் இனத்தாருக்குள் புறங்கூறித் திரியாதே. உனக்கு அடுத்து வாழ்பவரின் குருதிப் பழிக்குக் காரணமாகாதே".

ஒருவருக்கு ஆபத்து வரும்போது மறுபக்கம் பார்த்துக்கொண்டு விலகிச் செல்லக் கூடாது. மேலும் ஒருவரைப் பகைக்கும் போது எமக்கே கெடுதி ஏற்படும். எமக்கே நோய் வரும்.

"உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகைக்காதே" என்று சொல்லப்படுகிறது. அதுமட்டுமல்ல ஒருவர் பாவத்தில் விழும் போது அதைத் தட்டிக் கேட்டு அவர் பாவத்தில் விழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

"உனக்கடுத்திருப்பவர் பாவம் செய்யாதபடி அவரைக் கடிந்துகொள்". மேலும் பழிக்குப்பழி தீர்க்கவேண்டும் என எண்ணுவதும் பிழையாகும்.

"பழிக்குப் பழியென உன் இனத்தார் மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்து இருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக".

நாம் மூன்று விதமானவர்களுக்கு அன்பு கூர்தல் வேண்டும்.

1. உனது மக்கள். 2. உறவினர். 3. அயலவர்.

**மத்தேயு5: 38-48**

பழைய ஏற்பாட்டில் கண்ணுக்குக் கண் பல்லுக்குப்பல் என்ற சட்டத்தைப் பலர் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

**லேவி 24: 20 விடுதலைப்பயணம் 21 : 24**

இவைகள் மூன்று விதத்தில் நோக்கப்பட வேண்டும்.

1. இது நீதி நேர்மை பற்றி வெளிப்படுத்தும் அடிப்படை அம்சமே
2. இது கடைப்பிடிக்கப்படும் சட்டமென்று கூறப்படவில்லை.
3. தனிப்பட்ட விதத்தில் பழிவாங்குவதற்காகச் செய்வது சட்ட விரோதமாகும்.

நீதிபதியே தீர்ப்பளிப்பார். நீதிபதியே தண்டனை வழங்குவார். இங்கே நீ உன்னை அன்புசெய்வதுபோல் மற்றவருக்கும் அன்பு கூர்வதே பிரதானமானது என்பதை மறத்தலாகாது.

இயேசுநாதர் இதைக்கூறும் போது பழைய ஏற்பாட்டில் இப்படிக் கூறப்படுகின்றது. "ஆனால் நான் உங்களுக்குக் கூறுகிறேன்" என்ற சொற்பிரயோகத்தைப் பாவிக்கிறார். அதாவது அப்படிக் கூறுவதற்கும் அவர் விரும்பவில்லை என்பதே அதன் பொருளாகும்.

"உங்களை வலக்கன்னத்தில் அறைபவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்காட்டுங்கள்" என்பது புறங்கையால் அடிப்பது சட்டவிரோதமாகும். மற்றவரை தாழ்த்துவதாகும். ஆகவே இங்கு திருப்பி அடிக்கவேண்டாம் என்பதே பொருள்.

"ஒருவர் உங்களுக்கெதிராக வழங்குத் தொடுத்து உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேல் உடையையும் அவர் எடுத்துக்கொள்ள விட்டுவிடுங்கள்". இங்கே அவ்வாறு செய்தால் நிர்வாணம் ஆகிவிடுவோம். இதுவும் சட்டவிரோதமானதே.

"எவராவது உங்களை ஒருகல் தொலைவரைக்.......

தொடர்ச்சி 15ம் பக்கம்

பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா
உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.



# இறைவார்த்தை வழிபாடு

WLX - பேதுரு -

## பாஸ்கா காலத்தின் ஆறாவது ஞாயிறு (21.05.2017)

**வாசக விளக்கம்:** பாஸ்கா காலத்தின் ஆறாவது வாரத்தில் கால்பதிக்கும் இறை அன்பர்களே! அனைத்துலகோரே ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரியுங்கள் என்கிறது இன்றைய திருப்பாடல், இன்றைய நற்செய்தியில் உங்களோடு என்றும் இருக்கும்படி ஒரு துணையாளரை அனுப்பும்படி தந்தையிடம் கேட்பேன்" என்னும் இயேசுவின் கூற்றிற்கிணங்க தூய ஆவியானவர் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துகிறார். நமக்குத்தேவையான ஆலோசனைகளை வழங்குகிறார் நம்மோடு இருப்பதை உறுதிப்படுத்தும் இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது நாம் இயேசுவை அன்பு செய்ய வேண்டும் என்பதே அப்படி அன்பு செய்வது உண்மையானால் அதனை நமது செயல்களில் காட்ட வேண்டும் கட்டளைகளை கடைப்பிடிப்பதன் வழியாக கடவுள்பால் நமக்குள்ள அன்பை வெளிப்படுத்த வேண்டும். இன்றைய நற்செய்தியில் இயேசு மூன்று வாக்குறுதிகளை சீடர்களுக்குத் தருகின்றார். ஒன்று தூய ஆவியின் உடனிருப்பு, இரண்டு இயேசு மீண்டும் வருவார், மூன்றாவது தந்தையும் இயேசுவும் சீடர்களில் பிரசன்னமானவர் என்பனவாகும். இயேசுவின் வாக்குறுதிகளை சீடர்கள் நம்பினார்கள். அவர் கட்டளைப்படி வாழ்ந்தார்கள். இயேசு நம்மில் வாழ்கிறார். தந்தையும் தூய ஆவியாரும் நம்மிடம் செயல்படுகின்றனர் நாமும் கடவுளையும் மற்ற மனிதர்களையும் அன்பு செய்து வாழும் வரம் வேண்டி தொடரும் பலியில் பங்கேற்போமாக

**முதல் வாசகம் : தி.ப 8:5-8,14-17**
சமாரியர் மீது கைகளை வைக்கவே அவர்கள் தூய ஆவியைப் பெற்றார்கள்.

**பதிலுரைப்பாடல்:** அனைத்துலகோரே கடவுளைப்போற்றி ஆர்ப்பரியுங்கள்

**இரண்டாம் வாசகம் : 1 பேதுரு 3:15-18**
மனித இயல்போடு இருந்த கிறிஸ்து இறந்தார் எனினும் ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர்பெற்றெழுந்தார்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார் நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : யோவான் 14:15-21**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கடவுளின் அன்புக் கட்டளையை நிறைவேற்றுவதே தனது தலையான கடமை எனக்கருதி அதையே தன் மக்களுக்குப் போதிக்கும் தூய திருச்சபையையும் அதன் தலைவரான திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் வேண்டிய உடல் உள ஆன்ம பலத்தைத் தந்தருள வேண்டுமென்று...

மற்றவர்களுக்கு நன்மை செய்வதால் வரும் துன்பங்களை ஏற்றுக்கொள்வது மிக நல்லது எனக்கருதி எமது அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் செயல்படவும் சுயநலமற்று பொதுநலம் பேணி, அனைத்து மக்களையும் சமமாக மதித்து சேவையாற்றிட நல் உள்ளத்தை தந்தருள வேண்டுமென்று...

முதலில் கடவுளையும் அடுத்து மனிதர்களை அன்பு செய்து வாழும் எவரும் கடவுள் அன்பில் நிலைத்திருப்பர் என்பதை உணரவும் நம் இறைவன் இயேசு நம்மை திக்கற்றவர்களாக விடமாட்டார் என்பதைநம்பவும், எப்பொழுதும் ஆண்டவரைப் போற்றி ஆர்ப்பரித்து நன்றி கூறவும், எமது சொல்லாலும் செயலாலும் ஏனையோர்க்கு முன்மாதிரி காட்டவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று....

## ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழா (28.05.2017)

**வாசக விளக்கம்:** ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழாவை நினைவு கூர்ந்து இயேசு பெற்ற அந்த முழுமையான மாட்சிமையைக் கொண்டாட ஒன்று கூடி வந்துள்ள அன்பு நெஞ்சங்களே! மாட்சிமை மகிமை இதுவே இன்றைய பெருவிழாவின் சிறப்பு. இயேசு அடைந்த மாட்சியிலும் மகிமையிலும் மதிமயங்கி இருக்க நாம் அழைக்கப்படவில்லை மாறாக நமக்கென்று வகுக்கப்பட்ட பணி ஒன்று உள்ளது அதுதான் இயேசுவுக்கு சாட்சிகளாய் இருத்தல் ஆகும். அப்போஸ்தலர்களுக்கு அனைத்து அதிகாரங்களை கொடுத்து அனுப்பிய-போது அவர்கள் தயங்கினார்கள். ஆனால் இயேசு எப்போதும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களைப் பின்தொடர்ந்தார். நாமும் கிறிஸ்துவைப் போதிப்பதற்கும் அவர் பணியைச் செய்தவற்கும் தயங்குகின்றோம். ஆனால் இன்றைய இறைவார்த்தைகள் மூலமாக இயேசு எங்களை உறுதிப்படுத்துகின்றார். அவர் நாமத்தினால் நாம் எதைச் செய்தாலும் அவர் எம்மோடு இருக்கிறார். இயேசு மேலிருந்து வந்தவர் மேலே எழுந்து சென்றார் மீண்டும் வருவார் இதுவே நமது விசுவாசம் எனவே இயேசுவின் பணியை நாமும் தொடர இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : தி.ப 1:1-11**
எங்கள் கண்கள் முன்பாக இயேசு மேலே எடுத்துக் கெள்ளப்பட்டார்

**பதிலுரைப் பாடல் :** எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்

**இரண்டாம் வாசகம் : எபேசி 1:17-23**
அவரை விண்ணுலகில் தமது வலப்பக்கத்தில் அமர்த்தினார்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். இதோ உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 28:16-20**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இயேசு ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடும் நாமனைவரும் விசுவாசத்தின் காவலரும் போதகருமான திருச்சபைக்காக மன்றாடுவோம். திருத்தந்தையும், திருஅவையினரும், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் என்றும் வாழும் திருச்சபையின் சாட்சிகளாக விளங்கிட வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

பிளவுண்ட மனநிலையாலும் சுயநல சிந்தனைகளாலும் நெருக்கடிகளை சந்திக்கும் எமது நாட்டிற்காக மன்றாடுவோம். சுயநலப் போக்கினால் தடைப்பட்டுக் கிடக்கும் பொதுநலப் பணிகளை பொதுநல நோக்குடன் நிறைவேற்றவும் இன, மத, கட்சி வேறுபாடுகளால் முடங்கி கிடக்கும் நற்காரியங்களை சீர்ப்படுத்தவும், நாட்டின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாக் குடும்பங்களு-க்காகவும் மன்றாடுவோம். இயேசுவின் விண்ணேற்ற மாட்சியை நேரில் கண்டு மகிழ்ந்த அப்போஸ்தலர் சாட்சிய வாழ்வு வாழ்ந்ததுபோல எமது குடும்பங்களும் விசுவாச வாழ்வில் சிறந்து விளங்கவும் இயேசுவின் இரண்டாவது வருகையை நோக்கிய பயணத்தில் உறுதியாய் நின்று இறைவார்த்தையின் சாட்சிகளாக என்றும் வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று....

உவமை : தாய் தந்தையை இழந்த அனாதைச் சிறுவன் உணவின்றி உடையின்றி கஷ்டப்பட்டான். அந்த நிலையிலும் இறைவனை வாழ்த்திப் பாடிக் கொண்டிருந்தான். இதைப்பார்த்த பெண் ஒருத்தி அவனிடம் கேலியாக, கடவுள் உன்னை அன்பு செய்கிறார் என்றால் உனக்கு உணவும், உடையும் தந்திருப்பாரே! என்று கேட்டாள். பையன் அமைதியாக சிரித்துக்கொண்டே சொன்னான். கடவுள் யாரோ ஒருவரிடம் அதைக் கொடுத்தனுப்பி இருக்கிறார். அவர் தான் என்னிடம் கொடுக்க மறந்துவிட்டார்.

### இறைவார்த்தை

- ஆண்டவரே என் ஆயன். எனக்கேதும் குறையில்லை (தி.பா 23:1)
- பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார் அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். (திபா 23:2)
- என்றுமுள்ள உடன்படிக்கையின் இரத்தத்தால், ஆடுகளின் பெரும் ஆயரான நம் ஆண்டவர் இயேசுவை இறந்தோரிடமிருந்து எழுப்பியவர் அமைதியை அருளும் கடவுளே. அவர் தம் திருவுளத்தை நீங்கள் நிறைவேற்றும்படி, எல்லா நன்மையும் செய்வதற்கு உங்களை ஆயத்தப்படுத்தி இயேசு கிறிஸ்து வழியாகத் தமக்கு உகந்ததை நம்மில் செய்தருள்வாராக! இயேசு கிறிஸ்துவுக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென். (எபி 13:20-21)
- ஆயனைப்போல் தம்மந்தையை அவர் மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் ஒன்று சேர்ப்பார் அவற்றைத் தம் தோளில் தூக்கிச் சுமப்பார் சினையாடுகளைக் கவனத்துடன் நடத்திச் செல்வார்." (எசா 40:11)
- எனவே அவற்றிற்கு என் ஊழியன் தாவீதை ஒரே ஆயனாய் அமர்த்துவேன். அவன் அவற்றை மேய்த்து அவற்றிற்கு ஆயனாய் இருப்பான் (எசே 34:23)
- நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார். (யோவ 10:11
- ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் ஆட்டுக்குட்டி அவர்களை மேய்க்கும் வாழ்வு அளிக்கும் நீரூற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும். கடவுள் அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்." (திவெ 7:17)

## நல்ல ஆயன் கிறிஸ்து



# ஐக்கிய நாடுகளின் 14வது வெசாக் தினத்தையொட்டி கத்தோலிக்க திருப்பீட திரு அவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி.

## 09.05.2017– 13.05.2017




சர்வதேச ஐக்கிய நாடுகள் சபையின் 14வது வெசாக் தினத்தையொட்டி இம்முறை வெசாக் வலயமானது கொழும்பு 07, ஸ்ரீ சுங்கபோதி விகாரை அருகே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கு தங்களது 10வது ஆண்டு நிறைவை கொண்டாடும் பௌத்த ஊடக அமைப்பானது அனுசரனை வழங்கியிருந்தது. ஸ்ரீ சுங்கபோதி விகாரையின் விகாரதிபதியின் அழைப்பின் பெயரில் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர், திருப்பீடத்தின் துணையுடனும், கிறிஸ்தவமல்லா சமயங்களுக்கிடையிலான திருச்சபைக்குள்ள உறவு பற்றிய ஆலோசனை சபையின் வழிகாட்டலில் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இக்கண்காட்சி கூடம், விகாரைக்கருகே அமைந்திருந்தது. கத்தோலிக்க திருப்பீடம் மட்டுமல்லாமல், சீனா, ஜப்பான், மியன்மார், பர்மா, நேபாளம், இந்தியா, இந்தோனேஷியா போன்ற நாடுகளின் தூதுவர்களும் தங்களது நிகழ்வுகள் தொடர்பாக கண்காட்சியினை ஒழுங்கு செய்திருந்தனர்.

எமது கண்காட்சி கூடத்தை இலங்கை சனநாயக்க சோசலிச குடியரசின் தலைவர் வணக்கத்துக்குரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள், இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர் அதிவண. பியரே வென் ரொட் மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையுடன் இணைந்து திறந்து வைத்தார்.

இதுபோன்ற பௌத்த மக்களின் விழாவில், இவ்வகையான கண்காட்சியானது முதன் முறையாக ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது பௌத்த மக்களிடையேயும், பௌத்த பிக்குகள் இடையேயும் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ஒரு பௌத்த குரு இதனை பார்வையிட்ட பின், பின்வருமாறு கூறினார் “இதுபோன்ற ஒரு கண்காட்சியானது எமக்கு கிடைத்த ஒரு பலம். காரணம் நாங்கள் இயேசுவுக்கோ, நபிகள் அவர்களுக்கோ எதிரானவர்கள் அல்ல. எங்களுடைய போதனைகளின் போது அவர்களை உயர்ந்த இடத்தில் வைத்து பேசுகின்றோம். என்னிடம் பைபிள் மற்றும் அல் குர்ஆன் உள்ளது. இந்தக் காட்சிப்படுத்தல் வழியாக, எங்களுக்கும் ஒரு தெளிவு கிடைக்கின்றது” என்றார். இது எமக்கு கிடைத்த மிகப் பெரிய பின்னூட்டல். காரணம் இதனை நான் அவரோடு உரையாடிய போது என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

“இயேசுவின் இன்றைய உண்மையான சீடர்களும், அவருடைய அஹிம்சையை பற்றிய படிப்பினையை தழுவிக் கொள்பவர்களாக இருக்கவேண்டும். அன்பு நண்பர்களே உங்கள் நிறுவுனர் புத்த பெருமான் வன்முறையற்ற சமாதானத்தின் செய்தியை பறைசாற்றினார். எமது இரு மதங்களும் தனித்துவத்தை கொண்டிருப்பதை நாம் அறிகின்றோம்” (திருப்பீடத்தின் 2017ம் ஆண்டிற்கான வெசாக் செய்தி) எனவே தனித்துவமான இருபெரும் மதங்களான நாமும் பௌத்தர்களும் இந்நாட்டில் ஒரு நிலையான ஒன்றிப்பினை கொண்டுள்ளோம். இதனை வெளிப்படுத்தும் முகமாகவும், இன்னும் அதிகமான மக்கள் எமது கத்தோலிக்க திருப்பீடத்தை பற்றி அறிந்து கொள்ளவும் இது உதவியாக இருந்தது என்பது யாராலும் மறுக்க முடியாது.

இக்கண்காட்சியின் நோக்கமானது, பௌத்த மக்களுக்கு எமது மதத்தையும், அதன் தனித்துவத்தையும், நாங்கள் அவர்களோடு கொண்டுள்ள நெருங்கிய உறவு பற்றியும் தெளிவுபடுத்துவதாகும். எனவே தான் இதனை மக்கள் வந்து பார்வையிட்ட போது, மிகவும் சிறப்பான ஒரு நிகழ்வு என்பதை சுட்டி காட்டி எமது செயற்பாடுகளை வரவேற்றார்கள். திருப்பீடத்தின் வெசாக் செய்தியும் மும்மொழிகளில் அச்சிட்டு மக்களிடையே பகிர்ந்து கொடுக்கப்பட்டது. இது ஒரு உன்னதமான தருணமாகவே நான் கருதுகின்றேன். இதுபோன்ற விடயங்களை ஒழுங்கு செய்யும் போது, எமது சமாதானத்தின் தனித்துவத்தையும், புனிதத்துவத்தையும் நாம் மதிக்கலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இக்கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட முக்கியமான ஆறு விடயங்களை பற்றி காணலாம். இது மிகவும் குறுகிய தகவலே. எனினும் மக்களுக்கு சிறிதளவேனும் இது பற்றி தெளிவுபடுத்துவதே இதன் நோக்கம். கண்காட்சி கூடத்தின் உட்பக்கம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை வருகையின் படங்களும், மடு தேவாலய படங்களும், உரோமை புனித பேதுருவின் பசிலிக்காவும், இலங்கையில் நடைபெற்ற பல்சமய உரையாடலின் படங்களும் காட்சிப்படுத்தப்பட்டன.

### பேதுருவின் அரியணையும், வத்திக்கான் மாநிலமும்



பல சந்தர்ப்பங்களில் பேதுருவின் அரியனை வத்திக்கான் என தவறுதலாக கருதப்படுகின்றது. அவை சமமானவையல்ல. வத்திக்கானும், பேதுருவின் அப்போஸ்தலிக்க அரியணையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டது. பேதுருவின் அப்போஸ்தலிக்க அரியனை பழமையானது. வத்திக்கான் 1929ம் ஆண்டு நிறுவப்பட்டது. தூதுவர்கள் பேதுருவின் அரியணைக்கே அனுப்பப்படுகிறார்கள். இரண்டும் இறையாண்மை கொண்ட போதும் சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்றுள்ளன. எனினும் பேதுருவின் அப்போஸ்தலிக்க அரியனை மாத்திரமே இறையாண்மையின் வல்லமையை பயன்படுத்துகின்றது.

### வத்திக்கான்



சனத்தொகையையும், அளவினையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அகில உலகின் சுதந்திரமான மிகச்சிறிய மாநிலம் வத்திக்கான் நகரமாகும். இது 44 ஹெக்டேயர் பரப்பளவில் அமைந்திருக்கின்றது. அதன் சுவர்களும் புனித பீட்டர் சதுக்கத்தின் இரு இறக்கைகளையும் இணைக்கும் Trauertine (வெண்கள் பதிக்கப்பட்ட) நடைபாதை வரையும் அதன் எல்லையை நிர்ணயிக்கும்.

### திருத்தந்தையின் வேறு பெயர்கள் / பதவிகள்



- இயேசுக்கிறிஸ்துவின் பிரதிநிதி
- அப்போஸ்தலர்களின் தலைவரின் வழிவருபவர்
- சர்வதேச திருச்சபையின் உன்னத தலைவர்
- இத்தாலியின் தலைமைக் குரு
- உரோம் மகாணத்தின் தலைநகர் பேராயர்
- வத்திக்கான் மாநில அரசர்
- இறையூழியர்களின் ஊழியன்

### திருத்தந்தையின் சுவிஸ் பாதுகாப்புப் படை



1506ம் ஆண்டு 2ம் ஜீலியஸ் திருத்தந்தையினால் திருத்தந்தையின் சுவிஸ் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டது. 7ம் கிளமெண்ட் திருத்தந்தையின் காலத்தில் அதாவது 1527ல் உரோமாபுரி எதிரிகளால் தாக்கப்பட்டது. அத்தாக்குதலின் போது சுவிஸ் பாதுகாப்பு படையினர் 189 பேரில் 42 பேர் மாத்திரமே உயிர் தப்பினர். இப்படையினர் மிகவும் தைரியத்துடன் திருத்தந்தையுடன் இருந்து அவரை புனித அஞ்சலோ எனும் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர்.

### கிறிஸ்தவம் அல்ல சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய ஆலோசனை சபை



கிறிஸ்தவமல்லா சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவை வளர்ப்பதற்கான கத்தோலிக்க திருச்சபையின் மத்திய அலுவலகம் கிறிஸ்தவமல்லா சமயங்களோடு திருச்சபைக்குள்ள உறவு பற்றிய ஆலோசனை சபை ஆகும். இது திருத்தந்தை 6ம் சின்னப்பரினால் நிறுவப்பட்ட ஒன்றாகும். இதன் முக்கிய நோக்கமானது கத்தோலிக்கர்களுக்கும் ஏனைய சமயங்களை சார்ந்தவர்களுக்கும் இடையே புரிந்துணர்வு மதிப்பு மற்றும் ஒற்றுமையை வளர்ப்பதாகும்.

### திருத்தந்தையின் பிரதிநிதி



அதிவண. பியரே நகுயென் வென் ரொட். இவர் 1949ம் ஆண்டு சித்திரை மாதம் 15ம் திகதி வியட்னமில் Thu Dan mot எனும் நகரில் பிறந்தார். 1974ம் ஆண்டு பங்குனி 24ம் திகதி குருத்துவம் பெற்றார். 2003ம் ஆண்டு தை மாதம் 06ம் திகதி திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரினால் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார் 2014ம் ஆண்டு இலங்கைக்கு வருவதற்கு முன் லெனின், ரோகோ, சாட், மத்திய ஆபிரிக்கா, சொஸ்டா ரிக்கா ஆகிய நாடுகளில் பணிபுரிந்தார்.

**படங்கள் மற்றும் தகவல்**
**சகோ. டிலோய்ட்சன் பெர்னாண்டோ**

# “மரியன்னையுடன் நம்பிக்கையின், அமைதியின் திருப்பயணியாக”

## என்ற தலைப்பில் நடைபெற்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 19வது வெளிநாட்டுத் திருத்தூதுப்பயணம்

இயேசுவின் தாய் அன்னை மரியா, அற்புதங்களின் அன்னை. இவர், உலக வரலாற்றில், பல தருணங்களில், பல்வேறு இடங்களில் தோன்றி, பல புதுமைகளை நிகழ்த்தி, உலகினரின் வாழ்வு நெறிப்பட, செய்திகளை வழங்கியுள்ளார். இக்காலத்திலும், இவர் தொடர்ந்து காட்சிகள் அளித்து வருகிறார் என அறிகிறோம். இவ்வாறு அன்னை மரியா அளித்துள்ள நூற்றுக்கணக்கான காட்சிகளில், வேளாங்கண்ணி, லூர்து, பாத்திமா, குவாதலூப்பே, அப்பரெசிதா போன்ற ஊர்களில் இடம்பெற்ற காட்சிகள், மக்கள் மத்தியில் மிகவும் பிரபலமானவை. 1914ம் ஆண்டு ஆடி 28ம் திகதி தொடங்கிய அந்த மாபெரும் போர், அதாவது முதல் உலகப் போர் நடந்துகொண்டிருந்த காலம் அது. ஐரோப்பாவில் தொடங்கிய அந்தப் போரில், ஆறு கோடிக்கு மேற்பட்ட ஐரோப்பியர் உட்பட, ஏழு கோடிக்கு அதிகமான இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். 1918ம் ஆண்டு கார்த்திகை 11ம் திகதி நிறைவுக்கு வந்த அந்தப் போரில், ஒன்பது கோடிக்கு மேற்பட்ட இராணுவத்தினரும், ஏழு கோடிக்கு மேற்பட்ட அப்பாவி குடிமக்களும் இறந்தனர். இந்தப் போர் நடந்துகொண்டிருந்த சமயத்தில், 1917ம் ஆண்டு கார்த்திகையில், இரஷ்யாவின் மாஸ்கோவில் விளாடுமீர் லெனின் என்பவர், சோவியத் யூனியன் என்ற ஒரு பகுதியை உருவாக்குவதற்கு, ஒரு கம்யூனிசப் புரட்சிக்குத் தயாராகிக் கொண்டிருந்தார். இப்பூமியில் வாழும் ஏறக்குறைய பாதி மக்கள், இந்த வளையத்திற்குள் வரவேண்டிய நிலை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. போர்த்துக்கல் நாட்டிலும், அருள்பணியாளர்க்கு எதிரான ஒரு போக்கு நிலவியது. அக்காலக்கட்டத்தில், இவ்வுலகில் நிலவிய அறநெறி மற்றும், சமூகத் தீமைகளுக்கு மாற்று மருந்தை வழங்குவதற்கு, விண்ணகம் மண்ணகத்திற்கு இறங்கி வந்தது. அந்நிகழ்வுதான், போர்த்துக்கல் நாட்டின், பாத்திமாவில், இறைவனின் தாயாம் அன்னை மரியா, லூசியா தோஸ் சாந்தோஸ், இவருடைய உறவினர்களான பிரான்சிஸ் மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ ஆகிய மூன்று இடையர் சிறாருக்குக் காட்சியளித்து, உலகினர் மனம் மாற வேண்டியதன் அவசியத்தை தெரிவித்தார். அதற்கு மக்கள் செய்யவேண்டிய காரியங்களையும் இச்சிறார் வழியாக வெளிப்படுத்தினார். இந்நிகழ்வின் நூற்றாண்டு கொண்டாட்டங்களின் நிறைவு, வைகாசி 13, சனிக்கிழமையன்று பாத்திமாவில் நடைபெற்றது. இதனை தலைமையேற்று நடத்துவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வைகாசி 12, வெள்ளி பிற்பகலில் வத்திக்கானில், தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்திலிருந்து புறப்பட்டு, உரோம் மேரி மேஜர் பசிலிக்கா சென்று, இத்திருத்தூதுப் பயணத்திற்காக அன்னை மரியாவிடம் செபித்த பின் போர்த்துக்கல் நாட்டு பாத்திமா நகரை வந்தடைந்தார்.

## பாத்திமா அன்னைக்கு முன் திருத்தந்தை எழுப்பிய செபம்


வாழ்க, புனித அரசியே! பாத்திமாவின் புனித கன்னியே! மாசற்ற இதயம் கொண்ட பெண்மணியே! எங்கள் தஞ்சமே, இறைவனுக்குச் செல்லும் எங்கள் வழியே! உமது கரங்களிலிருந்து வரும் ஒளியின் திருப்பயணியாக வந்துள்ள நான், மனித வரலாற்றின் ஒவ்வொரு இடத்திலும், நேரத்திலும் உழைக்கும் தந்தையாம் இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

அமைதியின் திருப்பயணியாக, எங்கள் அமைதியாக விளங்கும் கிறிஸ்துவை நான் புகழ்கிறேன். உலகின் அனைத்து மக்களும் ஒரே மனமுடையோராய் வாழ வேண்டுகிறேன். நம்பிக்கையின் திருப்பயணியாக, ஓர் இறைவாக்கினராக, தூதராக, அனைவரின் காலடிகளைக் கழுவ வந்துள்ளேன்.

வாழ்க, இரக்கத்தின் அன்னையே! வெண்ணிற ஆடை உடுத்திய பெண்மணியே! நூறு ஆண்டுகளுக்கு முன், இவ்விடத்தில், இறைவனின் இரக்கத்தை அனைவரும் அறியும்படி செய்தீர். உமது ஒளிமிகுந்த உடையைப் பார்க்கிறேன். வெண்ணிற உடை உடுத்திய ஆயர் என்ற முறையில், திருமுழுக்கு என்ற ஒளியால் உடுத்தப்பெற்று, இறைவனில் வாழவும், அமைதியைப் பெறவும், கிறிஸ்துவின் மறையுண்மைகளைச் செபிக்கும் அனைவரையும் இங்கு நினைவுகூருகிறேன்.

வாழ்க, இனிமையே, வாழ்க! எங்கள் நம்பிக்கையே வாழ்க! திருப்பயணியான கன்னியே, உலகின் அரசியே, வானக இல்லத்தை நோக்கி பயணம் செய்யும் ஆண், பெண் அனைவரின் மகிழ்வை, உமது மாசற்ற இதயத்தில் வைத்திருப்பவரே! கண்ணீர் பள்ளத்தாக்கில் அழுது புலம்பும் மனித குடும்பத்தின் துயரங்களை, உமது மாசற்ற இதயத்தில் வைத்திருப்பவரே! நீர் திருப்பயணியாக இருந்ததுபோல், உமது மகுடத்தின் ஒளியால் எங்களை அழகுபடுத்தி, எங்களையும் திருப்பயணிகளாக மாற்றியருளும். கன்னிமை குன்றாத உம் புன்சிரிப்பால், திருஅவையின் மகிழ்வை வாழவைத்தருளும். உயர்த்திய கரங்களோடு நீர் எழுப்பும் செபத்தால், அனைத்து மக்களையும் ஒரே மனித குடும்பத்தில் இணைத்தருளும்.

இரக்கமும், அன்பும், இனிமையும் நிறைந்த கன்னி மரியே! பாத்திமாவின் செபமாலை அரசியே! அருளாளர்களான பிரான்சிஸ்கோ, ஜசிந்தா மற்றும் நற்செய்தியை பறைசாற்ற தங்களையே அர்ப்பணித்துள்ளோரின் எடுத்துக்காட்டுகளை நாங்களும் பின்பற்ற உதவியருளும். இவ்வாறு, நாங்கள், எங்கள் திருப்பயணத்தில் எதிர்கொள்ளும் சுவர்களைத் தகர்த்து, எல்லைகளைக் கடந்து, சமுதாய விளிம்புகளில், இறைவனின் நீதியையும், அமைதியையும் அறியச் செய்வோமாக. செம்மறியின் இரத்தத்தால், இன்றைய




உலகின் போர்களில் சிந்தப்படும் இரத்தத்தால் கழுவப்பெற்ற வெண்ணாடை அணிந்த திருஅவையாக நாங்கள் விளங்குவோம். இறைவன் வாழ்கிறார், மக்கள் நடுவே வாழ்கிறார் நேற்றும், இன்றும், என்றும் வாழ்கிறார் என்பதை ஒளிமிகுந்த தூணாக நீர் வெளிப்படுத்தியதைப்போல், நாங்களும் ஒளிமிக்க தூண்களாக இருப்போமாக!

ஆண்டவரின் அன்னையே! பெண்களுள் ஆசீர் பெற்றவரே! நீரே அனைத்து தீமைகளையும் வெல்பவர், நீரே, எம் மக்களின் மாண்பு. இரக்கம் நிறைந்த தந்தையின் அன்பை எடுத்துரைக்கும் இறைவாக்கே, மகனின் நற்செய்தியைச் சொல்லித்தரும் ஆசானே,

உமது மாசற்ற இதயம், பாவிகளுக்கு அடைக்கலமாகவும், இறைவனிடம் அழைத்துச் செல்லும் வழியாகவும் இருக்கட்டும். என் சகோதர, சகோதரிகளுடன் ஒன்றித்து, நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய புண்ணியங்கள் வழியே என்னையே உம்மிடம் கையளிக்கிறேன். என்னையே இறைவனுக்கு அர்ப்பணமாக்குகிறேன். பாத்திமாவின் செபமாலை கன்னியே, இறுதியாக, உமது கரங்களிலிருந்து வரும் ஒளியால் சூழப்பட்டு, நான் ஆண்டவரை என்றென்றும் மகிமைப்படுத்துவேன். ஆமென்.

## பாத்திமா திருத்தலத்தில் நூற்றாண்டுவிழா திருப்பலி

போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா என்ற ஊரிலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திலுள்ள கோவா த இரியா என்ற இடத்தில், 1917ம் ஆண்டு வைகாசி 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று, லூசியா, பிரான்சிஸ்கோ, ஜசிந்தா ஆகிய மூன்று சிறாரும், ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில், அன்னை மரியா அச்சிறாருக்கு முதல் முறையாக காட்சியளித்தார். இக்காட்சி நடைபெற்ற நூற்றாண்டு பெருவிழா 2017ம் ஆண்டு வைகாசி 13, சனிக்கிழமையன்று சிறப்பிக்கப்பட்டது. இப்பெருவிழாவுக்காக, இவ்வெள்ளி மாலையில் பாத்திமா சென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காட்சிகள் சிற்றாலயத்தில் செபித்து, அன்னையின் திருவுருவப் பொற்பாதத்தில், இலைகளுடன் மூன்று பொன்ரோஜாக்கள் நிறைந்த மலர்க் கொத்து ஒன்றைச் சமர்ப்பித்து, கார்மேல் நம் அன்னை தியான இல்லம் சென்றார். அவ்வில்லத்தில் இச்சனிக்கிழமை காலையில், போர்த்துக்கல் நாட்டின் பிரதமர் அந்தோனியோ லூயிஸ் சாந்தோஸ் த கோஸ்தா அவர்களைச் சந்தித்துப் பேசினார் திருத்தந்தை. மேலும், நான்கு தலைமுறைகளாக, ஈராக், லிபியா, இத்தாலி எனப் புலம்பெயர்ந்து, தற்போது பாத்திமாவில் வாழும் Amina என்ற பாலஸ்தீனக் குடும்பத்தினரையும், அந்த இல்லத்தில் சந்தித்தார் திருத்தந்தை. அந்த தியான இல்லத்திற்கு, வெள்ளியாலான, இயேசுவின் இறுதி இரவுணவு படம் ஒன்றைப் பரிசாக அளித்தார். பின்னர் அங்கிருந்து இருநூறு மீட்டர் தூரத்திலுள்ள செபமாலை அன்னை பசிலிக்கா சென்றார் திருத்தந்தை. அன்னை மரியாவை காட்சியில் கண்ட அந்த மூன்று இடையர் சிறாரும், 1917ம் ஆண்டு வைகாசி 13ம் திகதியன்று விளையாடிக்கொண்டிருந்தபோது, திடீரென அந்த ஒளியைப் பார்த்த இடத்தில்தான் இந்த பசிலிக்கா கட்டப்பட்டுள்ளது. இங்குள்ள அருளாளர்கள் பிரான்செஸ்கோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ ஆகிய இருவரின் கல்லறைகளில் செபித்தார் திருத்தந்தை. பின்னர், அப்பசிலிக்காவுக்கு முன்னுள்ள பிரம்மாண்டமான வளாகத்தில் காலை உள்ளூர் நேரம் காலை பத்து மணிக்கு, அதாவது இலங்கை நேரம் பிற்பகல் 2.30 மணிக்கு, பாத்திமா அன்னை விழாத் திருப்பலியை ஆரம்பித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இப்பெருவிழாத் திருப்பலியில், அருளாளர்கள் பிரான்செஸ்கோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ ஆகிய இருவரையும் புனிதர்கள் என அறிவித்தார் திருத்தந்தை.

இச்சிறார், திருஅவை வரலாற்றில், புனிதர்களாக உயர்த்தப்பட்டிருப்பவர்களுள் இளமையானவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள். திருத்தந்தை, இவர்களைப் புனிதர்களாக அறிவிப்பதற்கு முன், பாத்திமா ஆயர் அந்தோனியோ மார்த்தோ அவர்கள், இச்சிறார் புனிதர்களின் வாழ்க்கை வரலாறை, சுருக்கமாக வாசித்தார். வளாகத்தில் பெருவெள்ளமென கூடியிருந்த விசுவாசிகள் முன்னிலையில், பிரான்சிஸ்கோ. ஜசிந்தா ஆகிய இரு இடையர் சிறாரைப் புனிதராக அறிவித்த திருத்தந்தை, இத்திருப்பலியில் மறையுரை வழங்கினார்.




## பாத்திமா அன்னை நூற்றாண்டுவிழா திருப்பலியில் மறையுரை

அன்பு சகோதர, சகோதரிகளே, “பெண் ஒருவர் காணப்பட்டார் அவர் கதிரவனை ஆடையாக அணிந்திருந்தார்” (திருவெளிப்பாடு 12:1) என்று திருவெளிப்பாடு நூலில் வாசிக்கிறோம். அந்தப் பெண் ஒரு மகனை ஈன்றெடுக்கும் நிலையில் இருந்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. நற்செய்தியில், இயேசு தன் சீடரிடம், “இவரே உம் தாய்” (யோவான் 19:27) என்று சொல்வதைக் கேட்கிறோம். நமக்கொரு தாய் இருக்கிறார். அவர், மிக அழகானப் பெண்மணி என்பதை, நூறு ஆண்டுகளுக்கு முன், பாத்திமாவில் காட்சி கண்டவர்கள் உணர்ந்தனர். நமது தாய், கடவுள் அற்ற வாழ்வைக் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார். இறைவனின் ஒளி நமக்குள் உறைந்து, நம்மைக் காக்கிறது என்பதை நமக்கு நினைவுறுத்த மரியா வந்தார். லூசியா எழுதியுள்ள நினைவுகளில், அவர்கள் மூவரும் ஒளியால் சூழப்பட்டனர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இங்கு வந்துள்ள பல ...

தொடர்ச்சி 15ஆம் பக்கம்





**இயேசு ஒரு கதையின் மூலம் ஒருவன் மனம் திரும்பி விட்டால் பரலோகத்தில் அதிக சந்தோஷம் உண்டாகும் என்று கூறினார். இதை லூக் 15: 3-10ஐ வாசித்து படத்திற்கு ஏற்ற வாக்கியங்களை எழுதுங்கள்.**








ஆக்கம் : M. ரிக்ஷான் டிலான், தரம் - 9, புனித மரியாள் மறைப்பாடசாலை, மட்டக்குளி



ஆக்கம் : R. கிறிஸ் அலெக்ஸ், தரம் - 9, புனித மரியாள் மறைப்பாடசாலை, மட்டக்குளி




ஆக்கம் : N. யூட் மெக்சன், தரம் - 9, புனித லூசியாள் கல்லூரி

# அன்னையர் தின வாழ்த்து

**வைகாசி 14 அன்னையர் தினம்**



அம்மா நீ அன்பு என்ற பெயரில் உருவெடுத்தாய்
ஆரமுதுடன் அறிவும் ஊட்டியே எம்மை வளர்த்தாய்
இளமைசேர் எழிலுடன் மனவலிமையும் தந்தாய்
ஈத்து வந்து நெஞ்சில் இரக்கமுமாய் நின்றாய்
உயர் குறிக்கோள் உள்ளத்தில் பதிய வைத்தாய்
ஊன் உறக்கமின்றி உழைத்தே
எமை உயர வைத்தாய்
எண்ணிய யாவையும், திண்ணியமாய் முடித்தாய்
ஏற்றமுடன் வாழ்க்கை எமக்கு இனிதே அமைத்தாய்!
ஐக்கியமானாய் எம்மில் அழியா உருவாய்
ஒப்புவமை இல்லா உறவானாய் எமக்கு!
ஓயாது எம் உயர்வில் உம் சிந்தைதனை வைத்தாய்
ஔடதமும் ஆனாய் வாழ்க்கை வலிகளில் - நின்
அன்பிற்கு ஈடு இணை இவையாகுமோ - அம்மா.

# எல்லாம் கூடும்



ஒரு பையனுக்கு கணிதப் பாடமே வரவில்லை. ஆசிரியர் எத்தனை பாடுபட்டு கற்பித்தும், அந்தப் பையனால் கணிதப் பாடத்தில் தேர்ச்சி பெறவே முடியவில்லை. "உங்கள் மகனுக்கு கணிதப் பாடம் வரவே வராது எனவே பாடசாலையை விட்டு அவனை நிறுத்திக் கொண்டு வேறு ஏதாவது கைத்தொழில் கற்றுக் கொடுங்கள்" என்று அனுப்பி விட்டார்.

அந்த அம்மா தன் பிள்ளையை வீட்டுக்குக் கூட்டி வந்தாள். "மகனே உறுதியாக நம்பு, உன் நம்பிக்கை உன்னை உயர்த்தும்" என்று கூறி ஓராண்டு முழுவதும், வீட்டிலேயே அவனுக்கு கணிதத்தை மிக எளிய முறையில் முதலிலிருந்து தொடங்கி புரிய வைத்துக் கற்பித்தாள். ஓராண்டிற்குள் அந்த மகன் அந்தப் பாடத்திலே தேர்ச்சி பெற்றுவிட்டான். அடுத்த வருடம் அவனை வேண்டாமென வீட்டிற்கு அனுப்பிய ஆசிரியரின் கைகளிலிருந்தே பரிசை வாங்கி கரவொலிகளுக்கிடையே மேடையை விட்டு இறங்கி தன் வெற்றியை நம்பிக்கையூட்டி தன்னை உயர்த்திய தாய்க்கு காணிக்கையாக்கினான்.


**நம்பி** முயற்சிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும்.

## கண்டுபிடியுங்கள்!



*இரண்டு படங்களுக்கும் இடையே இருக்கும் ஐந்து வித்தியாசங்களை வட்டமிட்டு காட்டுங்கள்!*

## வர்ணம் தீட்டுங்கள்






# சிறகுகள் வேண்டும்

இரண்டு சிறிய சிறகுகளை வைத்துக் கொண்டு ஆகாயத்தில் ஆனந்தமாகப் பறக்கும் பறவைகளைப் பார்த்து அதிசயப்படும் மனிதன், தனக்கும் அதுபோன்ற சிறகுகள் இருந்தால் நன்றாக இருக்குமே என ஆசைப்படுவதுண்டு. ஆனால் நமக்கு இல்லையே என்ற ஆதங்கத்தோடு நிறுத்திக் கொள்வான். மனிதனின் இயல்பான வாழ்க்கைக்கு அவை அவசியமில்லைதான். ஆனால் சாதனை மனிதனாக வெளிப்பட, பறந்து சென்று சாதிக்க சிறகுகள் வேண்டும்.

**தரையில் நடக்க கால்கள் வேண்டும்,**
**மரங்களில் தாவ கைகள் வேண்டும்,**
**கனவுகளில் மகிழ நல்மனம் வேண்டும்,**
**உயரத்தில் பறக்க சிறகுகள் வேண்டும்,**

மனிதன் தேட வேண்டியது பறவையின் சிறகுகள் அல்ல, அவனுக்குத் தேவைப்படுபவை மானசீகச் சிறகுகள்! அவற்றுள் ஒன்று தன்னம்பிக்கை. "தன்னால் முடியும்" என்று எண்ணும் மனிதனுக்கு மனதிலிருந்து முளைப்பது அது. அடுத்தது இறை நம்பிக்கை.

இந்த இரண்டும் மனிதர்களது புறக்கண்களுக்குத் தெரியாதவை. ஆனால் இந்த இரண்டும் அடையப் பெற்றவர்கள் ஆற்றும் செயல்கள் இயல்பான மனிதர்கள் செய்யும் செயல்களைவிட ஆச்சரியப்படும் அளவுக்கு அதிகமாக இருக்கும். இவ்விரு சிறகுகளையும் உடையவர்கள் இயல்பான மனிதர்களாக இருக்கமாட்டார்கள்.

இந்த இரண்டும் இருந்தால்...

**அதிக உயரத்துக்கும் பறந்து செல்லலாம்!**
**அடர்ந்த காடுகளையும் கடந்து செல்லலாம்!**
**ஏழு கண்டங்களையும் தாண்டிச் செல்லலாம்!**
**எந்த மனிதரையும் வசப்படுத்திக் கொள்ளலாம்.**

நம்பிக்கை உள்ளவனுக்குத் தான் கடவுளும் உதவுவார். நம்பிக்கை என்ற நார் நம்மிடம் இருந்தால் உதிர்ந்த பூக்களும்கூட வந்து ஒட்டிக் கொள்ளும் என்பர். ஏனெனில் நம்பிக்கைக்கு ஈர்ப்பு சக்தியான காந்த சக்தி உண்டு. இறை நம்பிக்கைக்கும் அதே ஈர்ப்பு சக்தி உண்டு. தலைக்கணம் இல்லாத தன்னம்பிக்கை நேர்மறை எண்ணங்களோடு தொடர்புடையது. நேர்மறை எண்ணங்கள் வான் வீட்டு கொடைகளோடும், கனிகளோடும் தொடர்புடையவை. எனவேதான் நம்பிக்கை உள்ளவனுக்குத் கொடுக்கப்படுகிறது. - இறை நம்பிக்கை என்ற அடுத்த சிறகு. ஆனால் இயற்கையின் மற்ற ஜீவராசிகளுக்கு இந்த நம்பிக்கைகள் இயல்பாகவே அமைந்திருக்கின்றன.

**அதிகாலை புறப்படும் பறவைக்கு**
**நம்பிக்கை இருக்கிறது...**
**வேண்டிய புழுக்கள் கிடைக்குமென!**
**நீண்டு பயணப்படும் நதிக்கு**
**நம்பிக்கை இருக்கிறது...**
**சங்கமமாகும்**
**கடல் உண்டு என!**
**பாறையைத் துளைக்கும் வேருக்கு**
**நம்பிக்கை இருக்கிறது...**
**ஆழத்தில் நீர் அகப்படுமென!**
**நேர்மறை எண்ணம் உடையோருக்கு**
**நம்பிக்கை இருக்கிறது...**
**கடவுளால் ஆகாதது எதுவுமில்லையென!**

மனிதனின் இந்த அதிசய மானசீகச் சிறகுகள் பிறர் கண்களுக்குத் தெரிவதில்லை. எல்லாருக்கும் தேவைப்படுவதும் இல்லை. ஏனெனில் தன்னால் முடியுமென எல்லாரும் நம்புவதில்லை. இறைவன் உதவுவார் என்ற நம்பிக்கையும் பலருக்கு இல்லை. படுத்தே இருக்க விரும்புபவனுக்குச் சிறகுகள் தேவையுமில்லை. சிறகுகள் வேண்டும் என்று விரும்புவது பேராசை அல்ல, சில வித்தியாசமான செயல்களுக்குச் சிறகுகள் வேண்டும்.

ஒற்றைக் கையை வைத்துக்கொண்டு அளவான செயல்களைச் செய்வது போல, ஒற்றைக் காலால் சிலவற்றைச் சாதிப்பது போல ஒற்றைச் சிறகாலும் சிலவற்றைச் சாதிக்க முடியும். இரண்டு சிறகுகளும் இருந்தால் மட்டுமே நீண்ட தூர பயணமும், மேல்நோக்கிய பயணமும் சாத்தியமாகும்.

தன்னம்பிக்கை மனிதனை உயர்த்தும். அதனோடு இறை நம்பிக்கையும் இணையும்போது அமையும் சாதனை வான் அளவுக்கு உயர்ந்ததாக மாறும்.

பறவையின் சிறகுகள் மென்மையானவை. அவை பாரமானவற்றைச் சுமந்து செல்வதில்லை. மழைத்துளி பட்டால் கூட குளிர்ச்சியாக இருக்கிறதே என வைத்துக் கொள்வதில்லை.உதறித் தள்ளி விடுகிறது. தன்னம்பிக்கை உள்ளவன் பிறர் உதவிகளையும், பிறரது அனுதாபங்களையும் எதிர்பார்க்க மாட்டான். அது மட்டுமல்ல, பாரமாக மனதை அழுத்தும் பழிச்சொற்கள், வீண் புரளிகள் போன்றவற்றை எண்ணி எண்ணி வேதனைப்பட்டுக் கொண்டிருக்க மாட்டான். விரக்தி, தாழ்வு மனப்பான்மை, சந்தேகம், கெட்ட எண்ணம், கோபம், பழிவாங்கல், காமம் இவற்றைத் தன் பக்கம் நெருங்கவிடமாட்டான். சுமக்கவும் விரும்பமாட்டான். இவை இருந்தால் சிறகுகள் பாரமாகி, உயர பறக்க முடியாதென அவனுக்குத் தெரியும்.



"கால்களைவிடச் சிறகுகள் மென்மையானவை. ஆனாலும் சிகரங்களைத் தொட சிறகுகள் சிறந்தவையே" என்கிறார் சுதங்கமா முனிவர். எந்த மலையைப் பார்த்தாலும் அடிவாரத்தில் நின்று வேடிக்கைப் பார்க்கும் வயது உன்னுடையதல்ல. மாணவனே, மலையில் ஏறு! சிகரத்தைத் தொடு!

நல்ல வேலையைப் பெறுவது உனது விருப்பமென்றால் அதில் சிகரத்தைத் தொடு. நல்ல வசதியில் வாழ்வது உனது நோக்கமென்றால் அதில் சிகரத்தைத் தொடு, நல்ல சமூகவாதியாக உயர்வது உனது குறிக்கோள் என்றால் அதில் சிகரத்தைத் தொடு. நல்ல ஆன்மீகவாதியாக மாறுவது உனது இலக்கு என்றால் அதில் சிகரத்தைத் தொடு! அவரவர் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப தெரிவு செய்யும் மலையும், அதன் சிகரமும் வேறுபடும். எந்த மலையாக இருந்தாலும் ஒவ்வொன்றிலும் சிகரத்தைத் தொடுமுன் சிரமங்களும், தடைகளும், சறுக்கல்களும், ஆபத்துக்களும் உண்டு. உழைப்பு, முயற்சி, பயிற்சி அதைப் பற்றிய அறிவு... இவைகள் இல்லாமல் சிகரத்தை அடையமுடியாது.

சிகரத்தில் ஏற மனவுறுதி வேண்டும். சிரமம் இல்லாமல் சிகரம் இல்லை. ஏறும்போது கீழே கீழே சறுக்கினாலும் நம்பிக்கையும், விடாமுயற்சியும் வேண்டும். சிகரங்களைத் தொட விரும்புவோருக்கு சிறகுகள் வேண்டும். எல்லா சிகரங்களும் ஒன்றுபோல் உடையவை அல்ல. மலைக்கு மலை ஏற்ப சிகரங்கள் மாறும். எந்தச் சிகரத்தைத் தொட வேண்டுமோ அதற்கான சிறகுகள் வேண்டும்!.

**துன்பக் காற்றை எதிர்த்துப் பறக்க**
**துவளாத சிறகுகள் வேண்டும்!**
**உயர்ந்த சிகரங்களின் உச்சியை அடைய**
**வலுவான சிறகுகள் வேண்டும்!**
**உருண்ட உலகை சுதந்திரமாகச் சுற்றிவர**
**விடுதலையின் சிறகுகள் வேண்டும்!**
**வரும் எதிர்மறை எண்ணங்களை விரட்டிவிட**
**நம்பிக்கையின் சிறகுகள் வேண்டும்!**
**காணும் அநீதியை எதிர்த்துப் போராட**
**நீதியின் சிறகுகள் வேண்டும்!**
**விளிம்பிலுள்ளோரை விரைந்து சென்று காத்திட**
**கருணையின் சிறகுகள் வேண்டும்!**

ஒவ்வொரு பறவைக்கும் ஒவ்வொரு விதமான சிறகுகள் இருப்பதுபோல, ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு விதமான மானசீகச் சிறகுகள் வேண்டும். காக்கையின் சிறகில் கழுகின் குஞ்சை சுமக்க முடியாது. சிட்டுக் குருவியின் சிறகுகளை வைத்துக் கொண்டு நாம் பருந்தைப் போல் வட்டமிட முடியாது. பருந்தாகக் காற்றில் பறக்க பருந்தின் சிறகுகளும், கழுகாக மிக உயரத்தில் பறக்க கழுகின் சிறகுகளும் வேண்டும்.

நமக்குள் இருந்து நமது அகத்தைத் தூண்டு அகமாற்றம் அடையச் செய்து, நல்லது செய்ய வைக்கும் சக்தியே இறைவனின் சக்தி அல்லது பிரபஞ்ச அதிபதியின் சக்தி. நம்மைச் செயலாற்ற வைக்கும் அந்தச் சக்தியை முழுமையாக நம்புவதே இறை நம்பிக்கை. அந்த இறை நம்பிக்கை ஒருவனிடம் இருந்துவிட்டால்.

**வானத்து சக்திகள் அவனுக்கு வசப்படும்,**
**பஞ்சபூதங்கள் அவன் சொல்லுக்குக் கட்டுப்படும்**
**கல்தரையும் அவன் நடக்க பச்சைக் கம்பளம்**
**விரிக்கும்,**
**அவமதித்தவர்களும் அவன் வரவுக்குச் சிவப்பு**
**கம்பளம் விரிப்பர்!**

ஒரு மரத்துக்கு ஆணிவேர் போன்றது மனிதனுக்கு இறை நம்பிக்கை. ஆணிவேர் இருப்பது வரையில் புயல், சுனாமி, சூறாவளி போன்ற இடர்கள் வந்தாலும் மரம் கீழே சாயாது. ஆணிவேர் வெட்டப்பட்டால் மரம் சாய்வதைப் போல் இறைவனோடு உள்ள உறவு துண்டிக்கப்படும்போது மனிதனும் அவன் இயல்பிலிருந்து சாய்ந்து விடுவான். அறநெறிகளுக்கு உட்பட்ட வாழ்க்கை முறைதான் ஆண்டவனோடு உள்ள உறவைத் தக்க வைக்கும் நங்கூரம்.

தன்னம்பிக்கையும், இறை நம்பிக்கையும் தனித்தனியானவை அல்ல. இரண்டும் தொடர்புடையவை. சாதிக்க எண்ணும் மனிதனுக்கு இரண்டும் அத்தியாவசியமானவை. சிறகுகளில்லாமல் பறக்க முடியாது. சிறகுகளை இழந்தாலும் பறக்க இயலாது.

பலரும் சிறகொடிந்த பறவைகளாக இருப்பதால்தான் எதையும் சாதிக்க இயலாமல் இருக்கின்றார்கள். இந்தச் சிறகுகள் இரண்டும் நமக்குள் நலமாக இருந்தால்தான் நமது வெளிப்படையான செயல்கள் வெற்றி தருபவைகளாக வெளிப்படும்.

இந்தச் சிறகுகள் ஒடிந்திருந்தாலோ அல்லது சிறகுகளை இழந்திருந்தாலோ பலசாலிகளாக, புத்திசாலிகளாகத் தெரிந்தாலும் அவர்கள் பெயர் நிலைக்கும்படியாக எதையும் செய்திருக்கமாட்டார்கள்.

புறக்கால்கள் இல்லாமல், கைகள் இல்லாமல் கூட சிலர் செயற்கரிய சாதனைகளைச் சாதித்திருப்பது கண்ணுக்குத் தெரியாத இந்த அகச் சிறகுகளால்தான்!

ஒரு மனிதனுக்குள் உருவாகக்கூடிய வலிமையும், நம்பிக்கையும் வெறும் எண்ணங்களால் மட்டுமல்ல, தியானத்தாலும் வரும். அந்தத் தியானம் கூட மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை உணர வைக்க உதவும். இந்த இறை நம்பிக்கை உள்ளவனுக்கு எல்லாம் வசப்படுவது இதனால்தான்!

தன்னம்பிக்கையும், இறை நம்பிக்கையும் பெற்றிருப்பவர் எதற்கும் கடவுளோடு சவால்விட மாட்டார். படைத்தவனோடு சவால் விட்டு இதுவரை யாரும் சாதித்தது இல்லை. சண்டை போட்டிருக்கின்றார்கள், பக்தி மிகுதியால் உரிமையோடு வாதாடியிருக்கிறார்கள், ஆனால் இறைத்திட்டத்துக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்தார்கள். தன்னம்பிக்கையின் வெளி அடையாளமே பணிவுதான். தலைக்கனம் அல்ல.

1912ம் ஆண்டு டைட்டானிக் கப்பல் கடலில் தனது முதல் பயணத்தை ஆரம்பிக்கும்போது கடவுளால் கூட மூழ்கடிக்க வைக்க முடியாது எனச் சொல்லித்தான் ஆங்கிலேயர்கள் அதை கடலில் விட்டனர். தனது முதல் பயணத்திலேயே அது பெரிய பனிப்பாறையில் மோதி 1600 நபர்களின் உயிர்களைப் பறித்தது.

மாணவனே! சாதிக்க விரும்புவோருக்குச் சிறகுகள் வேண்டும். கண்களுக்குத் தெரியாத அந்த அகச்சிறகுகள் தன்னம்பிக்கையும், இறை நம்பிக்கையுமே.

**தவழ்ந்து கடக்கும் தூரத்தைவிட**
**நடந்து கடக்கும் தூரம் அதிகம்.**
**நடந்து கடக்கும் தூரத்தைவிட**
**ஓடி கடக்கும் தூரம் அதிகம்.**
**ஓடி கடக்கும் தூரத்தைவிட**
**பறந்து கடக்கும் தூரம் அதிகம்.**
**அதிக தூரத்தைப் பறக்க கடக்க**
**அகச் சிறகுகள் வேண்டும்!**

# எகிப்து பயணம், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்களுக்கு ஆசீர்வாதம்

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எகிப்து நாட்டுக்கு மேற்கொண்ட திருத்தூதுப் பயணம், அந்நாட்டின் கிறிஸ்தவர்கள் மற்றும், முஸ்லிம்களுக்கு, ஆசீர்வாதமாக இருந்தது என்று, அந்நாட்டு கத்தோலிக்கத் தலைவர்கள் கூறினர்.

கெய்ரோ நகரில், திருத்தந்தை மேற்கொண்ட, வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இத்திருத்தூதுப் பயணம், எகிப்தியரில் ஆழமான நல்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும், அந்நாட்டின் ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் மற்றும், முஸ்லிம்களுடன் உள்ள உறவை அதிகரித்துள்ளது என்றும், அருள்பணி Rafic Greiche அவர்கள் கூறினார்.

திருத்தந்தையின் 27 மணி நேர எகிப்து திருத்தூதுப் பயணம் பற்றி CNS செய்தியிடம் பேசிய, எகிப்து ஆயர் பேரவையின் பேச்சாளரான, அருள்பணி Greiche அவர்கள், அன்பு, அமைதி மற்றும் நம்பிக்கையின் செய்தியை திருத்தந்தை வழங்கினார் என்றார்.

பொதுவான திருமுழுக்கு பற்றி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், காப்டிக் ஆர்த்தடாக்ஸ் திருத்தந்தை, முதுபெரும் தந்தை 2ம் தவாத்ரோஸ் அவர்களும் இணைந்து வெளியிட்ட அறிக்கை, கிறிஸ்தவ ஒன்றிப்பு நடவடிக்கையில் மிகப்பெரிய முயற்சி என்றும், அருள்பணி Greiche அவர்கள் தெரிவித்தார்.




# எகிப்து திருத்தூதுப் பயணம்



வைகாசி 3ம் திகதி புதன்கிழமை காலை பத்து மணியளவில், வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் அமர்ந்திருந்த பல்லாயிரக்கணக்கான திருப்பயணிகள் மத்தியில் திறந்த காரில் வலம் வந்து, குழந்தைகளை முத்தமிட்டு, வாழ்த்தி மேடைக்குச் சென்றார் திருத்தந்தை பிரான்சிஸ். முதலில், மத்தேயு நற்செய்தி இரண்டாம் பிரிவிலிருந்து இந்தப் பகுதி பல மொழிகளில் வாசிக்கப்பட்டது. அக்காலத்தில், ஆண்டவருடைய தூதர் யோசேப்புக்குக் கனவில் தோன்றி, “நீர் எழுந்து குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக் கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில், குழந்தையை ஏரோது கொல்வதற்காகத் தேடப்போகிறான்” என்றார். யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார். ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார். இவ்வாறு, “எகிப்திலிருந்து என் மகனை அழைத்து வந்தேன்” என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறியது (மத்.2:13-15). அதன்பிறகு, சித்திரை 28, 29, தினங்களில் தான் மேற்கொண்ட எகிப்து நாட்டுத் திருத்தூதுப் பயணம் பற்றிய பசுமையான நினைவுகளை, பகிர்ந்து கொள்வதாகத் தெரிவித்து, புதன் பொது மறைக்கல்வியுரையைத் தொடங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அன்புச் சகோதர சகோதரிகளே! இறைவனின் உதவியால் எகிப்தில், இப்பயண நிகழ்வுகளை நிறைவு செய்தேன். அண்மையில் நான் மேற்கொண்ட எகிப்து திருத்தூதுப் பயணம், எகிப்து குடியரசின் அரசுத்தலைவர், காப்டிக் ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தை, அல் அசாரின் இஸ்லாம் மதத் தலைவர், காப்டிக் கத்தோலிக்க முதுபெரும் தந்தை ஆகியோரின் அழைப்பின்பேரில் நடைபெற்றது. இந்தப் பயணத்திற்குத் திட்டமிடல், அதனை நிர்வகித்து நடத்தல் என, எல்லாவற்றிக்கும் உதவிய அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள் பல. இஸ்லாம் மதத் தலைவருடன் நடத்திய சந்திப்பு, பன்னாட்டு அமைதிக் கருத்தரங்கில் நான் வழங்கிய செய்தி ஆகியவை, அமைதி, கல்வியின் கனி என்பதையும், இது, இவ்வுலகில் நம் இருப்பின் சமயக்கூறை மதிக்கும் ஞானத்திற்கும், மனிதப் பண்பிற்கும் நம்மை இட்டுச் செல்கின்றது என்பதையும் நினைவுபடுத்தியது. இறைவனுடன் நாம் மேற்கொள்ளும் உடன்படிக்கை, இறையன்பு மற்றும், அயலவர் அன்பு என்ற கட்டளையில் வேரூன்றப்பட்டுள்ளது. இது, நீதியும், அமைதியும் நிறைந்த பொது மக்கள் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு, நம் முயற்சிகளுக்குத் தூ-ண்டுதலாக அமைகின்றது. இம்முயற்சியில் நம் அனைவருக்கும் பங்கு உள்ளது. எகிப்தின் மாபெரும் கலாச்சார மற்றும், சமயப் பாரம்பரியம், அமைதியை ஏற்படுத்தும் இப்பணியில் ஒரு சிறப்புப் பங்கை அந்நாட்டிற்கு அளிக்கின்றது. காப்டிக் ஆர்த்தடாக்ஸ் முதுபெரும் தந்தை, திருத்தந்தை 2ம் தவாத்ரோஸ் அவர்களுடன் நான் நடத்திய சந்திப்பில், ஒன்றிப்புக்காக, உழைப்பதற்கு எங்கள் அர்ப்பணத்தை மீண்டும் உறுதி செய்தோம். அண்மைத் தாக்குதல்களில் பலியானவர்களுக்காக நாங்கள் இருவரும் இணைந்து செபித்தோம். எகிப்து கத்தோலிக்க சமூகத்திற்கு நிறைவேற்றிய திருப்பலியிலும், அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், குருத்துவ மாணவர்களுடன் நடத்திய சந்திப்பிலும், எகிப்தில் திருஅவையின் அழகைப் பார்த்தேன். நற்செய்தியில் கொண்டிருக்கும் நம்பிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுமாறு, அவர்கள் அனைவரையும் ஊக்கப்படுத்தினேன். முன்னொரு காலத்தில், எகிப்தில் தஞ்சம் புகுந்த திருக்குடும்பம், எகிப்து மக்களை, வளமையிலும், உடன்பிறந்த உணர்விலும், அமைதியிலும் பாதுகாத்து ஆசீர்வதிப்பதாக.

இவ்வாறு, புதன் மறைக்கல்வி உரையை நிறைவு செய்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளிலிருந்து இதில் கலந்துகொண்ட திருப்பயணிகளை வாழ்த்தினார் திருத்தந்தை. திருத்தூதர்களாகிய புனிதர்கள் பிலிப்பு, யாக்கோபு விழாவை இன்று நினைவுகூர்கின்றோம். உயிர்த்த கிறிஸ்துவை மகிழ்வோடு அறிவித்த இவர்கள், நம்மில் விசுவாசத்தை வளர்ப்பார்களாக, நற்செய்திக்கு சான்று நம்மை பகர ஊக்குவிப்பார்களாக. அன்னை மரியின் வணக்க மாதமான மே மாதத்தில், எளிமையான, அதே வேளையில் சக்திமிகுந்த செபமாலையை செபிக்கும்படி இளையோரிடம் சிறப்பு வேண்டுகோளை முன் வைத்தார். பின், அனைத்துப் பயணிகள் மற்றும், அவர்களின் குடும்பங்களின் மீது, நம் தந்தையாம் இறைவனின் அன்பிரக்கம் பொழியப்பட செபித்து, தனது அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.




## எகிப்து திருப்பயணிகளுக்கு வாழ்த்து தெரிவித்த திருத்தந்தை




புதன் மறைக்கல்வி உரைக்கு வருகை தந்திருந்த எகிப்து நாட்டு திருப்பயணிகளுக்கு தனிப்பட்ட வாழ்த்துக்களை திருத்தந்தை தெரிவித்தார். அரேபிய மொழி பேசும் திருப்பயணிகளை, குறிப்பாக, எகிப்திலிருந்தும், மத்தியக் கிழக்கு பகுதியிலிருந்தும் வருகை தந்துள்ள திருப்பயணிகளை வாழ்த்துவதாக, திருத்தந்தை இத்தாலிய மொழியில் கூறியதை, ஒருவர் அரேபிய மொழியில் மொழிபெயர்த்தார்.

தன் திருத்தூதுப் பயணத்தை சாத்தியமாக்கிய எகிப்து மக்களுக்கு தன் தனிப்பட்ட நன்றிகள் என்று திருத்தந்தை கூறிய வேளையில், “ùm el dùgna”, அதாவது, “உலகின் தாய்“ என்று எகிப்து நாட்டை அரேபிய மொழியில் குறிப்பிட்டார்.

புதன் மறைக்கல்வி உரையின் இறுதியில், இளையோர், நோயுற்றோர் மற்றும் புதிதாக திருமணம் செய்துகொண்டோர் இவர்களை குறிப்பிட்டு வாழ்த்தியபின், நாம் தொடங்கியுள்ள மரியன்னையின் வணக்க மாதமான மே மாதத்தில், எளிமையான, அதே வேளையில் சக்திமிகுந்த செபமாலையை செபிக்கும்படி இளையோரிடம் சிறப்பு வேண்டுகோளை விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## திருத்தந்தை உம் Tawadrosக்கு திருத்தந்தையின் வாழ்த்துரை

திருத்தந்தையே, அன்பு சகோதரரே!

சில நாட்களுக்கு முன்னர், உயிர்ப்புப் பெருவிழாவை ஒரே நாளில் கொண்டாடும் ஆசீரை, இவ்வாண்டு, நாம் அடைந்தோம். இப்போது, நாம் ஒன்றாக இணைந்து, உயிர்ப்பின் மகிழ்வைப் பகிர்ந்துகொள்கிறோம். இதற்காக நான் இறைவனுக்கு நன்றி சொல்கிறேன்.

நான் தலைமைப் பொறுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களில் என்னைச் சந்திக்க நீங்கள் உரோம் நகருக்கு 2013ம் ஆண்டு மே 10ம் தேதி வந்ததை இப்போது மகிழ்வுடன் நினைவுகூருகிறேன். காப்டிக் வழிபாட்டு முறையினருக்கும், கத்தோலிக்கருக்கும் இடையே உருவான நட்பின் நாள் என்று, அந்நாளை எண்ணிப்பார்க்கிறேன்.

கிறிஸ்தவ ஒன்றிப்பு நோக்கி நாம் மேற்கொண்டுள்ள இப்பயணத்தின் ஒரு மைல்கல்லாக, 1973ம் ஆண்டு, மே 10ம் தேதி, பேதுரு, மாற்கு திருப்பீடங்களுக்கிடையே உருவான ஒப்பந்தத்தை குறிப்பாக நினைவுகூர விழைகிறேன். நம்மிடையே நிலவும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் மத்தியில், இயேசு கிறிஸ்து, உண்மையான, முழுமையான கடவுள் என்றும், உண்மையான, முழுமையான மனிதன் என்றும் ஏற்றுக்கொள்வதில், அன்று நமக்குள் ஏற்பட்ட உடன்பாடு, மிக முக்கியமானது.


நாம் இறைவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதால், நாம் ஒவ்வொருவரும் நமது வழியிலேயே செல்வது குறித்து எண்ணாமல், இணைந்து செல்வது குறித்து சிந்திக்கவேண்டும். நமது கிறிஸ்தவ ஒன்றிப்பு, நாம் பயன்படுத்தும் சொற்கள், செயல்கள், பணிகள் இவற்றில் மட்டும் வெளிப்படாமல், நமது வாழ்வின் வழியாகவும் வெளிப்படவேண்டும்.

இணைந்து செல்லும் இப்பயணம் எப்போதும் எளிதாகவும், தெளிவாகவும் அமைவதில்லை. இருப்பினும் நாம் இப்பயணத்தை மேற்கொள்ள இறைவன் தூண்டுகிறார். நாம் மேற்கொள்ளும் இப்பயணத்தில், புனிதர்களும், மறைசாட்சிகளும் நம்முடன் துணை வருகின்றனர். காப்டிக் ஆர்த்தடாக்ஸ், மற்றும், கத்தோலிக்க சமுதாயங்களை சேர்ந்த நாம் அனைவரும், ஒரு பொதுவான மொழியைப் பேசுவதில், எளிதாக இணையமுடியும். அதுதான் பிறரன்பு என்ற மொழி. நாம் மேற்கொள்ளும் பிறரன்புப் பணிகளில் இருவரும் இணைந்து பணியாற்றுவது, நமது நம்பிக்கையைப் பறைசாற்றும். காப்டிக் ஆர்த்தடாக்ஸ் திருத்தந்தையாகிய நீங்கள், காப்டிக் கத்தோலிக்கத் திருஅவை மீது காட்டிவரும் அக்கறைக்கு நன்றி. கத்தோலிக்கத் திருஅவைக்கும், கீழை வழிபாட்டு முறை ஆர்த்தடாக்ஸ் சபைகளுக்கும் இடையே சென்ற ஆண்டு நிகழ்ந்த கூட்டத்திற்கு தாங்கள் ஏற்பாடு செய்ததற்கும் நன்றி.

➲15 பக்கம்

# புனித பிலிப் நேரி (1513 - 1595)

வைகாசி 26



இவர் புளாரன்ஸ் பட்டணத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். இறைவனுக்கு மாத்திரமே சேவை செய்த இவர் உரோமைக்குச் சென்று ஒரு பிரபுவின் பிள்ளைகளுக்கு கல்வி கற்பித்தார். கல்வி கற்பிக்கும் பொழுதே இவர் குருத்துவக் கல்வியையும் கற்றார். மக்களை ஏராளமாக மோட்சத்தில் சேர்க்க விரும்பிய இவர் ஒரு சபையை ஏற்படுத்தினார். திருப்பணிகளுக்கும், நோயாளிகளுக்கும் சேவை செய்வதே இச்சபையின் முக்கிய நோக்கம். ஆன்ம குருவுக்குக் கீழ்ப்படிந்து இவர் குருப்பட்டம் பெற்றார். குருக்களுக்கென்று ஒரு சபையை ஏற்படுத்தினார். தமது புண்ணிய வாழ்வால் நகர மக்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டாக விளங்கினார். நெடுநேரம் பாவசங்கீர்த்தனம் கேட்டு, அனேக பாவிகளை காப்பாற்ற ஆர்வத்துடன் உழைத்தார். எல்லோரையும் எப்போதும் ஊக்குவிப்பார். ஒரு பெரிய மனிதர் இவரைப் பார்க்க வந்தார். அருகில் இளைஞர்கள் கூச்சலிடுவதை பற்றி கேட்டதற்கு நானும் விரும்பவில்லை என்றாலும், “இளைஞர்கள் வேண்டுமானால் என் முதுகின் மேல் விறகு கீறட்டும். அவர்கள் பாவம் மாத்திரம் செய்யக்கூடாது” என்றார். ஒருமுறை ஒரு வாயாடிப் பெண்ணை சந்தைக்கு அனுப்பி, கோழி வாங்கி வரச் சொன்னார். வரும் வழியில் கோழியின் இறகுகளை பிய்த்துப்போட்டுக் கொண்டே வரச் சொன்னார். அவள் திரும்பி வந்ததும், “போய் அந்த இறகுகளை பொறுக்கிக் கொண்டு வா” என்றார். “அது முடியாத காரியம்” என்று அவள் சொன்னாள். “இதுபோலவே நீ பிறரைக் கெடுத்து பேசும் சொற்களையும் திரும்பப் பெற முடியாது, அவை கொடிய தீமைகளை விளைவிக்கின்றது” என்று கூறினார். திவ்விய நன்மை உட்கொண்டபின் நன்றி செலுத்தாமல் வெளியேறிய மனிதன் பின்னாலேயே செல்லும் படி எரியும் திரிகள் ஏந்திய இரண்டு சிறுவர்களை அனுப்பி அவனுக்கு நல்ல பாடம் கற்பித்தார். அதன் பின்னர் அவன் நன்மை வாங்கியதும் கோவிலிருந்து நன்றி செலுத்திய பின்னரே வெளியேறுவான். கல்நெஞ்சரான பாவி ஒருவரிடம் போய், “இன்று இரவு விளக்குகளை அணைத்து விட்டு கட்டிலின் நான்கு கால்களிலும் மெழுகுதிரி பற்ற வைத்து “இன்று இரவு நான் சாவேன். நேரே நரகத்துக்குப் போவேன். இதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை” என்று மும்முறை சொல்” என்றார். பாவி மனந்திரும்பினான்.

******

## கன்னிமரியாளின் மினவுதல் விழா




இவ்விழாவில் நான்கு நிகழ்ச்சிகளைக் கொண்டாடுகின்றோம்.

1. கபிரியேல் அதிதூதர் கிறிஸ்துவின் மனித அவதாரத்தை அறிவித்த பின் கன்னிமரியாள் தன் உறவினளான எலிசபெத்தம்மாளைச் சந்திக்க சென்றது.
2. அவளது உதரத்திலிருந்த திருமுழுக்கு யோவான் கன்னி மரியாளின் வாழ்த்து மொழிகளைக் கேட்டதும் ஜென்மப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது.
3. பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எலிசபெத்தம்மாள் “பெண்களுக்குள் ஆசீர்வதிக்க -ப்பட்டவள் நீரே” என கன்னி மரியாளைப் பாராட்டியது.
4. “என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது” என்னும் உயரிய பாடலை மரியாள் இசைத்தது.

எலிசபெத்தம்மாள் எருசலேமிலிருந்து மேல் திசையில் ஆறு மைல் தொலைவில் மலை நாட்டில் வசித்து வந்தாள். அவளுக்கு உதவி செய்யும்படி கன்னிமரியாள் சென்றாள். தன்னைவிட தாழ்ந்த நிலையில் ஒரு பெண்ணுக்கு உதவி செய்யப் போகிறாள். அவளை கூப்பிடாமலே தானாகச் செல்கிறாள். ஒன்று இரண்டு நாட்களல்ல மூன்று மாதங்களாக அங்கு தங்கி எல்லா வேலைகளையும் செய்கிறாள்.

எலிசபெத்தம்மாள் அவளை வாழ்த்தியதும், தன்னைப் பற்றி பெருமை கொள்ளாமல் கடவுளை வாழ்த்துகிறாள் மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் எலிசபெத்தம்மாளோடு தங்கியிருந்தபின் வீடு திரும்பினாள்.

# பிரான்சிஸ்கோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ, வாழ்க்கை குறிப்புகள்



**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனிதர்களான பிரான்சிஸ்கோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ கல்லறைகளில் செபிக்கிறார்**

பாத்திமா பங்கைச் சேர்ந்த Aljustrel என்ற ஊரில் பிறந்த பிரான்சிஸ்கோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ ஆகிய இருவரும் உடன் பிறந்தோர். இவர்கள், மனுவேல் பேத்ரோ மார்த்தோ, ஒலிம்பியா தெ ஜேசுஸ் தம்பதியருக்குப் பிறந்த எழுவரில் இளையவர்கள். 1908ம் ஆண்டு ஜூன் 11ம் திகதி பிறந்த பிரான்சிஸ்கோ, ஆனி 20ம் திகதியும், 1910ம் ஆண்டு பங்குனி 5ம் திகதி பிறந்த ஜசிந்தா, மார்ச் 19ம் திகதியும் பாத்திமா பங்கு ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றனர். பக்தியுள்ள கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்த இவர்கள், விசுவாசத்திலும், பிறரன்பிலும் வளர்க்கப்பட்டனர். இவர்கள் தங்களின் குடும்ப ஆடுகளை மேய்க்கத் தொடங்கியபோது பிரான்சிஸ்கோவுக்கு எட்டு வயது. ஜசிந்தாவுக்கு ஆறு வயது. 1916ம் ஆண்டில், வசந்த காலம், கோடை காலம் மற்றும் இலையுதிர் காலங்களில், அமைதியின் வானதூதரைப் பார்த்துள்ளனர். பின்னர், 1917ம் ஆண்டு மே மற்றும் அக்டோபர் மாதங்களுக்கிடையில், ஆகஸ்ட் தவிர (ஆவணி 19), ஒவ்வொரு மாதத்தின் 13ம் திகதியன்று செபமாலை அன்னை மரியாவைக் காட்சியில் கண்டுள்ளனர். இம்மூன்று சிறாரில் மிகவும் பக்தியுள்ளவர் பிரான்சிஸ்கோ. இவர், கடவுள் தன்னோடு இருக்கிறார் என்று எப்போதும் சொல்லிக்கொண்டு பிறரையும் செபம் சொல்ல அழைப்பார். 1918ம் ஆண்டு ஐப்பசி கடும் காய்ச்சலால் தாக்கப்பட்டு, 1919ம் ஆண்டு சித்திரை 3ம் திகதி காலமானார். 1918ம் ஆண்டு இறுதியில், ஜசிந்தாவும் அதே காய்ச்சலால் தாக்கப்பட்டு, 1920ம் ஆண்டு பிப்ரவரி இருபதாம் திகதி லிஸ்பன் மருத்துவமனையில் இறந்தார். இவ்விருவரும், புனித திருத்தந்தை 2ம் ஜோன்போல் அவர்களால், இரண்டாயிரமாம் ஆண்டு, மே 13ம் திகதி, பாத்திமாவில், அருளாளர்களாக அறிவிக்கப்பட்டனர். இன்றைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வைகாசி 13ஆம் திகதி புனிதர்களாக உயர்த்தப்பட்டார்கள். பாத்திமா அன்னை வழங்கிய செய்திகளும், இரகசியங்களும் இன்று எமக்கும், எம் சமுதாயத்திற்கும் எப்போதும் தேவைப்படும் பாடாக அமைந்துள்ளன. நாமும் தினமும் செபமாலை தியானித்து செபிப்போம்

**“திருச்சபை வரலாற்றில், புனிதர்களாக உயர்த்தப்பட்டிருப்பவர்களுள்**

## இளமையானவர்கள்

**என்ற பெருமைக்குரியவர்கள்”**

# பரிசுத்த ஆவியின் வருகைக்காக செபிப்போம்



தமத்திருத்துவத்தின் மூன்றாம் ஆளாகிய பரிசுத்த ஆவியின் வருகைக்காக செபிப்போம். பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவை. அவரில்லாமல் நமக்கு எதையும் செய்ய முடியாது. தொடக்க நூலில் ஆதாம் இறைவனோடு சிங்காரத்தோப்பில். உலாவி உரையாடியதை நாம் வாசிக்கின்றோம். பரிசுத்த ஆவியானவர் ஓர் ஆளாக செயற்படுவதையும் தொடக்கநூலில் வாசிக்கின்றோம். கடவுளின் ஆவியானவர், தண்ணீர் மீது அசைவாடிக் கொண்டிருந்தார். விடுதலைப்பயண நூலில் இஸ்ராயேல் மக்களுக்கு நெருப்புத் தூணாகவும், மேகத் தூணாகவும் இருந்ததைப் பார்க்கின்றோம். எலியா வேறு தெய்வங்களுக்கு முன் சவால்விட்டு கடவுளின் ஆவியானவர் நெருப்பாக இறங்கி இறைச்சிகளையும், ஈரமரக் கட்டைகளையும் எரித்ததைப் பார்க்கிறோம். ஆண்டவராகிய இயேசுவுடன் ஊன் உடலோடு அவதரித்து 33 ஆண்டுகள் செயற்பட்டதையும் பார்க்கின்றோம். அன்னை மரியா கர்ப்பமாக காரணமாக இருந்தவர் பரிசுத்த ஆவியானவர். இயேசுவின் வாழ்வில் அற்புதங்கள், அதிசயங்கள், நடத்தியது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தான் மரியா இறந்து விண்ணகம் சென்றது பரிசுத்த ஆவியினால்தான்.

இயேசு விண்ணகம் சென்று பத்தாம் நாள் திருத்தூதர்களிடையே இறங்கி அவர்களை திடப்பட வைத்தது ஆவியானவர்தான்.

புனித பிலிப்பை பரிசுத்த ஆவி ஆற்றலால் பறந்து சென்று இறைவார்த்தைக்கு விளக்கம் தெரியாத அண்ணகனுக்கு விளக்கமளித்ததும் பரிசுத்த ஆவிதான். புனித பவுலும், சீலாவும் செபிக்கும்போது சங்கிலிகள் உடைப்படுவதும், பரிசுத்த ஆவியின் ஆற்றலால்தான்.

புனித பேதுரு “என்னிடம் கொடுக்க ஒன்றும் இல்லை என்னுள் இருக்கும் இயேசுவின் ஆவியால் எழுந்துநட” என்று சொல்ல வைத்தது அதே ஆவியால்தான்.

இவ்வாறாக தொடக்க நூல் முதல் திருவெளிப்பாடு வரை இறைவார்த்தைக்கு உயிர்கொடுப்பது பரிசுத்த ஆவியின் ஆற்றலால்தான். இறைவார்த்தைக்கு விளக்கமும், ஞானமும், அறிவுத் தெளிவும் பரிசுத்த ஆவியின் ஆற்றலால்தான் தருகிறார். உலகம் தோன்றியது முதல் உலகம் முடிவு வரை கடவுளின் ஆவியானவரின் செயல்பாடு இருந்துகொண்டே தான் இருக்கும். அந்த ஆவியானவரைத் தமதாக்கிக் கொள்வது, என்னுடைய வேலை. பரிசுத்த ஆவியானவர் அனைவருக்கும் தேவை. அனைத்திற்கும் தேவை. என்பதை நாம் உணர வேண்டும். ஆகவே பரிசுத்த ஆவியின் வருகையை பெருமகிழ்வோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நாம், அவரிடம் செபிக்கும்போது, தூய்மையான உள்ளத்தோடு உடலோடும் ஆவிக்குரிய செயல்பாடுகளை செய்து அவரின் வருகையை எதிர்பார்ப்போம். செபிப்போம்.

**பரிசுத்த ஆவி குறித்து திருவிவிலியம் கூறும், மேற்கோள்களை எடுத்து வாசித்து தியானிப்போம்**

யோவான் 15:1, லூக்கா 24:52
திருத்தூதர் பணி 2:1-2,
யோவேல் 2:1-10, 1 கொரி 12:7-8
உரோமை 8:26, எசேக்கியேல் 36:26
கலாத்தியர் 5:25, எசாயா 11:2
யோவான் 14:17, யோவான் 15:26
யோவான் 16:23, பிலிப்பி 4:25
எசாயா 54:10




**இந்நாளின் சிறப்பு:** இயேசு உயிர்த்தெழுந்து பலமுறை சீடர்களுக்கும், மற்றவர்களுக்கும் காட்சிகள் அளித்தார். இவ்வாறு 40 நாள்கள் இவ்வுலகில் சீடர்களுக்கு பற்பல கற்பித்து அவர்களைத் திடப்படுத்திய பின் சீடர்களும் மற்றவர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே விண்ணகம் ஏறிச் சென்றார். வரலாற்று ஆசிரியர் யூசேபியு இவ்விழா அதிகாரப் பூர்வமாக 4ஆம் நூற்றாண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது என எழுதி வைத்துள்ளார். புனிதர்கள் ஜோன் கிறிஸ்தோஸ்தம், நிசாநகர் கிரகோரி ஆகியோர் இப்பெருவிழா குறித்து எழுதி வைத்துள்ளனர். The Pilgrimage of Athenia என்ற பழைமையான நூலில் பெத்லகேமில் இயேசு பிறந்த இடத்திலே கட்டப்பட்ட ஆலயத்தில் இவ்விழாவின் இரவு விழிப்பு வழிபாடு கொண்டாடப்பட்டது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு

* எழுதப்படும் சொல்லைவிட பேசப்படும் சொல்லே வலிமை வாய்ந்தது
* இலட்சியமில்லாமல் சாதனைகள் நிகழ்த்த முடியாது.
* குடும்பத்தில் சமாதானம் நிலவ அங்கு இருக்க வேண்டியவை அன்பு, இரக்கம்
* நுண்ணறிவுடன் அன்பும் கைக்கோர்த்துக்கொண்டால் உலகில் எதையும் சாதிக்க முடியும்.
* வேலை எந்த மனிதனையும், கொல்வதில்லை.கவலைத் தான் மனிதனைக் கொல்லும் ஆயுதம்
* தேவை அறிந்து அளிப்பது சேவை. தேவைக்கு மேல் தருவது திணிப்பு
* ஒருவருக்கு உண்மையான சுகத்தைத் தருவது நல்ல மனம் கொண்டவர்களின் நட்பு ஆகும்.



## இறைவாக்குகள்



* எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம் (பிலி 4:6)
* நன்றியோடு கூடிய இறைவேண்டல் மன்றாட்டு ஆகிய அனைத்தின் வழியாகவும், கடவுளிடம் உங்கள் விண்ணப்பங்களைத் தெரிவியுங்கள் (பிலி 4:6)
* நீங்கள் கடவுளால் தேர்ந்துக் கொள்ளப்பட்டவர்கள். அவரது அன்பிற்குரிய இறைமக்கள் (கொலோ 3:12)
* பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள் (கோலோ 3:20)
* தொடர்ந்து இறைவனிடம் வேண்டுங்கள் விழிப்போடும் நன்றி உணர்வோடும் அதில் ஈடுபடுங்கள் (கொலோ 4:2)

## 01 ஐக்கிய நாடுகள்...

அன்றைய நிகழ்வில் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் உரையாற்றுகையில் "இந்த எழில் மிகுந்த நாட்டிலே கிறிஸ்தவர்களாகிய நாங்கள் பௌத்த சமய சகோதர சகோதரிகளோடு இணைந்து சிறப்பிக்கும் இந்த வெசாக் பண்டிகையில் விசேடமாக கௌதம புத்தருடைய பிரபஞ்ச வழிகாட்டலும், போதனைகளும் நிர்வாண நிலைப்பற்றி அறிதலும் எமக்கொரு எடுத்துக்காட்டாகும். அவருடைய உயர்ந்த ஆன்மீக போதனைகள் எம் வாழ்க்கையை தொட்டு ஆழப்படுத்துகின்றது. சில நாடுகளில் தங்கள் சொந்த மதங்களைப் பின்பற்றவும் விசுவாசத்தை ஆழப்படுத்தவும் தடையாக இருக்கின்றது. மனித உரிமைகள் பரிக்கப்படுகின்றன. ஆனால் இலங்கை எம் நாட்டிலே இச்சமய கொள்கைகள் சம்பிரதாயங்கள் விழுமியங்களைப் பின்பற்ற உயரிய வாய்ப்பு எல்லோருக்கும் இருக்கின்றது" என கூறி எவ்வாறு பௌத்த சமயம் இன்று உலகளாவிய ரீதியில் பின்பற்றப்படுகின்றதும், சவால்களை எதிர்நோக்குகின்றது பற்றியும் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் 14வது வெசாக் தினத்தையொட்டி கத்தோலிக்க திருப்பீட திரு அவையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியை இலங்கை சனநாயக குடிரசின் தலைவர் வணக்கத்துக்குரிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இலங்கையின் அப்போஸ்தலிக்க தூதுவர் அதிவணக்கத்துக்குரிய பிய்ரோ வென்ரொட் மற்றும் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை இணைந்து திறந்து வைத்தனர்.

## 01 ஆயர்த்துவ வாழ்வில்

கொழும்பு உயர் மறைமாவட்ட முன்னாள் பேராயர் அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை ஆயர்த்துவ வாழ்வில் 40 ஆண்டு நிறைவை கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் இல்லத்தில் 15.05.2017 அன்று கொண்டாடினார். அன்று சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது. சமூகமளித்த குருக்கள் அவரை வாழ்த்தினார்கள். இவரின் ஆயர்த்துவ வாழ்வு எமக்கு முன்மாதிரிகையாக அமையவும், அவர் உடல், உள சுகத்தோடு வாழவும் ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.

## 04 மரியாவின் வழியில்...

**முடிவாக, தூய ஆவியில் திருத்தூப்பணி!**

உயிர்த்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் முதல் கொடை அவர் வழங்கிய இறை ஆவியே. இறை ஆவிக்கும், அன்னை மரியாளுக்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. இதனால்தான் அன்னை மரியாள் திருத்தூய ஆவியின் திருக்கோவில் என அழைக்கப்படுகின்றார் (தி 53).இறை ஆவியால் நிரப்பப்பட்டு, வழிநடத்தப்பட்ட மரியாள் திருத்தூதுப் பணியின் ஊற்றும், உச்சமும், அடித்தளமுமான இயேசு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு வழங்கினார். எனவே மரியாள் திருச்சபையின் திருத்தூதுப் பணிகளுக்கு மாதிரியாகவும் (தி. 65). பொதுநிலையினரின் திருத்தூதுப் பணிகளின் பாதுகாவலியாகவும் (பொதி 4) இருக்கின்றார்.

அன்னையை நிரப்பிய அதே இறை ஆவி இன்று பொதுநிலையினரை அருள்பொழிவு செய்துள்ளார் (தி 34). அவர்களின் எல்லாப் பணிகளிலும், இறை வேண்டல்களிலும், திருத்தூது முயற்சிகளிலும், திருமணம் மற்றும் குடும்ப வாழ்விலும், துன்பங்களை பொறுமையோடு ஏற்றுச் சவால்களைச் சந்திப்பதிலும் (தி 34) இயேசுவின் வாழ்வுக்கும், உயிர்த்தெழுதலுக்கும் அவர்கள் சான்று பகர்கிறார்கள். ஆவியின் கனிகளால் உலகுக்கு உணவூட்டுகிறார்கள்.

எனவேதான் தூய கிறிஸ்தோஸ்தம் யோவான் உடலுக்கு உயிர்போல, உலகுக்குக் கிறிஸ்தவர்கள் அமைவார்களாக" எனக்கூறி பொதுநிலையினரை வாழ்த்துகிறார்.

## 02 பிரியாவிடை

உதவிபங்குத் தந்தை சாசிக்க மனோஜ் அவர்களுக்கு நாம் எமது பங்கு மக்கள் சார்பாக உளமார நன்றி கூறுகின்றோம். இறைவன் எமக்கு தந்த கொடை எம் பங்கின் வளர்ச்சிக்காகவும், மக்களின் விசுவாசத்திற்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றினார். தந்தை அவர்களின் பணிவாழ்வு தொடர்ந்து சிறக்க எல்லாம் வல்ல இறைவனிடம் பிரார்த்திப்பதோடு தூய ஆவியானவர் அவரை தொடர்ந்தும் தம் பணிக்காக பெலப்படுத்தவும், வழிநடத்தவும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

**தகவல் : S.B. டேவிட்**

## XX இலங்கையின் புனிதரே

பகிரங்கமான பாடல்பூசை இடம்பெற்றது. கொன்சால்வேஸ் அடிகள் இறுதி அஞ்சலி உரையை நிகழ்த்தினார். திருப்பலியின் பின் அவரது பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. பலரின் வேண்டுகோளுக்கிணங்க யோசேவ்வாஸ் அடிகளின் இலங்கையில் ஆற்றிய பணியின் நிமித்தமும் அவரின் புதுமைகளிலும் ஆட்கொள்ளப்பட்ட மக்களின் வேண்டுகோளின்படியும்

## 01 பாத்திமா திருத்தலத்தில்

2017ஆம் ஆண்டு மே 13, சனிக்கிழமையன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் சிறப்பிக்கப்பட்டது. அன்னை மரியா மீது பற்றுக்கொண்ட திருத்தந்தை காட்சிகளின் சிற்றாலயத்தில் அன்னையின் காலடிகளில் மலர் கொத்தை அர்ப்பணம் செய்து நீண்ட நேரம் மௌனமாக செபம் செய்தார்.

பின்னர் செபமாலை அன்னை பசிலிக்கா ஆலயம் சென்று அங்கு அருளாளர்களான பிரான் சிஸ்கோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ ஆகிய இருவரின் கல்லறைகளில் செபித்தார் பின்னர், பசிலிக் -காவுக்கு முன் அரங்கத்தில பாத்திமா அன்னை விழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்து இத்திருப்பலியில் அருளாளர் பிரான்சிஸ்கோ மார்த்தோ மார்த்தோ, ஜசிந்தா மார்த்தோ ஆகிய இருவரையும் புனிதர்கள் என அறிவித்தார் திருத்தந்தை.

## 01 கொழும்பு உயர்...

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில், புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட குருக்களுக்கள், கடந்த திங்கட்கிழமை அன்று தமக்குரிய கடமைகளை உத்தியோகப்பூர்வமாக பொறுப்பேற்றுக்கொண்டனர். அன்றைய தினம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் செயலாளராக கடமையாற்றிய அருட்பணி ஜூட் சமந்த அடிகளார் கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் புதிய நிதிப்பொறுப்பாளராக தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். அந்நிகழ்வில் இதுவரை காலமும் நிதிப்பொறுப்பாளராக இருந்த அருட்பணி மேர்ள் சாந்தி அடிகளார், அருட்பணி ஜூட் சமந்த அடிகளாருக்கு தமது வாழ்த்துக்களை தெரிவிப்பதை படத்தில் காணலாம்.

## 09 பாத்திமா அன்னை...

திருப்பயணிகளின் அனுபவமும், நம்பிக்கையும் இதுதான்: பாத்திமாவில், நம்மைப் பாதுகாக்கும் ஒளிப் போர்வையால் சூழப்படுகிறோம் என்பதே அந்த நம்பிக்கை. அன்பு திருப்பயணிகளே, தன் குழந்தைகளை இறுகப்பற்றி அரவணைக்கும் ஒரு தாய் நமக்கு இருக்கிறார். இதையே, நாம் இன்றைய 2ம் வாசகத்தில் கேட்டோம்: அருள்பெருக்கையும் கடவுளுக்கு ஏற்புடையவராகும் கொடையையும் இயேசு கிறிஸ்து என்னும் ஒருவர் வழியாக அடைந்து கொண்டவர்கள் வாழ்வுபெற்று ஆட்சி செலுத்துவார்கள் என இன்னும் மிக உறுதியாய் நம்பலாம் அன்றோ? (உரோமையர் 5:17) இத்தகைய நம்பிக்கையில் இங்கு கூடிவந்துள்ளோம். கடந்த நூறு ஆண்டுகளாக நாம் பெற்றுக்கொண்ட எண்ணிலடங்கா வரங்களுக்காக நன்றி சொல்ல வந்துள்ளோம். கன்னி மரியா வழியே, இறைவனின் ஒளிக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்ட புனித பிரான்சிஸ்கோ, புனித ஜசிந்தா இருவரும், நமது எடுத்துக்காட்டுகளாக அமைகின்றனர். அவர்கள் அனுபவித்த துன்பங்களையும், எதிர்ப்புக்களையும் வெல்வதற்கு, இந்த ஒளி உதவியாக இருந்தது. நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கையின் ஊற்றாக விளங்கும்படி இறைவன் நம்மைப் படைத்தார். கருவிலேயே இறந்து பிறந்த குழந்தையைப்போல நமது நம்பிக்கை இருக்கக்கூடாது! தாராள மனம் கொண்டோர் வழியே வாழ்க்கை தொடர்ந்து செல்கிறது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் (யோவான் 12:24) என்பதை ஆண்டவர் சொன்னார் அதன்படி வாழ்ந்தும் காட்டினார். அவர் எப்போதும் நமக்கு முன் சென்று, நம் அனுபவங்கள் அனைத்தையும் ஏற்கனவே அவர் ஏற்றுக்கொள்கிறார். நாம் வாழ்வில் சிலுவையை உணரும்போது, அங்கு இயேசு ஏற்கனவே சிலுவையில் அறையப்பட்டிருப்பதை நாம் உணர்கிறோம்.

மரியாவின் பாதுகாப்புடன், இவ்வுலகிற்கு விடியலை அறிவிப்பவர்களாக வாழ்வோம். இவ்விதம், நாம் இளமையான, அழகான திருஅவையின் முகத்தை மீண்டும் காண்போம்! பணியாற்றுவதில், வரவேற்பதில், அன்பு செலுத்துவதில், திருஅவை ஒளி வீசட்டும்!

கண்டி ஆயரான மேதகு வியான்னி பெர்னாண்டோ, கோவா பேராயர் றஉள் நிக்கொலஸ் கொண்சால்வேஸ் மற்றும் பல சகோதர ஆயர்களின் வேண்டுகோளின் படி, புனிதர் நிலைக்கு மேன்மைப்படுத்துவதற்கான பேராயத்துடன் இணைந்து எம் திரு ஆட்சிப்பீட அதிகாரத்தில் திருத்தந்தையாகிய 2ம் அருள் சின்னப்பர் அவர்கள் 1995.01.21 அன்று இறை அடியானான யோசேவ்வாஸ் அடிகளாரை அருளாளர் யோசேவ்வாஸ் என இலங்கையில் பிரகடனம் செய்தார். வாஸ் அடிகள் இறந்து 304 ஆண்டுகளின் பின்னர் தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2015 தை 14ம் திகதியன்று இலங்கை, இந்திய மக்கள் காலிமுகத்திடல் ஒன்று கூட நம் அருளாளர் யோசேவ்வாஸ் அடிகளாரை புனிதராக பிரகடனம் செய்தார். இது முதல் அவர் "இலங்கையின் புனிதர்" என அழைக்கப்பட்டார். நம் நாட்டில் அயராது பணியாற்றிய வாஸ் அடிகள் எம் நாட்டிற்குக் கிடைத்த முதல் புனிதர் என்பது குறிப்பிடத்தக்கதுடன். இதனால் நாம் பெருமையும், மகிழ்ச்சியும் கொள்வது சாலச்சிறந்தது.

**புனித யோசேவ்வாஸ் அடிகளாரே – எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!**


## பராமரிப்பு இல்லம்

கொழும்பில் உள்ள சிறுவர் மடத்தில் தாய், தந்தை அற்ற வறிய குடும்பத்தைச் சார்ந்த, 6-10 வயதிற்குட்பட்ட றோமன் கத்தோலிக்க சிறுவர்கள் இந்த சிறுவர் மடத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

விலாசம் : மவுசெவன, இல 12 மத்திய வீதி, மட்டக்குளி, கொழும்பு -15 மேலதிக விபரங்களுக்கு

தொ.பே 0112529560 தொடர்புகொள்க காலை 10.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை (N0565)


## 06 தூயோராய்....

கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்". அவ்வாறு இரு கல் தொலை சென்றால் அதுவும் சட்டவிரோதமானதே. "உங்களிடம் கேட்கிறவனுக்குக் கொடுங்கள் கடன்வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்". எமக்கு ஒருவர் கெடுதல் செய்தால் நாம் பழிவாங்கக் கூடாது. அதை இறைவனிடம் விட்டுவிடவேண்டும். நியாயம் தீர்ப்பது இறைவனது வேலை. எமது கோபத்தை இறைவனிடம் கொட்டிவிடுவோம். அவர் காலம் தாழ்த்தியாவது நியாயம் தீர்ப்பார். (சசாயா 34: 8 இணைச்சட்டம் 32:35 எரேமியா11:20 எரேமியா 51:6)இங்கே பழிவாங்குவதும் நியாயம் தீர்ப்பதும் இறைவனது வேலையாகும். ஆகவே அதை இறைவனிடம் விட்டுவிடுவோம். அவர் நியாயம் தீர்ப்பார். இறைவனைப்போல் நிறைவுள்ளவராய் ஒருவராலும் இருக்கமுடியாது. அன்பு கூர்வோம். எம்மைப் படைத்தவரின் நோக்கம் அதன் மூலம் எம்மிடம் குறைபாடுகள் இருந்தாலும் முழுமையை நோக்கிப் பயணம் செய்வோம்.

## 12 திருத்தந்தை 2ம்...

நம் கிறிஸ்தவ ஒன்றிப்பு முயற்சி, இரத்தத்தின் ஒன்றிப்பாகவும் மாறியுள்ளதை, விவரிக்க இயலாத இறைவனின் திட்டம் என்று கருதுகிறோம். முதல் நூற்றாண்டு தொடங்கி, கிறிஸ்தவத்தின் சாட்சிகளாக வாழ்ந்தவர்கள் இந்நாட்டில் உள்ளனர். அன்று முதல், இன்று வரை, மாசற்றவர்களின் இரத்தம் சிந்தப்பட்டு வருகின்றது.

மறைசாட்சியரின் இரத்தத்தைத் தாங்கிய இம்மண்ணில், அதைத் தொடர்ந்து, பாலை நிலத்தில், துறவற வாழ்வின் சாட்சியங்கள் தோன்றின. மனிதர்களை சந்திக்க இறைவன் இறங்கிவந்த சீனாய் மலையைக் கொண்டுள்ள இந்த பூமிக்கு (காண்க. வி.ப. 24:16), புலம்பெயர்ந்த குழந்தையாய் இறைவனின் திருமகன் தங்கவந்த இந்த பூமிக்கு (காண்க. மத். 2:14), நான் ஒரு திருப்பயணியாக வந்துள்ளேன்.

திருத்தந்தையே, என் அன்பு சகோதரரே, நாம் தொடர்ந்து, அமைதியின் தூதர்களாக, உடன் பயணிகளாக, இவ்வுலகில் வாழ்வதற்கு, இறைவன் அருள் தருவாராக. அன்னை மரியா, நம்மை எப்போதும், தன் திருமகனிடம் அழைத்துச் செல்வாராக!

## 02 கிறிஸ்தவ மத...

விபரங்களடங்கிய விண்ணப்பப்படிவங்களை........

**பணிப்பாளர்**

**கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்**

**155 / 10 காசல் வீதி**

**கொழும்பு – 08** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நாடகப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் - 2017" எனக் குறிப்பிடவும்.
- விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2017 ஆனி 15
- நாடகப் பிரதிகள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதி 2017 ஆடி 14 (காலம் பொன்னானதாகையால் மிக விரைவாக விண்ணப்பிக்கவும்)
- நாடகப் போட்டிகள் ஐப்பசி மாதத்தில் நடாத்தப்படவுள்ளன.

**விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டிய தகவல்கள்...**

- போட்டியிடும் குழுக்கள் உரித்தாகும் நிறுவனம் / அமைப்பு மற்றும் விலாசம்.
- உரிய கத்தோலிக்க மறைமாவட்டம் / கிறிஸ்தவ சபை (தேசிய கிறிஸ்தவ சபைக்குரித்தான சபைகள் மட்டும்)
- பங்குபற்றும் போட்டி மொழி மூலம்
- ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் பெயர், பதவி, தொலைபேசி இலக்கம், விலாசம்.
- போட்டி விதிமுறைகள் மற்றும் விபரங்கள் / கடிதப்பரிமாற்றலுக்கான முகவரி
- இத்தகவல்களை தங்களது குழு உரித்தாகும் தேவாலயம் / பாடசாலை / நிறுவனத்திற்குப் பொறுப்பான வண. அருட்தந்தையின் / வண. குருவானவரின் / வண. அருட்சகோதரரின் / வண. அருட்சகோதரியின் கையொப்பம், பெயர், பதவி, முத்திரையுடன் சான்றுப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.
- மேலதிக தகவல்களுக்கு 011 - 2665584 அழைக்கவும்.

**பணிப்பாளர்**

**கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம்.**

# அருள் நிறைந்த மரியே வாழ்க



அருள் நிறைந்த மரியே வாழ்க
இருள் நீக்கும் எழிலே வாழ்க
அம்மா உந்தன் பெயரைச் சொல்ல சொல்ல
உள்ளமும் துள்ளும் உவகை கொள்ளும்
இம் மாநிலமுழுவதும் உந்தன் மேன்மை பெருகும்

தந்தையால் தனயனுக்கு தாயாக
தரணிக்கு வந்தவளே
தாழ்மையுடன் தந்தைக்கு அடிபணிந்தவளே
தாசர்கள் நாம் தாழப் பணிந்தோம் தாய் மரியே
தரணியில் எம்மைக் காத்திட வேண்டி
தாழ்ப்பணிந்தோம் தாயே...

மாந்தர்கள் எம்மை மீட்க மைந்தவனுக்கு
துணை ஈன்றவளே
மாமரியே மாதவளே, மனமகிழ்ந்து
வாழ்த்துகிறோம் தாயே
வானவன் கபிரியேலின் தூய மங்கள
மொழி ஏற்றவளே
வாழ்த்துகின்றோம் தாயே,
வணங்குகின்றோம் உம்மையே

அருள் நிறைந்த மரியே இருள் நீக்கும் எழிலே
அருளும் பெருக பாவமும் அருக
அருள்புரிவாய் அம்மா
அமல உற்பவியாய் விமலனின் அன்னையானாய்
அடியவர்கள் துயர் துடைத்து
ஆதரிப்பாய் எமை அம்மா

தாயே உந்தன் பாதம் நாம் தாழ்ப் பணிந்தோம்
சேயர்கள் எம்மை காத்திடுவாய் அம்மா
துன்பங்கள் தோன்றிடும் வேளையிலே
துணை தந்து காத்திட வேண்டுமம்மா

கவலை நிறைந்த வாழ்வில் நாங்கள்
கலங்கி தவிக்கின்றோம் அம்மா
கலங்கரை தீபமாய் எம் வாழ்வில் நீ ஒளிர்ந்திடுவாய்
கண்களை காக்கும் இமைகளைப் போல
கருத்துடன் எம்மைக் காத்திடுவாய் அம்மா

துன்பங்கள் தோன்றிடும் வேளையில்
துணை தந்து எம்மைக் காத்திடுவாய்
துயருற்று அழுகின்ற வேளையில் ஆறுதல்
அளித்து பார்த்திடுவாய்
தாயுந்தன் அன்பிற்கு நிகரேதும் இல்லை அம்மா
தஞ்சமென்று ஓடிவந்தோம்
துணை தந்து காத்திடுவாய்

இறைவனின் திருவுளத்தை
நிறைவேற்றிட மனமுவந்தாய்
இகமதில் அன்னையாய் எம்மவரைக் காத்திடுவாய்
இறைவனின் இல்லமாய் திகழ்ந்த எம் தாயே
இளையோர் எமக்கு வழி காண்பிப்பாயே

விண்ணக மகிமையாய் விளங்கும் எம் தாய் நாம்
விண்ணகம் சேர துணை புரிந்து காப்பாயே
மண்ணவர்கள் எமக்கு வழிகாட்டும் அம்மா
மாந்தர்கள் உம்மை நாம் தாயாகப் பெற
பேறுபெற்றவர்கள் அம்மா

மரியே மரியே தாய் மரியே .. நீ
எந்நாளும் தாய் மரியே

இறைவனின் திருமகளே வாழ்க
மறைபோற்றும் பேரெழிலே வாழ்க

அருட்சகோ. டெலா றோஸ் அ.கா

# தேவ அழைத்தல் பெருகிட



## “உம் இதயத்திற்கு உகந்த மேய்ப்பர்களை அனுப்பியருளும்”

**“அறுவடையே மிகுதி
வேலையாள்களோ குறைவு,
ஆகையால் தமது அறுவடைக்கு தேவையான
வேலையாள்களை அனுப்பும்படி
அறுவடையின் உரிமையாளர்களிடம்
மன்றாடுங்கள்” (லூக் 10:2)**

ஆண்டவரே பரிசுத்த உள்ளங்களை உருவாக்கும்
அருள் வாழ்வை வாழ அழைத்தருளும்.
அறுவடைக்கு ஆட்களை அனுப்பியருளும்.
அகிலமெங்கும் இறையாட்சி
பரப்பிட வேண்டுகின்றோம்.



இறை இயேசுவின் திருப்பணி
இகமெங்கும் தொடர்ந்தாற்ற
இருள் சூழ்ந்த உலகில் இறையொளியை ஏற்ற
இறையரசை இகத்தில் இனிதாய் பரப்ப
இளைஞர்கள் இறை சேவையாற்ற ஈர்க்கப்பட
வேண்டுகின்றோம்.

உலகத்தின் பேரொளியாய் உத்தம சீடனாய்
உன்னத இறைவனின் நெறியை
உலகெங்கும் பரப்பிட
உலகெங்கும் சென்று சீடர்களை உருவாக்க
ஊக்கமுடன் சேவை செய்ய
ஊக்குவிக்க வேண்டுகின்றோம்

புனிதத்தின் நறுமணத்தை புவியெங்கும் பரப்ப,
புண்ணான நெஞ்சங்களுக்கு புத்துயிர் ஊட்ட
புவியெங்கும் சென்று புனிதர்களை உருவாக்க
புனிதர்களின் பாதையில் பலர்வழி
சேர வேண்டுகின்றோம்

திருயேக இறைவனின் திருத்தூதர்களாக மாற
தீமையென்னும் பாவ நோயை தீர்த்தழிக்க
திரிபோல் எரிந்துருகும் தியாகிகளாய் திகழ
திருச்சபையின் தூதர்களாக இறையரசை
நாடெல்லாம் பரப்பிட வேண்டுகின்றோம்.

பாரெங்கும் பணிபுரியும் பக்தர்களாக
பரமன் இயேசுவின் சாட்சிகளாக திகழ
பண்பட்ட நிலங்களால் பலர் மாற்றப்பட
பணிந்த உள்ளத்துடன் சேவையாற்றும்
சேவகர்களாக மாற வேண்டுகின்றோம்

உம் இதயத்திற்கு உகந்த
மேய்ப்பர்களை அனுப்பியருளும்.
உலகெங்கும் உம் அரசு நிலைநாட்டப்பட
ஊழியர்கள் உவப்புடன் ஊழியம் செய்ய
உன்னத இறைவனே உம்மை வேண்டுகின்றோம்

தேவ அழைத்தல்கள் தினமும் பெருகிட
தேவைகள் திருவருள் புரிய
பாதங்கள் பணிபுரிய அழைக்கப்பட
பரமனிடம் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்



**“நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள்
எத்துணை அழகாய் இருக்கின்றன”
(உரோ 10:15)**

அருட்சகோ. டெலா றோஸ் அ.கா

# போர்த்துக்கீசிய பாப்பிறை கல்லூரி மாணவர்களுடன் திருத்தந்தை



இயேசுவின் அன்பில் உயர்வதற்கு உதவும் வகையில், நம் கரங்களைப் பற்றி வழிநடத்தும் அன்னை மரியாவின் கரங்களில் நம்மை ஒப்படைப்போம் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அருள்பணி பயிற்சி பெறும் மாணவர்களிடம் உரையாற்றினார்.

உரோம் நகரிலுள்ள போர்த்துக்கீசிய பாப்பிறை அருள்பணி பயிற்சிக் கல்லூரியில் பயிலும் மாணவர்களை 8.05.2017 திங்களன்று காலை திருப்பீடத்தில் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தான் இவ்வாரத்தின் இறுதியில் போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா நகருக்கு திருப்பயணம் மேற்கொள்ளும் தருணத்தில் இந்த சந்திப்பு நிகழ்வது, முக்கியத்துவம் நிறைந்தது என்று கூறினார்.

அருளாளர்கள் பிரான்சிஸ் மற்றும் ஜெசிந்தா, இறையடியார் லூசியா போன்றோரின் விசுவாச வாழ்வைப் பின்பற்றி, அருள்பணியாளர்கள், இறைவனிடம் தங்களையே ஒப்படைக்க வேண்டும் என்ற அழைப்பையும், திருத்தந்தை முன்வைத்தார்.

ஒவ்வோர் அருள் பணியாளரும் தன் கிறிஸ்தவ, குருத்துவ மேய்ப்புப்பணி மற்றும் கலாச்சார பயிற்சியில் சோர்வின்றி ஈடுபடவேண்டும் என்று, அருள்பணி பயிற்சி பெறும் மாணவர்களிடம் விண்ணப்பித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எளிமையாக இருக்கவும், அதேவேளை, அஞ்சா நெஞ்சுடன் செயலாற்றவும் அன்னை மரியிடமிருந்து கற்றுக்கொள்வோமாக என்று கூறினார்.

**இன்றைய உலகில், குறிப்பாக
மத்தியக் கிழக்குப்பகுதியில் போராலும்
மோதல்களாலும் துன்புறும் மக்களை,
அமைதியின் அரசியாம் அன்னைமரியின்
பாதுகாவலில் ஒப்படைப்பதாக அறிவித்தார்,
திருத்தந்தை பிரான்சிஸ்.**




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

**“ஒருமைப்பாடு மற்றும், பகிர்ந்து வாழும் பண்புகள் அதிகரிப்பதற்கு நாம் ஒன்று சேர்ந்து உழைப்போம் நல்லதொரு மற்றும், அமைதி நிறைந்த சமூகங்களை அமைப்பதற்கு ஒத்துழைப்பு உதவும்”**

**“நாம், மென்மை உள்ளமும், பணிவும் கொண்டவர்களாக, வறியோரைப் பேணுவதில் தனி கவனம் செலுத்துவோமாக”**

**“மரியன்னையுடன், நம்பிக்கையின், அமைதியின் ‘திருப்பயணியாக’ நான் நாளை பாத்திமாவுக்குச் செல்கிறேன். அனைத்தும் இறைவனின் கொடை என்பதையும், அவரே நம் வலிமை என்பதையும், அன்னையின் வழியே, நாம் காண்போமாக”**

# திருத்தந்தையால் திருப்பொழிவு பெற்ற பத்து தியாக்கோன்கள்

வைகாசி 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, கொண்டாடப்பட்ட நல்லாயன் ஞாயிறையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பத்து தியாக்கோன்களை, அருள்பணியாளர்களாக திருப்பொழிவு செய்தார் என்று, உரோம் மறைமாவட்டம் அறிவித்துள்ளது.

இறையழைத்தலுக்காக செபிக்கும் 54வது உலக நாளெனச் சிறப்பிக்கப்படும் 7.05.2017 ஞாயிறன்று காலை, 9.15 மணிக்கு, புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை தலைமையேற்று நடத்தும் திருப்பலியில், அருள்பணியாளர்களாக திருப்பொழிவு செய்யப்பட்ட பத்து இளையோரில், ஆறுபேர் உரோம் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.



இறையழைத்தலுக்காக செபிக்கும் உலக நாளின் ஒரு முக்கிய நிகழ்வாக, வைகாசி 5, வெள்ளியன்று மாலை, 8.30 மணிக்கு, புனித ஜோன் இலாத்தரன் பசிலிக்கா பேராலயத்தில், கர்தினால் அகோஸ்தீனோ வல்லினி அவர்கள் தலைமையேற்று நடத்தும் திருவிழிப்பு திருவழிபாடு நடைபெற்றது.

இந்த வழிபாட்டு நேரத்தில், ஞாயிறன்று அருள்பொழிவு பெற்ற தியாக்கோன்களில் இருவர், தங்கள் வாழ்வுப் பயணத்தைக் குறித்த சாட்சியத்தை வழங்கினர். 1963ம் ஆண்டு, திருத்தந்தை அருளாளர் 6ம் பவுல் அவர்கள், உயிர்ப்பு காலத்தின் நான்காம் ஞாயிறன்று சிறப்பிக்கப்படும் நல்லாயன் ஞாயிறை, இறையழைத்தலுக்காக செபிக்கும் உலக நாளென அறிமுகம் செய்தார். இவ்வாண்டு சிறப்பிக்கப்படும், இறையழைத்தலுக்காக செபிக்கும் 54வது உலக நாளுக்கென, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கியுள்ள செய்தியை, “பணியாற்ற அனுப்பப்படுவதற்கு, தூய ஆவியாரால் அழைத்துச் செல்லப்படுதல்” என்ற தலைப்பில் வழங்கியுள்ளார்.

# இரட்டை வாழ்க்கை என்பது ஒரு மோசமான நோய் – திருத்தந்தை

உரோம் நகரிலுள்ள பல்வேறு அருள்பணியாளர் பயிற்சி இல்லங்களில் பயின்றுவந்த 10 தியாக்கியோன்களை, அருள்பணியாளர்களாக அருள்பொழிவுச் செய்த திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், குருத்துவம் என்பது ஒரு வேலை அல்ல, மாறாக அது ஒரு பணியாகும் என்றார்.

இறைவார்த்தையை வாசித்து தியானிக்கும் ஒவ்வொரு அருள்பணியாளரும், தான் வாசித்தவற்றை நம்பவும், விசுவாசம் வழியாக தான் கற்றவற்றை, பிறருக்கு கற்பிக்கவும், தான் கற்பித்தவற்றை வாழ்ந்துகாட்டவும் முன்வரவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அருள்பணியாளர் வழங்கும் மறையுரைகள், கல்வியறிவில் மேம்பட்டதாகவோ, விளக்கம் நிறைந்ததாகவோ இருக்கத் தேவையில்லை, அவை எளிமையாக இருக்கவேண்டும் என்பதே முக்கியம் எனவும் எடுத்துரைத்தார்.

வாழ்விலிருந்து எடுத்துக் காட்டுகளைக் கூறாமல், சொல்லப்படும் வார்த்தைகள் அர்த்தமற்றவை என்பதையும் எடுத்துரைத்த திருத்தந்தை, இரட்டை வாழ்க்கை என்பது திருஅவையில் ஒரு நோயாக உள்ளது எனவும் எடுத்தியம்பினார்.



# 12 இறையடியாரின் வீரத்துவ புண்ணியங்களும் புதுமைகளும் ஏற்பு



வைகாசி 4 வியாழன் காலை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 12 இறையடியார்களின் வீரத்துவமான புண்ணியம் நிறைந்த வாழ்வு, மற்றும் அவர்களில் சிலரது பரிந்துரைகளால் நிகழ்ந்த புதுமைகள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டார்.

புனிதர் மற்றும் அருளாளர் படிநிலைகளை ஒருங்கிணைக்கும் பேராயத்தின் தலைவர், கர்தினால், ஆஞ்செலோ அமாத்தோ அவர்கள் சமர்ப்பித்த இந்த விவரங்களை திருத்தந்தை ஏற்றுக்கொண்டு, தன் ஒப்புதலை அளித்தார். 1870ம் ஆண்டு பிறந்து, 1957ம் ஆண்டு இறையடி சேர்ந்த இறையடியார், அருள்பணி Francesco Solano Casey என்ற கப்புச்சியன் துறவி, அமல அன்னை புதல்வியர் என்ற துறவுசபையை நிறுவிய இறையடியார், Maria della Concezione ஆகியோரின் பரிந்துரைகளால் நிகழ்ந்துள்ள புதுமைகளை திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

மேலும் இறையடியார்களான Chiara Fey, மற்றும் Caterina di Maria ஆகியோரின் பரிந்துரைகளால் நிகழ்ந்துள்ள புதுமைகளையும், குடும்பத் தலைவரான, இறையடியார் Luciano Botovasoa அவர்களின் மறைசாட்சிய மரணத்தையும் திருத்தந்தை ஏற்றுக்கொண்டார். இவர்கள் 5 பேரையும் அருளாளர்களென அறிவிக்கும் வழிமுறைகளுக்கு திருத்தந்தை ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், இறையடியாளர்களான இத்தாலியக் கர்தினால் Elia dalla Costa, மற்றும் வியட்நாம் கர்தினால் Francesco Saverio Nguyên Van Thuân ஆகியோரின் வீரத்துவமான புண்ணியம் மிகுந்த வாழ்வு சாட்சியத்தை திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

அதேவண்ணம், இறையடியாளர்களான Giovanna Meneghini, Vincenza Cusmano, Maria Guadalupe Ortiz என்ற மூன்று அருள் சகோதரிகள், மற்றும், Alessandro Nottegar, Edvige Carboni என்ற இரு பொதுநிலையினர் ஆகிய அனைவரின் வீரத்துவமான புண்ணியம் மிகுந்த வாழ்வு சாட்சியத்தை திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

# இத்தாலிய அமைதியின் பள்ளிகள் சிறாருடன் திருத்தந்தை



பாடசாலைக்கும், குடும்பத்திற்கும் இடையிலும், அதேபோல், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் இடையிலும் முறிந்துபோன உடன்பாட்டை மீண்டும் நாம் ஏற்படுத்த வேண்டுமென்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தாலியப் பள்ளிச் சிறாரிடம் கூறினார்.

பாடசாலைச் சிறார் மத்தியில், அமைதி, குடியுரிமை மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், “அமைதியின் பாடசாலைகள்” என்ற தலைப்பில், உரோம் நகரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட ஏழாயிரம் சிறாரை, திருப்பீடத்தின் Nervi அரங்கத்தில் இம்மாதம் 6ம் திகதி சனிக்கிழமை நண்பகலில் சந்தித்தத் திருத்தந்தை, அச்சிறார் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்தார். கேள்வி-பதில் முறையில் அமைந்த இச்சந்திப்பில், இத்தாலிய கல்வி அமைச்சர் Valeria Fedeli அவர்களும் கலந்துகொண்டார்.

பாடசாலை, குடும்பம், சமுதாயம் இவற்றுக்கு இடையே உடன்பாட்டை உருவாக்க வேண்டும், ஒவ்வொருவரும், சிறுவர் சிறுமியரின் வாழ்வில் அக்கறை காட்டும்போது அவர்கள், வளர்வார்கள் என்று கூறியத் திருத்தந்தை இங்கு அமர்ந்திருக்கும் கல்வி அமைச்சர் இதற்கு முயற்சி எடுப்பார் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்.

ஒரு வெடிகுண்டின் பெயர், “அனைத்து வெடிகுண்டுகளின் அன்னை” எனக் கேள்விப்பட்டபோது, நான் வெட்கமடைந்தேன், இவ்வெடிகுண்டு ஆப்கானிஸ்தானில் போடப்பட்டது என்றும் அறிந்தேன், பொதுவாக, அன்னை, வாழ்வைக் கொடுப்பவர், ஆனால், இது மரணத்தைக் கொணர்கின்றது என்றும் திருத்தந்தை சிறாரிடம் தெரிவித்தார்

அனைத்து வெடிகுண்டுகளின் அன்னை, கலாச்சார அழிவாக அமைந்துள்ளது என்று சொல்லி, அதற்கெதிரான தனது கண்டனத்தை தெரிவித்த திருத்தந்தை, தற்போது மக்கள் புலம்பெயர்தல், இரண்டாம் உலகப் போருக்குப் பின் இடம்பெறும் மிகப்பெரும் துன்பியலாக உள்ளது என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர் என்றார். இந்த உலகில் போர் இடம்பெற்று வருகின்றது, ஒவ்வொரு நாளும் நடக்கும் கொடுமைகளை தொலைகாட்சியில் பார்க்கின்றோம் என இத்தாலியச் சிறாரிடம் கூறியத் திருத்தந்தை, உலகின் தொடக்கத்தில், காயின், பொறாமையால், தன் சகோதரர் ஆபேலைக் கொன்றான், இதிலிருந்து அழிவு ஆரம்பித்தது என்றும் பகிர்ந்துகொண்டார்.

பாடசாலைச் சிறார் மத்தியில், அமைதி, குடியுரிமை மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், இத்தாலிய தல அரசுகளின் தேசிய ஒத்துழைப்பு கழகம், உரோம் நகரில் இம்மாநாட்டை நடத்தியது. இது, சிறார் மற்றும், இளையோர் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றது. இம்மாநாட்டில் ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.


'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# உள்ளத்தை தொடும் போதனைகள்

**வாழ்விற்கு புதிய வழிமுறைகள்**

அதிகாரம் 01



## 12. செபத்தைப் பற்றி கற்பித்தல்

"நீங்கள் வேண்டுதல் செய்ய நிற்கும் போது யார் மேலாவது நீங்கள் மனத்தாங்கல் கொண்டிருந்தால் மன்னித்து விடுங்கள்"

**யோவா 4:10** இயேசு அவரைப் பார்த்து, "கடவுளுடைய கொடை எது என்பதையும் "குடிக்கத் தண்ணீர் கொடும்" எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர் அவரும் உமக்கு வாழ்வு தரும் தண்ணீரைக் கொடுத்திருப்பார்" என்றார்.

**யோவா 4:11** அவர் இயேசுவிடம், "ஐயா, தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை கிணறும் ஆழமானது. அப்படியிருக்க வாழ்வு தரும் தண்ணீர் உமக்கு எங்கிருந்து கிடைக்கும்?

**யோவா 4:12** எம் தந்தை யாக்கோபை விட நீர் பெரியவரோ? அவரே எங்களுக்கு இக்கிணற்றை வெட்டித் தந்தார். அவரும் அவருடைய மக்களும் கால்நடைகளும் இதிலிருந்துதான் தண்ணீர் குடிப்பது வழக்கம்" என்றார்.

**யோவா 4:13** இயேசு அவரைப் பாத்து, "இந்தத் தண்ணீரைக் குடிக்கும் ஒவ்வொருவருக்கும் மீண்டும் தாகம் எடுக்கும்.

**யோவா 4:14** நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலைவாழ்வு அளிக்கும்" என்றார்.

**யோவா 4:15** அப்பெண் அவரை நோக்கி, "ஐயா, அத்தண்ணீரை எனக்குக் கொடும் அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது தண்ணீர் மொள்ள நான் இங்கு வரத்தேவையும் இருக்காது" என்றார்.

**யோவா 4:16** இயேசு அவரிடம், "நீர் போய், உம் கணவரை இங்கே கூட்டிக் கொண்டு வாரும்" என்று கூறினார்.

**யோவா 4:17** அப்பெண் அவரைப் பார்த்து, "எனக்குக் கணவர் இல்லையே" என்றார். இயேசு அவரிடம், "எனக்குக் கணவர் இல்லை" என நீர் சொல்வது சரியே.

**யோவா 4:18** உமக்கு ஐந்து கணவர்கள் இருந்தார்கள் என்றாலும் இப்போது உம்முடன் இருப்பவர் உம் கணவர் அல்ல. எனவே நீர் கூறியது உண்மையே" என்றார்.

**யோவா 4:19** அப்பெண் அவரிடம், "ஐயா, நீர் ஓர் இறைவாக்கினர் எனக் கண்டுகொண்டேன்.

**யோவா 4:20** எங்கள் முன்னோர் இம்மலையில் வழிபட்டுவந்தனர். ஆனால் நீங்கள் எருசலேமில்தான் வழிபட வேண்டும் என்கிறீர்களே" என்றார்.

**யோவா 4:21** இயேசு அவரிடம், "அம்மா, என்னை நம்பும். காலம் வருகிறது. அப்போது நீங்கள் தந்தையை இம்மலையிலோ எருசலேமிலோ வழிபடமாட்டீர்கள்.

**யோவா 4:22** யாரை வழிபடுகிறீர்கள் எனத் தெரியாமல் நீங்கள் வழிபடுகிறீர்கள். ஆனால் நாங்கள் தெரிந்து வழிபடுகிறோம். யூதரிடமிருந்தே மீட்பு வருகிறது.

**யோவா 4:23** காலம் வருகிறது ஏன், வந்தேவிட்டது! அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர்.

**யோவா 4:24** கடவுள் உருவமற்றவர். அவரை வழிபடுவோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபட வேண்டும்" என்றார்.

**யோவா 4:25** அப்பெண் அவரிடம், "கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார் என எனக்குத் தெரியும். அவர் வரும்போது அனைத்தையும் எங்களுக்கு அறிவிப்பார்" என்றார்.

**யோவா 4:26** இயேசு அவரிடம், "உம்மோடு பேசும் நானே அவர்" என்றார்.

**யோவா 4:27** அந்நேரத்தில் இயேசுவின் சீடர் திரும்பி வந்தனர். பெண் ஒருவரிடம் அவர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் வியப்புற்றனர். எனினும் "என்ன செய்ய வேண்டும்?" என்றோ, "அவரோடு என்ன பேசுகிறீர்?" என்றோ எவரும் கேட்கவில்லை.

**யோவா 4:28** அப்பெண் தம் குடத்தை விட்டுவிட்டு ஊருக்குள் சென்று மக்களிடம்,

**யோவா 4:29** "நான் செய்த எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரை வந்து பாருங்கள். அவர் மெசியாவாக இருப்பாரோ!" என்றார்.

**யோவா 4:30** அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு இயேசுவிடம் வந்தார்கள்.

**யோவா 4:31** அதற்கிடையில் சீடர், "ரபி, உண்ணும்" என்று வேண்டினர்.

**யோவா 4:32** இயேசு அவர்களிடம், "நான் உண்பதற்குரிய உணவு ஒன்று உண்டு. அது உங்களுக்குத் தெரியாது" என்றார்.

**யோவா 4:33** "யாராவது அவருக்கு உணவு கொடுத்திருப்பார்களோ" என்று சீடர்கள் தங்களிடையே பேசிக்கொண்டார்கள்.

**யோவா 4:34** இயேசு அவர்களிடம், "என்னை அனுப்பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த வேலையைச் செய்து முடிப்பதுமே என் உணவு.

**யோவா 4:35** "நான்கு மாதங்களுக்குப் பின்தான் அறுவடை" என்னும் கூற்று உங்களிடையே உண்டே! நிமிர்ந்து வயல்வெளிகளைப் பாருங்கள். பயிர் முற்றி அறுவடைக்குத் தயாராய் உள்ளது.

**யோவா 4:36** அறுப்பவர் கூலி பெறுகிறார் நிலைவாழ்வு பெறுவதற்காக மக்களைக் கூட்டிச் சேர்க்கிறார். இவ்வாறு விதைப்பவரும் அறுப்பவரும் ஒருமிக்க மகிழ்ச்சியடைகின்றனர்.

**யோவா 4:37** நீங்கள் உழைத்துப் பயிரிடாததை அறுவடை செய்ய நான் உங்களை அனுப்பினேன். மற்றவர்கள் உழைத்தார்கள் ஆனால் நீங்கள் அந்த உழைப்பின் பயனை அடைந்தீர்கள்.

**யோவா 4:38** இவ்வாறு "விதைப்பவர் ஒருவர் அறுவடை செய்பவர் வேறு ஒருவர்" என்னும் கூற்று உண்மையாயிற்று" என்றார்.

**யோவா 4:39** "நான் செய்தவை அனைத்தையும் என்னிடம் சொன்னார்" என்று சான்று பகர்ந்த பெண்ணின் வார்த்தையை முன்னிட்டு அவ்வூரிலுள்ள சமாரியர் பலர் இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.

**யோவா 4:40** சமாரியர் அவரிடம் வந்தபோது அவரைத் தங்களோடு தங்குமாறு கேட்டுக்கொண்டனர். அவரும் அங்கு இரண்டு நாள் தங்கினார்.

**யோவா 4:41** அவரது வார்த்தையை முன்னிட்டு இன்னும் பலர் அவரை நம்பினர்.

**யோவா 4:42** அவர்கள் அப்பெண்ணிடம், "இப்போது உன் பேச்சைக் கேட்டு நாங்கள் நம்பவில்லை நாங்களே அவர் பேச்சைக் கேட்டோம். அவர் உண்மையிலே உலகின் மீட்பர் என அறிந்து கொண்டோம்" என்றார்கள்.

# தோழியே ஒரு நிமிடம்!!!

அன்புச் சகோதரிகளே! இன்றைய நாளில் மார்க்கெட்டில் அதிகமாக விற்பனையாகும் பொருள் என்ன தெரியுமா? அதுதான் கறுப்பு நிறச் சாயம். நீ சிறியவனாக இருக்கிறாய். உன் முடி நரை விழுந்து இருக்கிறது" என்று கேட்பவர்கள் பலர். அது நமக்கு மன அழுத்தத்தையும், வெட்கத்தையும் தருகிறது. உடனே மை எடு, பூசு! பிரச்சினை தீர்ந்ததா? அதுான் இல்லை. நாம் எவ்வாறு அகத்தை சரிபண்ணாமல், புறத்தை சரிபண்புகிறோமோ, அதுபோல் முடிக்கு சாயம் பூசுகிறோம்.

அதனால் பின் விளைவுகள், வழுக்கை புற்றுநோய், அது மட்டுமா...? இளம் வயதில் வழுக்கை விழுவதால் திருமணத் தடை, விவாகரத்து போன்றவை பெருகுகின்றன சகோதரிகளே, பெண்களாகிய நாம் குழந்தைகளுக்கு நம் நாட்டு உணவுகள், காய்கறிகள், பழங்கள் இவற்றை பழக்கப்படுத்துவோம். வாழையானது தன் கன்றுக்காக தன்னை மாய்த்துக் கொள்கிறது. பெண்களாகிய நாம் நம் குடும்பத்தின் மீது அக்கறை கொள்ளும்போது இறைவனும் நம்மை அரவணைத்துப் பாதுகாப்பார். "உன் பிள்ளைகள், பேரக்குழந்தைகள், ஒலி மரக் கன்றுகள் போல் உன்னைச் சுற்றி இருப்பார்கள் உன் மன பாரம் குறையும், மன அழுத்தம் மறையும், நரை முடி வர தாமதமாகும். மனநிறைவு கிடைக்கும். உங்கள் உள்ளம் தளராதிருக்கட்டும்" (எரே 51:46) என்ற இறைவார்த்தையை அன்னையை நோக்கிச் செபித்து கையளிப்போம்.



**உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள். ஏனென்றால் அவர் உங்கள்மேல் கவலை கொண்டுள்ளார் (1 பேதுரு 5:7)**



# இலங்கையின் புனிதரே

## வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்.

**இலங்கை ஆயர் பேரவையானது இவ்வாண்டினை புனித ஜோசப்வாஸ் ஆண்டாக பிரகடனம் செய்துள்ளது. இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படும் இப்புனிதர் இலங்கை மக்களுக்கு ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காது. இத்தகைய நிலையில் புனிதரின் பிறப்பு (21.04.2017) விழாவினை நினைவு கூர்ந்து, ஓரளவேனும் இப்புனிதரைப்பற்றி தெரிந்து கொள்வது சாலவும் சிறந்தது.**

சென்ற இதழின் 08ஆம் பக்கத் தொடர்ச்சி

### கொழும்பில் பணி

கொழும்பிலிருந்த சிங்கள கத்தோலிக்கர்களுக்கு தலைவனாக இருந்த சைமன் சொலிசே என்பவர் குருக்களுக்கு அதிக மரியாதை காட்டியதுடன் குருக்கள் தம் பணிகளை செய்வதற்கு முழுமையான ஒத்துழைப்பையும், ஒத்தாசையையும் வழங்கினான். இக்கத்தோலிக்கருடைய செல்வாக்கு கொழும்பிலே வாஸ் அடிகளாருடைய பணியை ஒல்லாந்தர் அறிந்து கொள்ள முடியாத சூழலை ஏற்படுத்தியிருந்தது. நகருக்குள்ளே ஒழிந்திருந்து நேர்மையான கத்தோலிக்கர்களுடைய வீடுகளில் தங்கியிருந்து, நகருக்குள்ளேயும் புறநகர்பகுதிகளிலும் வாழ்ந்த கத்தோலிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் பணியாற்றி, பலரை கத்தோலிக்க விசுவாசத்திற்குள் உள்வாங்கி திருச்சபை செழிப்புற வழிவகுத்தார். அவருடைய ஆன்ம பணி இரவு வேளையிலே இடம்பெற்றது. பொழுது சாய்கின்ற வேளையில் குறிப்பிட்ட கத்தோலிக்கருடைய வீட்டிலே மக்களை ஒன்று கூட்டி பொழுது புலர்வதற்கு முன்னதாக மக்களை அவர்களுடைய இருப்பிடங்களுக்கு அனுப்பி வைத்தார்.

ஒல்லாந்த சட்டப்படி மத முறையில் திருமுழுக்கு கொடுக்க வேண்டுமென அரசன் பணித்ததாக கட்டாயத்தின் பேரில் மக்கள் ஆம் என்றனர். எனவே இதனையறிந்த வாஸ் அடிகள் இவ்விதமான செயல்களில் ஈடுபடவேண்டாமென மக்களை தெளிவுபடுத்தினார். வாஸ் அடிகள் பலதடவை கொழும்பை தரிசித்து, அதிக எண்ணிக்கையிலான கத்தோலிக்கர்களைக் கொண்ட கிராமங்களை தரிசித்து தன் மறைப்பணியை ஆற்றினார்.

### நீர்கொழும்பில் பணி

ஒல்லாந்தர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான கலாபனைகள் மத்தியிலும் அடிகளாருடைய நீர்கொழும்பு தரிசிப்பு பற்றிய செய்தி கத்தோலிக்க விசுவாசத்தில் வாழ்ந்து வந்த பெரும் எண்ணிக்கையான கத்தோலிக்கர்களுக்கு கிடைத்தது. நீர்கொழும்பில் பற்பல பணியாற்றிய வாஸ் அடிகள் குறிப்பாக கத்தோலிக்கர் மத்தியில் மறையைப் பரப்புவதும், கத்தோலிக்க மறையிலிருந்து ஒருவரை இணைப்பதற்கு அடிகளாருக்கு கிடைத்த எந்தச் சந்தர்ப்பத்தையும் இவர் ஒருபோதும் தவறவிடவில்லை. இங்கு பணியாற்றிய போது இளம் குருக்களை அழைத்து வந்து மறையைப் பற்றிய விளக்கம் பெற ஏற்பாடு செய்தார். வாஸ் அடிகள் இங்கு வாழ்ந்த மக்களுக்கு மறையறிவு தொடர்பான போதனைகளை நிறைவேற்றினார். இவர் எடுத்துக்காட்டான வாழ்க்கை வாழ்ந்து கிரமமாக ஆலய வழிபாடுகளிலும் பங்கு கொண்டார். அத்தோடு இங்கு மக்கள் வாஸ் அடிகளாரை சந்தித்து தமது ஆன்மீக போதனைகளை நிறைவேற்றிக் கொண்டு வந்தபோது அவரும் மக்களுக்கு தேவையான அனைத்து ஆன்மீக காரியங்களையும் நிறைவேற்றிக் கொடுத்தார். அத்தோடு இணைந்து நோயாளர் பராமரிப்பு, நற்கருணை வழங்கல், அருளடையாளங்களை நிறைவேற்றல், மறையை போதித்தல் போன்ற பணிகளையும் தொடர்ச்சியாக இம்மக்களிடையே ஆற்றினார்.

### அடிகளாரின் ஆன்மீக வாழ்வு முறை

வாஸ் அடிகள் ஒழுங்கு பிரமாணம் தவறாத நேர்மையான மனிதர். தேவை ஏற்படும் போது வழக்கத்தை மாற்றுவதற்கு அன்றேல் இளைப்பாற்றிக்குச் சிறிதளவு கவனமே செலுத்துவார். அவர் தனது வாழ்வின் இறுதி வருடங்களில் கூட முன்னர் போல தனது ஒழுங்குகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தார். அவர் தனது வாழ்வு முழுவதும் ஏழைகளை அன்பு செய்தார். தானே ஏழையைப் போன்று உடையணிந்து ஏழைகளின் இல்லங்களை ஒத்த இல்லங்களில் வாழ்ந்து, அவர்களுடைய உணவைப் போன்ற உணவை உண்பதில் திருப்தி கண்டார். நாளாந்தம் திருப்பலி முடிந்தவுடன் திருப்பலிக்கு வந்திருந்த அனைவருக்கும் ஒரு மனிதனின் உணவுக்கு போதுமான அரிசியை கொடுத்தார். இவ்வாறு ஏழ்மையின் மனிதராக வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரியாக திகழ்ந்தார்.

கண்டியில் அவர்களது இல்லத்தில் ஆலயத் திருப்பீடத்திற்கு அயலில் சிறியதும் குறைந்த வசதிகளைக் கொண்டதுமான ஒரு அறையை தனக்கு பொருத்தமானது எனக் கூறிப் பெற்றுக் கொண்டார். எனினும் ஏனைய குருக்களுக்குச் சிறந்த வசதிகளைக் கொண்ட அறைகளைக் கண்டியிலும், புத்தளத்திலும் அமைத்துக் கொடுத்தார். இவரின் உடைகளையும், உடைமைகளையும் பொறுத்த மட்டில் உண்மையான தேவைக்கு போதுமானவைகளை மட்டுமே இவரிடம் இருந்தது. மேலதிகமான அங்கிகளையும், உடைமைகளையும் வைத்திருக்கவில்லை. தன் உடைமைகளை எல்லாம் ஏழைகளுக்கு கொடுத்தார். இரவில் சிறிது வேளை உறங்கி மிகுதி நேரத்தில் சிங்களம் அல்லது தமிழ் ஆக்கங்களை வாசிப்பார். தனது பயணங்களின் போது செபமாலை, மன்றாட்டு மாலையை செபித்துக் கொண்டே செல்வார்.

இவ்வாறு தன் வாழ்க்கை முறையினால் மக்களை மட்டுமே சக குருக்களின் கவனத்தையும், நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டார். கண்டி இராசதாணியில் கைதியாக இருந்தபோது கூட இவரின் தாழ்மையும், செபவாழ்வும் கண்டி அரசனின் மனமாற்றத்திற்கும், வாஸ் அடிகளின் விடுதலைக்கும் காரணமாக அமைந்தது. இவ்வாறு சிறப்பான பணிகளை செய்து வந்த வாஸ் அடிகள் யார் மனதும் புண்படா வண்ணம் தனக்கு தேவையானதை தானே நிறைவேற்றிக் கொண்டு முழுமையாக ஒரு ஏழையை போல வாழ்ந்தார். இவரது பிரமாணிக்கமான யோனை தனது சொந்தக்காரன் போல் நடத்தினார். தனது சகோதரன் யோண் வாஸ் என்று தனது குடும்பப் பெயரைக் கொண்டே அழைப்பார். இவ்வாறாக மிகவும் எளிமையான வாழ்க்கையினை வாழ்ந்தவர் தான் வாஸ் அடிகள். செல்வந்த மிக்க பிரபுக் குடும்பத்தில் பிறந்து, இலங்கை மக்களின் பரிதாப நிலையை கண்ணுற்று இலங்கைக்கு பணி செய்ய வேண்டுமென்று எண்ணங்கொண்டு இலங்கைக்கு வந்து ஓயாது பணியாற்றினார். இறைவனின் திட்டம் பிறர் வாயிலாகவும் செயற்படும் என்பதை அறிந்திருந்தபடியால் பிறரின் கருத்துக்களுக்கு செவிகொடுப்பார். எனினும் முழுமையான இறைத்திட்டத்திற்கு தன் வாழ்வை அர்ப்பணித்த வாஸ் அடிகள் இறைவனின் திட்டப்படியே அனைத்தையும் தன் வாழ்வாக மாற்றினார்.


### வாஸ் அடிகளின் மரணம்

வாஸ் அடிகள் தனது முடிவு அண்மித்து விட்டது என்பதை அறிந்திருந்தார். எனவே தனது மறைபரப்பின் கடமைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு தனது வாழ்வின் முடிவை எதிர்கொள்ள முன்கூட்டியே தம்மை தயார்படுத்த ஆர்வமாய் இருந்தார். எப்படி இருப்பினும் அவரோடு உடனிருந்த கொன்சால்வேஸ் அடிகளும், வாஸ் அடிகளாருக்கு மருத்துவம் செய்த வைத்தியர்களும் வாஸ் அடிகளாரின் மரணம் உடனடியாக ஏற்படும் என எதிர்பார்க்கவில்லை. உண்மையில் வாஸ் அடிகள் பலவீனமாயும், இளைத்துப்போயும், பெருந்துன்பங்களை அனுபவித்தவராகவும் காணப்பட்டார். ஆனாலும் அவரது முடிவு நெருங்கி வருவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. வாஸ் அடிகள் தாம் மிக விரைவாக இறந்து போகலாம் என்று தன் மனதில் உறுதியாய் இருந்தார். மேலும் மெனசெஸ் அடிகளாருக்கு முதன்மை பதவியை ஏற்கும் படி கூறினார். தனது முடிவு நெருங்கி வருவதை உணரத் தொடங்கிய இத்தருணத்தில் ஆழ்ந்த சிந்தனையிலும், தொடர்ச்சியான செபத்திலும் ஈடுபட்டவராகவும் இருந்தார். இவர் கண்ணில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது. இது அவரது ஆன்மீக பரிசோதனையின் வெளி அடையா-ளமாகவும் தனது பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டுவதாகவும் இருந்தது. தனது கூலியாட்களுக்குரிய பொறுப்புக்களை தனது எஜமானிடம் கையளிப்பதற்கு தயாராக இருந்தவராகவே வாஸ் அடிகள் காணப்பட்டார்.

அன்றைய தினம் மதிய வேளையில் உணவின் பிற்பாடு கொழும்பிலிருந்து அவரது நோயைப்பற்றிக் கேள்விப்பட்டு வந்திருந்த சில கத்தோலிக்க விசுவாசிகளை சந்தித்தார். அவர்களுக்கு தந்தைக்குரிய பாசத்துடன் அறிவுரை வழங்கினார். அவர்களின் வேண்டுகோளிற்கிணங்க செபமாலையும், ஆசீ நீரையும் தன் கைகளால் கொடுத்தார். அவர்கள் அவரிடமிருந்து விடைபெறும்போது, தமக்காக செபிக்கும்படி கேட்டுக் கொண்டார். தனது ஆன்மீகப் பரிசோதனையை முடித்த பிற்பாடு அங்கே இருந்த இரண்டு குருக்களையும் அழைத்து நோயில்பூசுதல் அருட்சாதனத்தை தனக்கு வழங்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். கொன்சால்வேஸ் அடிகள் தயங்கினார். ஏனெனில் உடனடியாக சாவு அபாயம் இல்லை என்று அவர் கருதினார். இந்த நாள் முழுவதும் வாஸ் அடிகள் சாதாரண நிலையில் தான் இருந்தார். எனினும் வாஸ் அடிகள் கெஞ்சிக் கேட்டதிற்கிணங்க கொன்சால்வேஸ் அடிகளார் அவருக்கு நோயில்பூசுதல் அருட்சாதனத்தை வழங்கினார். பின் வாஸ் அடிகள் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு சிங்கள மொழியில் கூறியது “ஒருவன் தனது வாழ்நாள் முழுவதும் செய்யாமல் அலட்சியப்படுத்தியவைகளை தனது மரணப் படுக்கையில் நிறைவேற்றுவது சுலபமானதல்ல” குருக்களே வாஸ் அடிகள் கடவுள் முன்னிலையில் செல்லும்போது தம்மை நினைவு கூறும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு வாஸ் அடிகள் உணர்வுப்பூர்வமாக “அப்படி ஒன்றும் சொல்லாதீர்கள். நான் ஒன்றும் இல்லாதவன். என்னால் செய்யக்கூடியதும் ஒன்றும் இல்லை. கடவுள் தரும் ஏவுதலுக்கு ஏற்ப வாழ்க்கை நடத்துங்கள். நானும் ஏனைய குருக்களின் அறிவுரைகளைக் கேட்ட பிறகுதான் தவறுகளைத் திருத்திக் கொண்டேன்” இந்த உரையாடல் அவருடைய உடலில் சிறிது பாதிப்பை ஏற்படுத்தியதால் திடீரென கடும் காய்ச்சல் ஏற்பட்டது. எனினும் அப்போது தனக்காக குருக்கள் விழித்திருக்க வேண்டாம் என்றும் காய்ச்சல் நீங்கியதும் நிச்சயமாக நான் இறப்பேன் என்றும் கூறினார். தனியாக இருந்து பல உரையாடல்களை கடவுளுடன் செய்து கொண்டார்.

பின்னர் மெழுகுதிரியைப் பிடித்துக் கொண்டு மரணத்தருவாயில் இருப்போருக்காக செபிக்கின்ற செபத்தை செபிக்கும்படி கேட்டுக் கொண்டார். மெழுகுவர்த்தியை பிடித்துக் கொண்டு திருச்சிலுவையை உற்று நோக்கி கொண்டு அசைவுற்றவராக நீண்டநேரம் இருந்தார். காய்ச்சல் முற்றுமுழுவதுமாக நீங்கியது. இதுவே அவரது இறப்பின் அறிகுறி என உணர்ந்த குருக்கள் அவரது கைகளில் பற்ற வைத்த மெழுகுதிரியை கொடுத்தார்கள். அதைப்பெற்றுக்கொண்டு மேலதிக அசைவோ, நடுக்கமோ வேதனையின் அறிகுறியோ இன்றி விண்ணகத்தை நோக்கி கண்களை உயர்த்தி இயேசுவின் திருப்பெயரை தெளிவாக உச்சரித்தபடி தனது இறுதி மூச்சை அமைதியான தோற்றத்தில் தனது ஆன்மாவைக் கையளித்தார். அப்பொழுது நள்ளிரவு ஆகிக் கொண்டு இருந்தது. அவர் மரணித்த நாள் ஒரு வெள்ளிக்கிழமை. தமது அறுபதாவது வயதில், முப்பத்தைந்து ஆண்டுகள் குருத்துவப் பணி நிறைவில், இருபத்திநான்கு வருட இலங்கை மறைத்தூதுப்பணியின் பிற்பாடு 16 தை மாதம் 1711ல் தனது இவ்வுலக வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டார். வாஸ் அடிகளின் இறப்பின் மூன்றாம் நாள் 19 தை திங்கட்கிழமை

இலங்கையின் புனிதரே ☞15




பரிசுத்த பூமிக்கு யாத்திரையினை மேற்கொள்ளும் உங்களுக்கு

**விசேட ரோமிங் சலுகைகள்**

**வீட்டிற்கு அழைக்க 5 நிமிட அழைப்பு முற்றிலும் இலவசம்**

நீங்கள் விஜயம் செய்யும் நாட்டிற்கு சென்றடைந்தவுடன் SMS மூலமாக இந்த தகவலானது உங்களுக்கு தெரிவிக்கப்படும். உங்களுக்கு SMS கிடைக்கப்பெற்று 48 மணித்தியாலங்களுக்குள், முதல் அழைப்பினை மேற்கொள்ளும்போது மட்டுமே இந்த சலுகையானது செல்லுபடியாகும்.

இலவசமாக வழங்கப்படும் 5 நிமிடங்கள் நிறைவடைந்தவுடன் சாதாரண அழைப்பு கட்டணங்கள் அறவிடப்படும்.

- இந்த சலுகையானது இஸ்ரேல், ஜோர்தான் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு ஏப்ரல் 01 முதல் 31 வரை மட்டுமே செல்லுப்படியாகும்.
- மேலதிக விரபங்களை பெற்றுக்கொள்ள Dialog ரோமிங் துரித இலக்கமான +94 777 999 777க்கு அழையுங்கள் (கட்டணம் அறவிப்படும்)

வரிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2017

Dialog

an axiata company www.dialog.lk எதிர்காலம் இன்றே.

# தற்போது எமது புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்...

COLOMBO CATHOLIC BOOKSHOP GIFT VOUCHERS



உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு Voucher ஒன்றினை பரிசளித்து அவர்களின் விருப்பத்திற்கு இடமளியுங்கள்

ரூபா 500/- 1000/- 2000/- Voucherர்களை தற்போது பெற்றுக்கொள்ளலாம்

Everything Catholic Under One Roof

கொழும்பு கத்தோலிக்க புத்தக நிலையம், இல. 02 ஞானார்த்த பிரதீபய மாவத்தை - கொழும்பு - 08
தொ.பே +94 11 4373869 colombocatholicbookshop@gmail.com




பீடங்கள்

Everything Catholic Under One Roof

colombocatholicbookshop@gmail.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்